1120

1454

20 FEB 1940

BHARATI

NEW METHOD READER

FOURTH READER

P. N. CHIDAMBARA MUDALIAR BROS.,
MADRAS. MADURA. TINNEVELLY Jn.

பாரதி

புதுமுறை வாசகம்

நான்காம் பாடம்

1120/1940/I

நூலாசிரியர் :
அ. கி. பரந்தாமனர்,
தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுற் கலாசாலை,
வேப்பேரி, சென்னை.

1460

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] 1939 [விலை அணா 6.

முகவுரை

நமது நாட்டுச் சிறுவர்கள் எளிதில் கற்குமாறு அரசாங்க பாடத் திட்டத்தைத் தழுவிப் புதுமுறையில் இவ்வாசக வரிசை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இனிய கதைகளும் அறிவுதரும் பலவகைப் பாடங்களும் புது வகையான பாட்டுகளும் இவ் வரிசை நூல்களில் இடம் பெற்றுள்ளன. மேல் வகுப்பில் வரும்போது மாணவர்களிடம் காணும் குறைகளை மனத்தில் வைத்துக்கொண்டு அக்குறைகளை நீக்குதற்கு உரிய பயிற்சிகளை இங்குக் கொடுத்துள்ளேன். பயிற்சிகள் பேராசைப் பயிற்சிகளாயில்லாமல் கூடியமட்டும் மாணவ மாணவி நிலைக்கும் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் நிலைக்கும் ஏற்றனவாய் இருக்கும். சிறுவர்கள் இவ்வரிசை நூல்களைப் பயின்றால் அவர்கள் தமிழ்மேல் அன்பும் தமிழறிவும் பொது அறிவும் பெறுவார்கள் என்பது திண்ணம்.

இந்நூல் வெளிவருதற்கு வேண்டிய உதவியளித்த பிரம சமாஜப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. T. ஞான சுந்தரனார் அவர்களுக்கும், வித்வான் திரு. S. சங்கரலிங்க முதலியார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

பள்ளிக்கூட அதிகாரிகளும் ஆசிரியர்களும் இவ் வரிசை நூல்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழகம்
முத்துமுதலி தெரு,
புரசை, சென்னை.
12-11-1939.

இங்ஙனம்,
குழந்தைகளின் தொண்டன்,
அ. கி. பரந்தாமன்.

பொருளடக்கம்

பாடம் எண்		பக்கம் எண்
1.	எங்கள் நாடு	1
2.	நமது தமிழ் மொழி	4
3.	நொண்டிப் பிச்சைக்காரன்	10
4.	பூண்டி அரங்கநாத முதலியார்	14
5.	உல்லாசப் பிரயாணம்	20
6.	அல்லி இராணி	27
7.	வால்கள்	33
8.	மகாத்மா காந்தி	38
9.	பருத்தி	44
10.	புத்திசாலிப் பையன்	50
11.	நவராத்திரி விழா	55
12.	பந்தய விளையாட்டுக்கள்	60
13.	கந்தசாமியும் நாயும்	66
14.	திரிசிரபுரம்	69
15.	கடிதங்கள்	75
16.	பீமனும் பகாசூரனும்	79
17.	மண்ணெண்ணெய்	84
18.	சைவசமய குரவர்	90
19.	தபாற்சாவடி	96
20.	அதிவீரராம பாண்டியர்	102
21.	பேசும் படம்	107
22.	கோழியும் வாத்தும்	113
23.	தமிழ்ச் சங்க ஆண்டுவிழா	116
24.	மெய்யப்பன்	121
25.	எலும்புருக்கி நோய்	125
26.	நாட்டுப்பற்று (நாடகம்)	131
	செய்யுள்	138-144

1. எங்கள் நாடு

இமயமலை	செந்நெல்	தேன்
கங்கை	ஆரியநாடு	கனி
இங்கிதம்	பொலிந்து	பேணி
மாண்பு	ஓதுவோம்	வந்துற்றிடும்
மலிந்த	அஞ்சோம்	புத்தர்பிரான்
நன்னாடு	திருநாடு	உபநிட நூல்கள்
பொன்னாடு	இழிதொழில்	பொன்னொளிர்
தன்னலம்	நலந்திகழ்	நாரதகானம்
கன்னல்	பாரதநாடு	பூரணஞானம்
கதலி	மாரதவீரர்	நீர்க்கங்கை

1. மன்னும் இமயமலை யெங்கள் மலையே
   மாநில மீததுபோற் பிறிதி லையே
   இன்னறு நீர்க் கங்கை யாறெங்களாறே
   இங்கிதன் மர்ண்பிற் கெதிரெது வேறே

பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
  பார்மிசை யேதொரு நூலிது போலே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
  போற்றுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (மன்)

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
  மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கானம் நலந்திகழ் நாடு
  நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
  புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே
  பாடுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (மன்)

3. இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
  ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
  தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியும்இன் பாலும்
  கதலியும் செந்நெல்லும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
  ஓதுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (மன்)

கேள்விகள்

1. பாரதநாடு எதில் சிறந்து விளங்கி யிருந்தன ?

2. எதற்கு அஞ்சோம் என்று பாரதியார் கூறுகிறார் ?

3. ஆரிய நாடு எத்தன்மையை யுடையது ?

பயிற்சி

1. மன்னும், கானம், இன்னல்—இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தி லமைத்து எழுது.

2. ஞானம், பலர்—இவைகளுக்கு எதிர்ப்பதங்களைக் கூறு.

3. நூல்—இருபொருள் கூறு.

4. முதற் செய்யுளிலுள்ள அஃறிணைச் சொற்களை எடுத்து எழுது.

5. போற்றுவோம் என்பது என்ன வினைமுற்று?

6. எங்கள் என்பதற்கு ஒருமைப் பதம் என்ன?



2. நமது தமிழ் மொழி

திருப்பதி
கன்னியாகுமரி
மலையாளநாடு
சந்தேகம்
உதாரணம்
இயற்றமிழ்
இசைத்தமிழ்
நாடகத்தமிழ்
புராதனதமிழ்
இலக்கணநூல்
நீதிநூல்
துதிநூல்
சமயநூல்
அறிந்தமொழி
சீவகசிந்தாமணி
கம்பராமாயணம்

தொல்காப்பியம்
நன்னூல்
திருக்குறள்
நாலடியார்
கொன்றைவேந்
தன்
வாக்குண்டாம்
தேவாரம்
நாலாயிரப்
பிரபந்தம்
இராமாயண
நாடகம்
இலக்கணம்
சிவஞானசித்
தியார்
தேவாரம்

சுப்பிரமணிய
பாரதியார்
இலக்கியம்
இராகம்
தாளம்
திருப்புகழ்
உண்டாக்க
திருமந்திரம்
நாட்டுமொழி
வரலாறு
அமெரிக்க
ஸ்பானிஷ் மொழி
ஸ்காச் மொழி
ஆனந்தம்
உயர்திணை
மௌனம்

வடக்கே திருப்பதியும் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே மலையாள நாடும் கிழக்கே வங்காளக் குடாக் கடலும் ஆகிய இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட நாடே தமிழ்நாடு ஆகும். இந்நாட்டிற்குத் தமிழகம் என்ற பெயர் முற்காலத்தில் வழங்கிவந்தது. இந்த நாட்டில் உள்ள 2 கோடி ஜனங்களாகிய நம்முடைய தமிழருக்குச் சொந்தமாயிருக்கும் மொழியே தமிழ் எனப்படும். இதனல் தமிழ்மொழி நமது தாய்மொழி என்று விளங்குகிறதன்றோ ?

நமது தாய்மொழியாகிய இத்தமிழ்மொழி மிகவும் இனிமையானது. தமிழ் என்னும் சொல்லுக்கே இனிமை என்பது பொருள். தமிழ்ப் பாட்டுகள் கேட்கக் கேட்க எவ்வளவு இனிமையாக இருக்கின்றன! சுப்பிரமணிய பாரதியார் என்பவர் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்" என்று பாடியுள்ளார். இம்மொழி இனிமையானது மாத்திரம் அன்று; மிகவும் பழைமையானது. இத்தமிழ்மொழியில் குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நூல்கள் உண்டு. ஆகையால் நமது மொழி மிகவும் பழைமையானது என்று சந்தேகம் இல்லாமல் சொல்லலாம். இன்னும் இதில் உள்ள நூல்களோ மிகவும் உயர்ந்தவை. திருக்குறள் என்னும் ஒரு நூலே இதற்குப் போதுமான உதாரணமாகும்.

தமிழில் மூன்றுவகை உண்டு. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன. பாட்டும் வசனமும் இயற்றமிழாகும். இதில் இலக்கணமும் இலக்கியமும் அடங்கும். இராகத்தோடும் தாளத்தோடும் பாடும் பாட்டுகள் இசைத்தமிழ் எனப்படும். தேவாரம், திருப்புகழ் முதலியவைகளை இசைத்தமிழுக்கு உதாரணமாய்ச் சொல்லலாம். நாடகத்தமிழ் என்பது இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்து நடிப்பதற்கு ஏற்றதாய் இருக்கும் நூல். இராமாயண நாடகம் முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இன்னும், அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் கடவுள் பக்தியை உண்டாக்கக் கூடிய ஆயிரக்கணக்கான செய்யுள்களும் நல்லொழுக்கத்தைத் தரக்கூடிய நீதிச் செய்யுள்களும் உண்டு; புத்தியைக் கூர்மையாக்கவல்ல இலக்கண நூல்களும் நமது தமிழ் நாட்டின் பழைய சரித்திரத்தைத் தெரிவிக்கக்கூடிய புராதன தமிழ் நூல்களும் இருக்கின்றன. ஓய்வு நேரத்தில் கேட்டால் காதுக்கும் மனத்துக்கும் மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய இனிய பாட்டுக்களும் இம் மொழியில் இல்லாமல் இல்லை.

தமிழில் இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும், நீதி நூல்களும், துதி நூல்களும், சமய நூல்களும் ஏராளமாக இருக்கின்றன. சீவகசிந்தாமணி கம்பராமாயணம் போன்றவைகள் இலக்கிய நூல்

களாகும். தொல்காப்பியம், நன்னூல்போன்ற நூல்கள் இலக்கண நூல்களாகும். திருக்குறள், நாலடியார் போன்றவை நீதி நூல்களாகும். ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் முதலிய நூல்கள் சிறுவருக்கேற்ற நீதி நூல்களாகும். தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் போன்றவை துதி நூல்களாகும். சிவஞானசித்தியார், திருமந்திரம் போன்றவை சமய நூல்களாகும்.

ஆகையால், நீங்கள் தமிழைப் படித்தால் உங்களுக்குக் கடவுள் பக்தியும் நல்லொழுக்கமும் புத்திக் கூர்மையும் உண்டாகும்; தமிழ் நாட்டின்மேல் அன்பும் ஏற்படும். நீங்கள் உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை இன்பமாகக் கழிக்கலாம். இன்னும் சில ஆண்டுகளுக்குள் நமது மொழி இத்தமிழ் நாட்டில் முக்கியமான மொழியாய்விடும். அப்பொழுது தமிழ்க் கல்வி, பொருளையும் புகழையும் ஒருவனுக்குத் தேடிக் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இவ்வளவு நன்மைகளைத் தரக்கூடிய மொழியை நீங்கள் நன்றாய்ப் படிக்கவேண்டும். உங்களுக்குத் தமிழ்மேல் அன்பு இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஒரு கிளிக்குத் தன் நாட்டுமொழியின் மேல் அளவுகடந்த அன்பு இருந்ததைப்பற்றி ஒரு வரலாறு கூறுகிறேன்; கேளுங்கள். இந்த விஷயம் உண்மையானது; கட்டுக்கதை அன்று. பல ஆண்டு

களுக்குமுன் கிளி ஒன்று அமெரிக்க ஸ்பானிஷ் தீவிலிருந்து தப்பி ஸ்காட்லண்டு என்ற தேசத்துக்கு அருகிலுள்ள "முல்லா" எனப்படும் தீவுக்குப்போய் விட்டது. அது ஸ்பானிஷ் தீவிலிருந்தபொழுது அதற்கு ஸ்பானிஷ் மொழியில் சில வார்த்தைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன. முல்லா என்ற தீவில் வந்தபோது அதைப் பிடித்து வளர்த்தவர் 'ஸ்காச்' மொழியைக் கற்றுக்கொடுத்தார். அது இங்கே கிழப் பருவமடைந்து கண் குருடாகிச் சாகுந் தருணத்தில் இருந்தபோது ஸ்பானிஷ் தீவிலிருந்து வந்தவன் ஒருவன் தற்செயலாய் அதைப் பார்த்து அதன் சொந்த நாட்டுப் பாஷையாகிய ஸ்பானிஷ் மொழியில் பேசினன். அந்த வார்த்தைகள் அதற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தன. ஆனந்தம் அதனிடத்தில் ததும்பியது. அது உடனே வெகு உற்சாகத்துடன் கற்றிருந்த ஸ்பானிஷ் வார்த்தைகளைப் பதிலாகக் கூறி விட்டு இறக்கையை அடித்துக்கொண்டு முகமலர்ச்சி யுடன் ஆனந்தமாக உயிர்விட்டதாம். ஆஹா! என்ன பாஷாபிமானம்! அஃறிணையாகிய கிளிக்கு இவ் வளவு பாஷாபிமானம் இருந்தால், உயர்திணையாகிய உங்களுக்கு எவ்வளவு மொழியன்பு இருக்கவேண்டும்? ஆகையால், பிள்ளைகளே! நீங்களும் பாஷாபிமானம் உடையவர்களாய் உங்கள் தாய்மொழியாகிய தமிழைக் கற்பீர்களாக!

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
2. தமிழின் வகைகள் என்ன?
3. தமிழிலுள்ள சிறந்த நூல்களுள் நான்கை எழுது.
4. தமிழைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் என்ன?
5. கிளி எப்படித் தன் பாஷாபிமானத்தை விளக்கிற்று?

பயிற்சி

1. எல்லை, ஓய்வுநேரம், அளவுகடந்த, ததும்பியது, தற்செயலாய்—இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. பாட்டு, சந்தேகம்—இவற்றிற்குரிய வேறு பதங்கள் என்ன?
3. நீதி, உண்டு—இவைகளுக்கு எதிர்ப்பதம் வரை.
4. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—
   1. நமது தாய் மொழியாகிய ——————— மொழி மிகவும் இனிமையானது.
   2. தமிழில் ——————— வகை உண்டு.
   3. ——————— அதனிடத்தில் ததும்பியது.
   4. இந்தப் பாடத்திலிருந்து ஐந்துபெயர்ச் சொற்களை எடுத்தெழுது.



3. நொண்டிப் பிச்சைக்காரன்

இரக்கம்	காலைக்கடன்	வைத்தாற்போல்
பட்டாஸ்	பிச்சைக்காரன்	குருடர்
பணக்காரர்	இரக்கமான	கிழவர்
சௌந்தரி	குரல்	தீட்டு
மயக்கமாய்	விலகச்சொல்லி	பேசிக்கொண்டார்

சாரதாவுக்கு எட்டு வயது இருக்கும். அவள் நல்ல பழக்கமுடையவள். எப்போதும் அவள் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாடங்களைப் படிப்பாள். சாரதா பணக்காரக் குடும்

பத்தில் பிறந்தவள். என்றாலும் அவளுக்கு ஏழை கள் மேல் மிகுந்த இரக்கம் உண்டு. குருடர், கிழவர் இவர்களில் யார் வந்து பிச்சை கேட்டாலும் அவள் உடனே பிச்சை கொண்டுவந்து மரியாதை யாய்ப் போடுவாள்.

ஒரு நாள் சாரதாவும் அவள் தாயாரும் கோயி லுக்குப் போனார்கள். கோயிலுக்கு அருகில் நொண் டிப் பிச்சைக்காரன் ஒருவன் களைத்து மயக்கமாய் விழுந்து கிடந்தான். பல பேர் தேங்காய் பழங்களை அழகான கூடைகளில் வைத்துக்கொண்டு கோயி லுக்குள் வேகமாய்ப் போய்க்கொண் டிருந்தார்கள். அன்றைய தினம் கார்த்திகை தீபம். கோயிலுக்கு வந்த சாரதாவும் அவள் தாயாரும் களைத்து விழுந்து கிடந்த நொண்டியைப் பார்த்தார்கள். இருவரும் ஒன்றும் செய்யாமல் தொட்டால் தீட்டு வந்துவிடும் என்று கோயிலுக்குப் போய்விட்டார்கள்.

கோயில் படிக்கட்டுமேல் சாரதாவும் அவள் தாயார் சௌந்தரியம்மாளும் காலை வைத்தார்கள். அவர் கள் இருவரும் சிறிதுநேரம் மௌனமா யிருந்தார் கள். சாரதா "அம்மா, அங்கே நொண்டி விழுந்து கிடக்கிறானே! ஒன்றும் செய்யாமல் வந்துவிட்டோமே! அம்மா! நாம் போய் உதவி செய்யக்கூடாதா?" என்று இரக்கமான குரலில் கேட்டாள். சௌந்தரியம் மாளும் உடனே திரும்பி அந்தப் பிச்சைக்காரனிடம் வந்தாள். சாரதா "அம்மா! என்னிடத்தில் பட்டாஸ்

வாங்க அப்பா கொடுத்த அரை ரூபாய் இருக்கிறது. அதை இந்த ஆளுக்குக் கொடுத்துவிடு, அம்மா'' என்றாள். சௌந்தரியம்மாளும் கூட்டமாய் இருந்தவர்களை விலகச் சொல்லி மயக்கமாய் விழுந்துகிடந்த நொண்டிப் பிச்சைக்காரனுக்குச் சோடா வாங்கிக் கொடுத்தாள். சோடா குடித்ததும் நொண்டி மூர்ச்சை தெளிந்து எழுந்தான். சாரதா தன் கையிலிருந்த அரை ரூபாயைக் கொடுத்தாள். அவன் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டான்.

அன்று சாரதா பட்டாஸ் வாங்காமலே வீடு திரும்பினாள். சௌந்தரியம்மாளுக்கு மார்பிலிருந்து கருங்கல் ஒன்று கீழே இறக்கி வைக்கப்பட்டது போலிருந்ததாம்.

கடவுள் அன்று இரவு இருவர் கனவிலும் தோன்றி "அம்மா! சுகமாக வாழ்வீர்களாக'' என்று சொன்னதாகச் சாரதாவும் அவள் அம்மாவும் பேசிக்கொண்டார்கள்.

கேள்விகள்

1. சாரதா எப்படிப் பட்டவள்?
2. சாரதா நொண்டிப் பிச்சைக்காரனிடம் எவ்வாறு தன் அன்பைக் காட்டினாள்?
3. சாரதாவும் அவள் தாயாரும் மறுநாள் என்ன பேசிக்கொண்டார்கள்?

பயிற்சி

1. மரியாதையாய், அருகில், இரக்கமான, சுகமாக — இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தில் அமைத்து எழுது.

2. நல்ல, பணக்கார, தாய், பழம் — இவற்றிற்குரிய எதிர் வார்த்தைகளை எழுது.

3. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. அவள் —— பழக்க முடையவள்.

2. சாரதா தன் கையில் —— அரை ரூபாயைக் கொடுத்தாள்.

3. அன்று நன்குணம் —— சாரதா வீடு திரும்பினாள்.

4. —— பிச்சைக்காரன் வாங்கிச் சாப்பிட்டான்.

5. இப்பாடத்தில் வரும் பெண்பாற் சொற்களை எடுத்து எழுது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1940
MADRAS

4. பூண்டி அரங்கநாத முதலியார்

ஆங்கிலம்	அவிநாசி	ஷெரீப்
வேளாளர் குலம்	பச்சையப்பன்	கணிதம்
அதிகக் கீர்த்தி	இராஜதானி	அங்கத்தினர்
சம்பாத்தியம்	திருவிதாங்கூர்	தேர்ந்தெடுக்க
பெரும்பாகம்	மௌனமாய்	ராய்பகதூர்
உதவிபுரிந்தார்	சிண்டிகேட்	கள்வர்கள்

பூண்டி அரங்கநாத முதலியார் சிறந்த வேளாளர் குலத்தில் பிறந்தவர். அவர் சிறந்த கல்விமான். படிப்பினுல் அவருக்கு அதிகக் கீர்த்தி வந்தது. அவர் தம்மு

டைய சம்பாத்தியத்தில் பெரும்பாகத்தை ஏழை மாணவர்களுக்குக் கொடுத்து உதவிபுரிந்தார். அவரைப் பற்றி அறிய நீங்கள் ஆசைப்படுவீர்கள் அல்லவா?

பூண்டி அரங்கநாத முதலியார் பூண்டி சுப்பராய முதலியாருடைய குமாரர். சிறுவயதில் சுப்பராய முதலியாரே ஆங்கிலமும் கணிதமும் தமிழும் தம் மகனுக்குக் கற்பித்து வந்தார். அதனுல் அரங்கநாத முதலியார் சிறுவயதில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவில்லை.

சுப்பராய முதலியார் அவிநாசியில் வேலை பார்க்கும்போது ஒருநாளிரவு சுப்பராய முதலியார் வீட்டுக்குத் திருடர் வந்தனர். சுப்பராய முதலியார் அரங்கநாத முதலியாரைத் திருடர்கள் கொன்று விடுவார்களெனப் பயந்து மறைத்துவைத்துவிட்டார். வீட்டிலுள்ளவற்றை எடுத்துக்கொண்ட கள்வர்கள் மறைத்துவைத்திருக்கும் பொருள்களைக் காட்டாது போனுல் கொன்று விடுவதாகச் சுப்பராய முதலியாரைப் பயமுறுத்தினர்கள். சுப்பராய முதலியார் அரங்கநாத முதலியாரைத் திருடருக்குக் காட்டினர். திருடரைப் பார்த்த அரங்கநாத முதலியார் தம்மை உயிரோடு விட்டுவிடும்படி திருடரைக் கெஞ்சினர். அவர்கள் அவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டுப் போயினர்.

திருடர் வந்து போனதும் சுப்பராய முதலியார் அதிகநாள் அவிநாசியில் தங்கவில்லை. அவர்

சென்னைக்கே மீண்டும் வந்துவிட்டார். சென்னைக்கு வந்தும் அரங்கநாத முதலியாரைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்காமல் வழக்கம்போல அவரே அரங்கநாத முதலியாருக்கு ஆங்கிலம், கணிதம், தமிழ் முதலிய பாடங்களைக் கற்பித்து வந்தார்.

அரங்கநாத முதலியார் 1860 - ம் வருடம் பச்சையப்பன் கலாசாலையில் எட்டாவது வகுப்பில் சேர்ந்தார். அவருடைய படிப்பின் திறமையால் அவருக்குச் சம்பள மில்லாமல் படிக்கும் வசதி கிடைத்தது. அந்தவருடம் பரீட்சையில் முதல்தரமாகத் தேறியதால் அவர் எட்டாவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பிற்கு மாற்றப்பட்டார். அவர், பத்தாவது வகுப்பில் வாசிக்கும்போது பல வகைப் போட்டிகளில் கலந்து பல பரிசுகளைப் பெற்றார். பத்தாவது வகுப்புப் பரீட்சையில் அவர் மாகாணத்திற்கே முதல்வராகத் தேறினார். அவருடைய படிப்பின் வன்மையைக் கண்டு இராஜதானிக் கல்லூரித் தலைவர் அவரைத் தம்முடைய கல்லூரியிலேயே சேர்த்துக் கொண்டார். அங்கும் அவர் சம்பளமில்லாமலேயே படித்து வந்தார்.

பின்னர் நடந்த பீ. ஏ. தேர்விலும் அரங்கநாத முதலியார் மாகாணத்திலேயே முதல்வராகத் தேறியதால், அதற்கென்று திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் ஏற்படுத்தியிருந்த பரிசைப்பெற்றார். பரீட்சையில் தேறியதும் அரங்கநாத முதலியார் இராஜதானிக் கல்

லூரியிலேயே ஆசிரியராக வேலையிலமர்ந்தார். அவ்விடம் ஆசிரியராக வேலைபார்த்து வரும்போதே எம். ஏ. பரீட்சையிலும் தேறினர்.

முதலியார் தாய்மொழியாகிய தமிழிலுள்ள இலக்கிய இலக்கணங்களிலும் ஆங்கிலத்திலும் அதிகப் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். அவர் ஆங்கிலத்தில் அழகாகச் சொற்பொழிவாற்றுவார். அவருடைய ஆங்கிலச் சொற்பொழிவைக் கேட்க ஆங்கிலேயரும் காத்திருப்பர். எம். ஏ. பரீட்சையில் தேறியதும் அவர் கும்பகோணத்திலுள்ள அரசாங்கக் கல்லூரிக்கு ஆசிரியராகச் சென்றிருந்தார்.

பின்னர் அரங்கநாத முதலியார் சென்னைச் சர்வகலா சங்கத்தின் அங்கத்தினரானர். அவர் வருஷா வருஷம் சிண்டிக்கேட்டுக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய இருமொழிப் புலமையைக் கண்ட அரசாங்கத்தார் அவரை மொழிபெயர்ப்பாளராக 1890-ம் வருடம் நியமித்தனர். அவர் 1892-ம் வருடம் சென்னைக்கு ஷெரீப் ஆனர்.

சென்னைக் கார்ப்பொரேஷனிலும் முதலியார் அங்கத்தினராக இருந்தார். அது சமயம் அவர் சென்னை வாசிகளுக்குச் செய்த நன்மைகள் பல. அவருடைய கல்வித் திறமையையும் நற்குணத்தையும் தர்ம சிந்தையையும் கண்டு வியந்து பாராட்டி அரசாங்கத்தார் அவருக்கு "ராய் பகதூர்" என்ற பட்டம் வழங்கினர்.

இவ்வாறு சிறுவயதிலிருந்தே கீர்த்தியுடன் வாழ்ந்து வந்த முதலியார் 1893-ம் வருடம் காலமானார். அவருடைய மறைவுக்காக எல்லோரும் துக்கித்தனர்.

கேள்விகள்

1. அரங்கநாத முதலியார் முதலில் யாரிடம் படித்தார்?

2. அரங்கநாத முதலியாருடைய படிப்பின் திறமையை விளக்கு.

3. அரங்கநாத முதலியாருக்கு ராய்பகதூர் என்ற பட்டம் எதற்காக வழங்கப்பட்டது?

பயிற்சி

1. விட்டுவிட்டு, வருஷா வருஷம்-இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தி லமைத்து எழுது.

2. இரவு, கீர்த்தி — இவற்றிற்குரிய எதிர் வார்த்தைகளை எழுது.

3. பட்டம் — இதற்கு இரு பொருள் கூறு.

4. இப்பாடத்திலிருந்து ஐந்து வினைச்சொற்களை எடுத்தெழுது:—

5. சேர்த்து எழுது:—

திருடனை + காட்டினர் = திருடனைக் காட்டினர்.

சடையை + பார்த்து =

பரிசுகளை	+ பெற்றார்	=
புலமையை	+ கண்ட	=
பொருளை	+ சேர்த்த	=
சொற்பொழிவை	+ கேட்க	=
தமிழை	+ படித்தார்	=
அறிவை	+ சம்பாதி	=
குழந்தையை	+ தேடின	=

கீழ்வரும் சொற்களைப் பொருள் விளங்கும்படி வாக்கியமாக அமைத்து எழுது :—

6. நற்குணத்தையும், அரசாங்கத்தார், வியந்து, ராய்பகதூர், கல்வித்திறமையையும், கண்டு, என்ற, அவருடைய, பட்டம், தர்ம சிந்தையையும், வழங்கினர், அவருக்கு.

7. மனிதன், மரம் — இவை பொருள்களைக் குறிப்பதால் பொருட் பெயர்கள் எனப்படும்.

பொருட் பெயருக்கு ஐந்து உதாரணங்கள் கொடு.



5. உல்லாசப் பிரயாணம்

மாம்பலம்
கிண்டி
மீனம்பாக்கம்
தாம்பரம்
செங்கற்பட்டு
பிராட்வே
தெப்பக்குளம்
சாலைவீதி
சிற்பிகள்
ஸ்நானம்
தரிசனம்
பாறைகள்
மின்சார வண்டி
அணிவகுத்து
கவர்னர்
மாளிகை
ஆகாய விமானம்

சிற்றுண்டி
விடுதி
திருக்கழுக்
குன்றம்
சங்கு தீர்த்தம்
கைதேர்ந்து
நரசிம்மர்
பொரியல்
வறுவல்
பச்சடி
சாம்பார்
ரசம்
தென் இந்திய
ரயில்பாதை
பரிமாறப்பட்டன
பக்கிங்காம்
கால்வாய்

கலங்கரை
விளக்கு
இராப்போசனம்
அருந்திவிட்டு
ஸ்டேஷன்
மாஸ்டர்
சென்னை பீச்சு
மோர்க்குழம்பு
அடுப்புக் கட்டி
கிறிஸ்தவக்
கல்லூரி
தியாகராஜச்
செட்டியார்
தனித் தனிப்
பாறை
அர்ச்சுனன்
தபசு

நான் சென்னைத் தியாகராஜச் செட்டியார் பள்ளிக் கூடத்தில் வாசிக்கும் மாணவன். எங்கள் பள்ளிக் கூடத்திலிருந்து நாங்கள் இருபது பிள்ளைகள் உபாத்தியாயர் சிலருடன் மகாபலிபுரத்துக்கு உல்லாசப் பிரயாணம் செய்யப் புறப்பட்டோம்.

ஒருநாள் அதிகாலையில் இருபதுபேரும் பள்ளிக் கூடம் வந்து சேர்ந்தோம். நாங்கள் உபாத்தியாயர்கள் மேல்பார்வையில் நான்கு நான்கு பேராக அணிவகுத்துச் சென்றோம். நாங்கள் திருவொற்றியூர்ச் சாலை வழியாகவும் பிறகு பிராட்வே வழியாகவும் நடந்து பஸ் நிற்குமிடம் வந்து சேர்ந்தோம்.

நாங்கள் எல்லோரும் செங்கற்பட்டுக்குச் செல்லும் பஸ் வண்டியில் ஏறிக்கொண்டோம். பஸ் மலைச்சாலை வழியாகச் சென்று சைதாப்பேட்டையை அடைந்தது. அங்கே செங்கற்பட்டு ஜில்லா போர்டு ஆபீசும் அதற்குச் சிறிது தூரத்தில் கிண்டியில் எஞ்சினியரிங் கல்லூரியும் இருப்பதாக ஆசிரியர் கூறினர். அங்கிருந்து பஸ் புறப்பட்டுக் கிண்டி மார்க்கமாகச் சென்றது. கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையைப் பஸ்ஸில் செல்லும்போது பார்த்தோம். பஸ் தென்னிந்திய ரயில்பாதையை ஒட்டிச் சென்றது. சிறிது நேரத்தில் பஸ் மீனம்பாக்கம் அருகில் வந்தது. உபாத்தியாயர் அங்குள்ள ஆகாய விமானங்களைக் காண்பித்தார். எங்கள் பஸ் வரும்போது இரண்டு விமானங்கள் பறக்க ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் பஸ் தாம்பரம் வந்து சேர்ந்தது.

தாம்பரம் சிறிது காலத்துக்கு முன் சிறு கிராம மாக இருந்ததாம். தென் இந்திய இரயில்வே கம் பெனியார் மின்சார ரயில் வண்டி ஏற்படுத்தியதும் தாம்பரம் பெரிதாயிற்று. அங்குக் கிறிஸ்தவக் கல்லூரி யிருப்பதையும் ஆசிரியர் காண்பித்தார்.

தாம்பரத்தில் பஸ் மற்ற இடங்களைவிட அதிக நேரம் நின்றது. கீழே இறங்கிப் பார்த்தோம். தாம்பரம் பரந்த இடமாக இருக்கிறது. நல்ல சுகாதார இடமாகவும் அது காணப்படுகிறது.

பஸ் அங்கிருந்து புறப்பட்டுச் செங்கற்பட்டு வந்து சேர்ந்தது. நாங்கள் எல்லோரும் ஸ்டேஷ னுக்கு அருகிலுள்ள சிற்றுண்டி விடுதிக்குப் போய்ச் சாப்பிட்டோம்.

அங்கிருந்து நாங்கள் திருக்கழுக்குன்றத்துக்குச் செல்லும் பஸ் ஏறித் திருக்கழுக்குன்றம் போய்ச் சேர்த்தோம். எல்லோரும் சங்கு தீர்த்தத் தெப்பக்குளத்தில் நீராடினோம். அதற்குப் பிறகு நாங்கள் மலைமேல் ஏறிக் கடவுளைத் தரிசிக்கச் சென்றோம்; நடுப் பகலில் கடவுள் தரிசனமும் பட்சி தரிசனமும் செய்தோம். பின்னர் நாங்கள் மலையி லிருந்து அடிவாரம் அடைந்து பகல் போஜனம் ஹோட்டலில் முடித்துக்கொண்டு சிறிது இளைப் பாறினோம். பொரியல், வறுவல், கூட்டு, பச்சடி, சாம்பார், மோர்க்குழம்பு, ரசம் இவைகள் ஹோட்ட லில் பரிமாறப்பட்டன.

நாங்கள் பிற்பகல் 2 மணிக்குத் திருக்கழுக்குன்றத்திலிருந்து மாமல்லபுரத்திற்குச் செல்லும் பஸ் ஏறிச் சென்றோம். பஸ் பக்கிங்காம் கால்வாய்வரை சென்றது. நாங்கள் எல்லோரும் பஸ்ஸிலிருந்து இறங்கி அங்கு நின்ற படகு ஒன்றில் ஏறிப் பக்கிங்காம் கால்வாயைக் கடந்து சென்றோம்; அக் கரையிலிறங்கிச் சாலை வழியாகச் சென்று முதன் முதல் கலங்கரை விளக்கைப் பார்த்தோம். அதற்குப் பிறகு நாங்கள் ஒன்றரை மைல் நடந்து சென்று, சுமார் 600 வருஷங்களுக்குமுன் ஆட்சி செய்த நரசிம்மவர்மன் காலத்தில் கைதேர்ந்த சிற்பிகளால் தனித் தனி பாறைகளில் செதுக்கப்பட்ட ஐந்து இரதங்களையும் பார்வையிட்டோம். ஒரே கல்லில் ஒரு தேர் செதுக்கப்பட்டிருத்தல் மிக்க ஆச்சரியமானது.

நாங்கள் இரதங்களையும் விளக்கையும் பார்வையிட்டபோது மணி சுமார் ஏழு ஆயிற்று. நாங்கள் உடனே அங்கிருந்து புறப்பட்டு ஒரு சத்திரத்திற்கு வந்து சேர்ந்து, இராப் போஜனத்தை முடித்துக் கொண்டு அன்றிரவைக் கழித்தோம். மறுநாள் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துச் சிற்றுண்டியும் அருந்திவிட்டு ஏழு மணிக்குப் புறப்பட்டு மிகுதியிருக்கும் கல் சித்திரங்களைப் பார்த்தோம். அதில் முக்கியமானது அர்ச்சுனன் தபசு.

ஓரிடத்தில் மூன்று பாறைகள் ஒன்றுசேர்ந்து அடுப்புக் கட்டிகள்போல் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் அக்கற்களைத் திரௌபதை மூட்டின அடுப்பு

என்று சொல்கிருர்கள். இப்படிக் கதை சொல்வது எங்கும் வழக்கம். பிறகு உருண்டை வடிவமான பெரும்பாறை ஒன்று மலையில் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறதையும் நாங்கள் பார்த்துக்கொண்டே கடற்கரைக்குச் சென்ருேம். அங்கு அலைவாய்க் கோயில் ஒன்று இருக்கிறது. நாங்கள் அதையும் பார்த்துவிட்டுக் குளத்தில் ஸ்நானம் செய்தோம். பிறகு நாங்கள் உலகளந்த பெருமாள் கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு சத்திரத்திற்கு வந்து பகல் போஜனத்தை முடித்துக்கொண்டோம்.

நாங்கள் பிற்பகல் இரண்டு மணிக்குச் சென்னைக்குப் புறப்படத் தயாராஞேம். நாங்கள் முன்போலவே பக்கிங்காம் கால்வாயைக் கடந்து திருக்கழுக்குன்றம் பஸ்ஸிலேறிச் செங்கற்பட்டு வந்து சேர்ந்தோம். அங்கு வந்தவுடன் எங்களில் சிலருக்கு இரயில் பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆசை வந்தது. அதனுல் நாங்கள் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று எல்லோருக்கும் மொத்தமாகக் கன்ஸெஷன் பாரம் வாங்கிக்கொண்டோம். பின்பு வண்டியும் வந்தது. நாங்கள் யாவரும் வண்டியில் ஏறிக்கொண்டு தாம்பரம் வந்து சேர்ந்தோம். எல்லோரும் சென்னை பீச்சுக்குப் போகவேண்டி யிருந்ததால் நாங்கள் தாம்பரத்தில் இறங்கி மின்சார வண்டியில் ஏறிக்கொண்டோம்.

வண்டி பீச்சு ஸ்டேஷனில் வந்து நின்றது. எல்லாப் பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் பாட

சாலைக்குச் சென்றோம். சென்றவுடன் நாங்கள் எல்லோரும் உபாத்தியாயர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு சென்றோம்.

கேள்விகள்

1. தாம்பரத்தைப்பற்றி இரண்டு வரி எழுது.
2. மாமல்லபுரம் இக்காலத்தில் என்னபெயரால் அழைக்கப்படுகிறது?
3. மாமல்லபுரத்தில் பார்க்கவேண்டிய பொருள்களை எழுது.
4. மின்சார ரயில்பாதையிலுள்ள ஏதாவது இரண்டு ஸ்டேஷன்களின் பெயர்களை எழுது.

பயிற்சி

1. அணிவகுத்து, தனித்தனி, கைதேர்ந்த - இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. மாணவன் - இதற்குப் பெண்பால் சொல் என்ன?
3. எறி - ஏரி, அறை - அரை - ரகா, றகா பேதத்தையறிந்து பொருள் மாறுபடாமல் இவைகளை வாக்கியத்திலமைத்து எழுது.
4. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

   1. தாம்பரம் ———— இடமாக இருக்கிறது.

2. ——நடுப்பகலில் ———— தரிசனமும்———— தரிசனமும் செய்தோம்.

3. —— ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று எல்லோருக்கும் மொத்தமாகக் — பாரம் வாங்கிக் கொண்டோம்.

4. பள்ளிக்கூடம், சென்னை - இவைகள் இடத்தைக் குறிப்பதால் இடப்பெயர்கள் எனப்படும்.

இப்பாடத்திலிருந்து இடப்பெயருக்கு ஐந்து உதாரணங்கள் கொடு.

6. கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து பொருட்பெயர்களை எடுத்தெழுது:—

1. இராமன் சீதையை மணந்தான்.
2. பனை உயரமாக வளரும்.
3. உலகத்தில் உயர்ந்தமலை இமயமலையே.
4. இந்தியாவில் ஓடும் நதிகளில் சிறந்தது கங்கை.
5. காவிரிநதி தஞ்சை ஜில்லா வழியாக ஓடுகிறது.



6. அல்லி இராணி

தென்மதுரை
மும்மாரி
வருஷிக்கும்
பஞ்சைபனாதி
பாண்டி
வளநாடு
கருப்பு
கூலி
குறைமரக்கால்
சித்திராங்கதன்
ஆண்டுவந்தான்
தெய்வ பக்தி

நீதி
தவறாமல்
வரி விதியாமல்
குடிகளிடம்
மனக்குறை
அகற்றும்படி
முறைப்படி
நீன்முகன்
சிவபெருமான்
கடுந்தவம்
ஆர்வத்தோடு
உச்சிமோந்து

முத்தங்கள்
புத்தகக் கல்வி
ஆயுதப் படிப்பு
தக்கபருவம்
அடங்காக் கோபம்
படையைத் திரட்டி
வீராவேசம்
ஆட்சி
முடிசூட்டி
தீங்கு செய்து
படாதபாடு
மணந்தான்

"ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை
மாதமொரு மும்மாரி வருஷிக்குந் தென்மதுரை
பஞ்சை பனுதி பரதேசி கிடையாது
பஞ்சங் கிடையாது பாண்டிவள நாட்டில்
கருப்புக் கிடையாது கனத்ததொரு மதுரையிலே
கூலி குறையாது குறைமரக்கா லளக்கார்கள்"

—என்று புகழப்பட்ட பாண்டிய நாட்டை ஒரு காலத்தில் சித்திராங்கதன் என்னும் பெயருடைய பாண்டியன் மதுரையிலிருந்து ஆண்டுவந்தான். அவன் தெய்வ பக்தியிற் சிறந்தவன். அவன் தன்னுடைய நாடு செழிப்பாக இருக்கவேண்டுமென்று விரும்பினுன். அவன் நீதி தவருமல் ஆட்சிபுரிந்தான்; அதிக வரி விதியாமல் குடிகளிடமிருந்து அவர்களுக்கு வரும் வரும்படியில் ஆறில் ஒருபாகம் வரியாக வாங்கிவந்தான்.

சித்திராங்கத பாண்டியனுக்கு மனக்குறை ஒன்றிருந்தது. தனக்குப்பின் தன்னுடைய நாட்டை ஆள்வதற்கு ஒரு குழந்தையில்லை என்பதே அவன் மனக்குறை. அதனுல் அவன் தன் மனக்குறையை அகற்றும்படி மதுரைச் சொக்கநாதரை நாடோறும் முறைப்படி வழிபட்டுவந்தான். அப்படி வழிபட்டும் அவனுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அவன் நாட்டை ஆண்டுகொண்டே கடவுள் வழிபாடு செய்வதைவிட

அரசாட்சியை வேருெருவரிடம் ஒப்புவித்துவிட்டுக் கடுந்தவம் செய்ய வேண்டுமென்று நினைத்தான்.

பாண்டியன் நினைத்ததுபோல நீன்முகன் என்பவனை அரசனுக்கி வைத்துக் காட்டுக்குச் சென்ருன்; அங்குச் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். ஒருநாள் அதிகாலையில் அரசன் குளத்திற்குச்சென்று நீராடிவிட்டுத் திரும்புந் தருணத்தில் குழந்தை ஒன்று 'குவா, குவா' என்று அழும் சப்தம் அவனுக்குக் கேட்டது. பாண்டியன் சப்தம் கேட்ட வழியே சென்று அழகிய பெண்குழந்தை ஒன்று அல்லி இலைமேற் கிடப்பதைக் கண்டான். அதை அவன் ஆர்வத்தோடு எடுத்துக்கொண்டுவந்து தன் மனைவியினிடம் கொடுத்தான். அரசியும் குழந்தையை அன்போடு வாங்கி உச்சிமோந்து இனிய முத்தங்கள் பல கொடுத்தாள்.

குழந்தை நன்ருக வளர்ந்து வந்தது. குழந்தை அல்லி இலைமேல் கிடந்ததால் குழந்தைக்கு அல்லி என்றே பெயரிடப்பட்டது. பாண்டியன் கடவுளருளால் கிடைத்த குழந்தையை எடுத்துக்கொண்டு தன் சுற்றத்தாருடன் மதுரைக்கு ஏகினுன். அரசன் வரவையறிந்த நீன்முகன் நாட்டை அரசனிடம் ஒப்புவிக்க முடியாதென மறுத்துவிட்டான். அதனுல் அரசன் மனமுடைந்து பாண்டிய நாட்டிலே வேருேர் ஊரிலே சென்று தங்கினுன். தான் அரச பதவியை இழந்தபோதிலும் பாண்டியன் அல்லிக்கு அரசிளங் குமரன் ஒருவன் கற்றுக்கொள்ள வேண்டிய புத்தகக்

கல்வியையும், ஆயுதப் படிப்பையும் கற்றுக் கொடுத்தான். அல்லியும் சகல கல்வியுங்கற்றுத் தேர்ந்து தக்க பருவமடைந்தாள்.

ஒருநாள் அல்லி தன் தந்தையின் வரலாற்றைத் தெரிந்துகொண்டாள். வரலாற்றைக் கேட்டதுமுதல் அவளுக்கு நீன்முகன்மீது அடங்காக் கோபம் பிறந்தது. அவள் எவ்விதமாவது நீன்முகனைத் துரத்த எண்ணங்கொண்டாள்; பழைய அரசனின் மகள் என்ற நிலையில் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு நீன்முகனை எதிர்த்துப் போருக்குச் சென்றுள். நீன்முகனும் ஒரு பெரும் படையுடன் அல்லியை எதிர்த்தான். அல்லி மிக்க வீராவேசத்துடன் போர் புரிந்து, நீன்முகனைக் கொன்று பாண்டியநாட்டிற்குத் தலைவியாகி இராணி என முடிசூடிக் கொண்டாள்.

அல்லி இராணியின் ஆட்சியில் மக்கள் கவலையின்றி வாழ்ந்தார்கள். மாத மும்மாரி பெய்தது. நாடு முழுமையும் செழித்தது. வியாபாரம் நன்முக நடைபெற்றது. அல்லி மக்களுக்குத் தீங்குசெய்த காட்டு மிருகங்களையும் வேட்டையாடி மக்களுக்குப் பலவித நன்மையைச் செய்தாள். அல்லி இராணியின் நீதிதவரு ஆட்சியின் பெருமை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் வடநாட்டிலும் பரவியது.

அக்காலத்தில் வடநாட்டில் இருந்த பாண்டவர்களில் ஒருவனுகிய அருச்சுனன், அல்லியை

மணஞ்செய்துகொள்ள ஆசைப்பட்டுப் பாண்டிய நாட்டுக்குவந்து படாதபாடெல்லாம் பட்டுக் கிருஷ்ணன் உதவியால் அல்லி இராணியை மணந்தான்.

கேள்விகள்

1. மதுரையின் பெருமை என்ன?
2. அல்லி என்று பெயரிடுவானேன்?
3. அல்லி ஆட்சியின் சிறப்பு என்ன?
4. அருச்சுனன் ஏன் அல்லியை மணந்தான்?

பயிற்சி

1. மும்மாரி, முறைப்படி, ஆர்வத்தோடு — இவைகளைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. போர் - இதற்கு இருபொருள் எழுது.
3. மாரி, மாறி—ரகா, றகா பேதத்தையறிந்து பொருள் மாறுபடாமல் இவைகளை வாக்கியத்திலமைத்து எழுது.
4. புகழப்பட்ட, விரும்பினன், பெண்—இவைகளுக்கு எதிர் வார்த்தைகளை எழுது.
5. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

    1. பாண்டியன் —— பக்தியிற் சிறந்தவன்.
    2. பாண்டியன் —— தவறுமல் —— புரிந்தான்.

3. மாதம் —— பெய்தது.

4. சித்திராங்கத பாண்டியனுக்கு —— ஒன்றிருந்தது.

6. மாதம், நாள் — இவைகள் காலத்தைக் குறிப்பதால் காலப் பெயர்கள்.

கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து காலப் பெயர்களை எடுத்தெழுது:—

1. வெள்ளிக்கிழமை தீபாவளி வந்தது.
2. சென்னையில் நான்கு மணிக்குக் குண்டுபோடுகிறார்கள்.
3. சித்திரையில் எங்களுக்கு விடுமுறை ஆரம்பமாகும்.
4. சூரியன் மாலையில் மறைகிறான்.
5. இரவில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன.
6. நான் சென்னைக்கு வந்து, பத்தொன்பது வருஷங்கள் ஆயின.
7. பகலில் வெய்யில் கடுமையாக இருக்கிறது.

7. வால்கள்

உணர்ச்சி	மயிர்க்குஞ்சம்	உதவுகிறது
முகக்குறி	பகைப்பிராணி	தலைகீழ்
முதுகெலும்பு	தாவும்	அறுந்தவால்
நடமாடும்	பற்பலவாறு	அடர்த்தியாய்
பிராணி	வேறுபடுகிறது	குஞ்சம்

உலகத்தில் ஒவ்வொன்றும் உபயோகப்படாமல் இல்லை. மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் வேறு பிராணிகளுக்கும் வால்கள் இருக்கின்றன. வால் ஒவ்வொன்றுக்கும் பிரயோஜனப்படவே இருக்கிறது. வாலின் உபயோகம் பற்பல பிராணிகளில் பற்பலவாறு வேறுபடுகிறது. முதுகு எலும்பு உள்ள பிராணிகளுக்கே வால் உண்டு. மீன், பறவை, குரங்கு, பாம்பு, பசு ஆகிய இவை எல்லாம் முதுகு எலும்பு உள்ள பிராணிகளே.

பசுவின் வாலைப்பற்றிப் பார்ப்போம். பசு தன் நீண்ட வாலை ஆட்டி அதன் நுனியிலுள்ள மயிர்க் குச்சத்தால் தன் உடல்மேல் உட்கார்ந்து துன்பப்படுத்தும் ஈக்கள் முதலியவைகளை ஓட்டும். மாட்டின் வால் நுனியில் இருக்கும் குஞ்சத்தை வெட்டிவிட்டால் வால் மாட்டுக்குப் பயன் படாமல் போகும்.



குதிரைக்கும் அதன் வால் அதன்மேல் இருக்கும் ஈ கொசு முதலியவைகளை ஓட்டவே பயன்படுகிறது.

இந்த நாற்கால் பிராணிகள் புல் உள்ள இடங்களில் இருக்கின்றன. புல் உள்ள இடங்கள் ஈரமாயிருப்பதால் அங்கே கொசு முதலியவைகள் உண்டு. அவை இவைகளைக் கடித்துத் துன்பப்படுத்தும். ஆகையினால் இந்நாற்கால் பிராணிகளுக்கு நீண்ட வாலும் மயிர் அடர்ந்த குஞ்சமும் இருக்கின்றன.

பன்றிக்கும் யானைக்கும் வால் குட்டையாய் இருக்கும். ஏன்? பன்றிக்கும் யானைக்கும் தோல் தடிப்பானது. இரத்தம் உறிஞ்சும் கொசு முதலிய பிராணிகளால் அவைகளுக்கு அதிகத் துன்பம் உண்டாகாது. அதனால் வால் அப்படி இருக்கிறது.

குரங்குக்கு நீண்ட வால் உண்டு. அது மரத்தைப் பிடித்துக்கொள்ள உதவுகிறது. குரங்கு வாலைக் கிளையில் சுற்றிக்கொண்டு தலைகீழாகத் தொங்கி ஊஞ்சலாடுவதுபோல ஆடிக் கால்களால் வேறு கிளைகளைப் பற்றி மரத்துக்கு மரம் தாவும்.

பல்லிக்கும் அரணைக்கும் வால் வேறு விதத்தில் உபயோகப்படுகிறது. இவற்றின் வால் சுலபமாக அறுந்துபோகும். பகைப் பிராணிகள் இவைகளைப் பிடிக்கும். அப்போது இவைகள் வாலை அறுத்து விட்டு ஓடும். அறுந்த வால் துடித்துக் கொண்டிருக்கும். பகைப் பிராணிகள் இந்த அறுந்த வால்

களைப் பிடித்துக் கொண்டிருக்கும். அப்போது இவை ஓடிவிடும்.

அணிலினுடைய வால் அது கிளைகளில் விழாமல் நிலையாக உட்காருவதற்குப் பயன்படுகிறது. எலிக்கும் அதன்வால் அப்படி உபயோகப்படுகிறது. அணில் மரங்களில் வசிக்க வேண்டியதாயிருப்பதால் அணிலின் வால் எலியின் வாலைவிடச் சிறிது வளர்ந்து அடர்த்தியாயிருக்கிறது.



நீரில் வாழும் மீனுக்கு வால் நீந்துவதற்கு உபயோகப்படுவதுபோல ஆகாயத்தில் பறக்கும் பறவைக்கும் வால் பறக்க உதவுகிறது.

பறவைகளுக்குக் குட்டையான சிறுவாலும் அதைச் சுற்றிலும் சில சிறகுகளும் உண்டு. முன்கால்கள் பறப்பதற்கு ஏற்றபடி இறக்கைகளாக இருக்கின்றன. பறவை ஆகாயத்தில் பறக்கும்போது வால் மேலேபோகவும் கீழே இறங்கவும் திரும்பவும் செய்யக்கூடிய சுக்கான் வேலையைச் செய்கிறது.

முயலினுடைய வாலானது குட்டையாயும் அடிப்பாகத்தில் வெண்ணிறமாயும் இருக்கும். சாதாரணமாக ஓடும்போது முயல் வாலைத் தொங்கவிட்டுக்

கொண்டு ஓடும். ஆனல் அபாய காலத்தில் அது வாலைத் தூக்கிக்கொண்டு ஓடும். இவ்வாறு அது வாலைத் தூக்கிக்கொண்டு ஓடும்போது அதன் அடிப் பக்கத்தில் உள்ள வெண்ணிறமானது நன்ருகப் புலப் படும். இதிலிருந்து மற்ற முயல்கள் ஆபத்து என்று தெரிந்து கொள்ளும். முயலுக்கு வால் அபாய அறி விப்பாக இருக்கிறது.

நாயின் வால் உணர்ச்சியைக் காட்ட உபயோக மாகிறது. நம்முடைய கோபத்தையோ மகிழ்ச் சியையோ நம்முடைய முகக்குறி யால் காட்டுகிரும். நாயோ தன்னுடைய சந்தோஷத்தையும் கோபத்தையும் பயத்தையும் காட்ட வாலை உபயோகிக்கிறது. நாய் கோபத்தைக் காட்டக் காதை நிமிர்த்தி வாலை நேராகத் தூக்குகிறது. அன்பைக் காட்ட அது வாலைக் குழைக்கிறது. அது பயத்தைக் காட்ட வாலைப் பின்கால்களுக்கு நடுவிலே மடக்கு கிறது.



வாத்துக்கு வால் குட்டையாயும் வால் சிறகுகள் குறைந்தும் இருக்கின்றன. இதற்கு வால் இடை யூருய் இருப்பதால் அந்த வால் குறைந்திருக்கிறது.

மனிதனுக்கும் பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே வால் இருந்ததாம். அது பிரயோஜனப்

படாமல் போகவே அது உடம்பினுள் மறைந்து விட்டதாம்.

கேள்விகள்

1. நீண்ட வாலும் மயிர் அடர்ந்த குஞ்சமும் எந்தப் பிராணிகளுக்கு உண்டு?
2. மாட்டுக்கு அதன் வாலால் என்ன நன்மை?
3. யானைக்கு ஏன் வால் சிறியது?
4. குரங்குக்கு வாலால் ஏற்படும் நன்மை என்ன?
5. நாய் வாலின் சிறப்பென்ன?

பயிற்சி

1. ஈரமாக, தலைகீழாக, அடர்த்தியாய்—இவைகளைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. நீண்ட, நுனியில், குட்டையான — இவைகளுக்கு எதிர் வார்த்தைகளை எழுது.
3. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

    1. நாற்கால் பிராணிகள்——உள்ள இடங்களில் இருக்கின்றன.
    2. பன்றிக்கும் யானைக்கும் வால் ———— இருக்கும்.
    3. குரங்குக்கு ———— வால் உண்டு.
    4. முயலின் வாலானது —— அடிப்பாகத்தில் ———— இருக்கும்.

4. இப்பாடத்தில் வரும் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர்களை எடுத்து எழுது :—



8. மகாத்மா காந்தி

குஜராத்நாட்டில்	சாராயம்	சாத்வீகம்
வாணியவகுப்பு	வக்காலத்து	அரும்பாடு
இராஜக் கோட்டை	நீதிமன்றம்	காங்கிரசை
	ஆஜரானர்	விடுதலை
சிறிதுகாலம்	கட்சிக்காரர்	பிரிட்டிஷ்
திருமணம்	தெய்வீனம்	சிறைச்சாலை

பாவநகரிலுள்ள	அரசாங்கம்	நல்வாழ்வில்
விடுமுறை	போராடி	மாபெருந்தலைவர்
சீமைக்கு	இந்தியர்கள்	தென் ஆப்பிரிக்கா
பாரிஸ்டர்	ஆப்பிரிக்காவில்	நீடூழி வாழ்வாராக
ஊன்	பழகியதால்	தேசபக்தர்

பிள்ளைகளே! தெருக்களில் பெரியவர்களும் சிறுவர்களும் காந்திக்கு ஜே! என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். காந்தி என்பவர் யாரென்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் சிறந்த தேசபக்தர்; ஒழுக்கத்தில் தலைசிறந்தவர்; உண்மைக்குப் பாடு படுபவர்; தம்முடைய உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் கஷ்டப்படுவோர்களுக்கு அர்ப்பணம் செய்பவர். அவருடைய முழுப்பெயர் மோகனதாஸ் கரம்சந்து காந்தி எனப்படும்.

அவர் குஜராத் நாட்டில் வியாபாரம் செய்யும் வாணிய வகுப்பில் பிறந்தவர். அவருடைய முன்னோர்கள் சமஸ்தானங்களில் முதன் மந்திரியாக இருந்தவர்கள். அவருடைய தந்தையார் கரம்சந்து காந்தி என்பவரும் போர் பந்தரில் முதன் மந்திரியாக இருந்தார். கரம்சந்து காந்திக்கும் புத்திலிபாய் அம்மைக்கும் கடைசிப் பிள்ளையாக நமது மகாத்மா பிறந்தார்.

மகாத்மா காந்தி பிறந்த சில ஆண்டுகள் கழிந்த பின்னர் அவரது பெற்றோர் போர்பந்தரை விட்டு இராஜக்கோட்டைக்கு வந்துவிட்டனர். அங்கேயே

மகாத்மா படிக்க ஆரம்பித்தார். சிறிதுகாலம் தாய் மொழி பயின்றதும் அவர் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். அவர் பள்ளி மாணவராக இருக்கும்போதே பதின்மூன்ருவது வயதிலேயே அவருடைய பெற்ருேர் அவருக்குத் திருமணம் நடத்திவைத்தனர். 1887-ம் ஆண்டில் மகாத்மாவின் கலாசாலைப் படிப்பு முடிந்தது.

பிறகு அவர் பாவநகரிலுள்ள கல்லூரியில் எப். ஏ. படிக்கச் சேர்ந்தார். விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தபொழுது ஒரு பெரியாரின் தூண்டுதலால் சீமைக்குப் போய்ப் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கத் தீர்மானித்தார். இங்கிலாந்திலுள்ளவர்கள் மாமிசம் தின்பார்கள்; சாராயம் குடிப்பார்கள். அதனுல் காந்தியின் தாயார் காந்தி சீமைக்குச் சென்ருல் கெட்டுப் போவாரென்று பயந்தார். அதற்கு மகாத்மா தாம் ஊன் தின்பதில்லை என்றும் சாராயம் குடிப்பதில்லை என்றும் சத்தியம் செய்துகொடுத்தார். அதன் பிறகு தாயார் ஒருவிதமாகச் சம்மதிகொடுத்தார்.

மகாத்மா பம்பாய் நகருக்கு வந்து தக்க துணையுடன் கப்பலேறிச் சீமைக்குச் சென்ருர். அவர் அங்குத் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கஷ்டப்பட்டார்; மாமிசம் தின்னுமலும், சாராயம் குடியாமலும் வாழ்ந்து, பாரிஸ்டர் பரீட்சையில் தேறினர்.

பாரிஸ்டர் பரீட்சை முடிந்ததும் அவர் தாய்நாடு திரும்பி இந்தியா வந்து சேர்ந்து பம்பாயில்

வக்கீல் தொழிலை நடத்தினர். அவர் பிறகு இராஜக் கோட்டையிலேயே தமது தொழிலை நடாத்திவந்தார். அத் தொழிலிலும் அவர் உண்மை வழக்குகளுக்கே வக்காலத்து வாங்கிப் பேசினர். அவரைத் தென் னாப்பிரிக்காவிலுள்ள ஒரு வியாபாரி தன் வழக்குக் காகத் தென் ஆப்பிரிக்கா வரும்படி அழைத்தார். மகாத்மா அதற்கு உடன்பட்டுத் தென் ஆப்பிரிக்கா சென்றார்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்படும் கஷ்டத் தைப் பார்த்ததும் அவர் இந்தியர்களுக்காகப் பாடு படத் தொடங்கினர்; வழக்குக்காக நீதிமன்றத்தில் ஆஜரானர்; முடிவில் கட்சிக்காரர் இருவருக்கும் சமாதானம் செய்துவைத்தார்; இந்தியருக்காக உழைப் பதே தமது கடமை என்று உழைத்தார். அந்த உழைப்பினல் அவர் உயிருக்கே பலதடவை ஆபத்து நேர்ந்தது. அவர் தெய்வாதீனமாக ஒவ்வொரு தடவையும் உயிர் தப்பினர். அவர் அரசாங்கத்தாரோடு போராடி இந்தியர்களுக்கு ஏற்பட்டிருந்த பல இன் னல்களைப் போக்கடித்தார்.

தென் ஆப்பிரிக்காவில் தமிழர்களும் குடியேறி இருந்தனர். அவர்களுடன் பழகியதாலும், அவர் களே மகாத்மாவின் சாத்வீகப்போரில் அரும்பாடு பட்டவர்களாதலாலும் மகாத்மா தமிழ் வாசிக்கக் கற்றுக்கொண்டு சிறு பிள்ளைகளுக்குத் தமிழைப் போதித்தும் வந்தார். இன்று தென் ஆப்பிரிக்காவில்

இந்தியர் சிறிது சுகமாக வாழ்கின்றார்களென்றால் அது மகாத்மாவின் உழைப்பின் பலனேயாகும்.

அதற்குப் பின்னர் மகாத்மா இந்தியா திரும்பினார்; இந்தியாவிற்கு வந்து காங்கிரசில் சேர்ந்து தம்முடைய கொள்கையைப் புகுத்திக் காங்கிரசைக் கைப்பற்றிக் கொண்டார்; இந்திய விடுதலைக்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் சாத்வீகப் போரிட்டுப் பலதடவை சிறைச்சாலைக்குச் சென்றார்.

இன்று அவரைப் போற்றாத இந்தியரும் வெளி நாட்டாரும் இல்லையென்றே கூறலாம். அவரே இன்று இந்தியாவின் சிந்தாமணியாக விளங்குகின்றார். அவரே நம் நாட்டு மாபெருந் தலைவராக உள்ளார். அவரே இந்தியாவின் நல் வாழ்விற்கு இன்றியமையாதவர். நமது மாபெருந் தலைவர் நீடூழி வாழ்வாராக.

கேள்விகள்

1. மகாத்மா காந்தியின் குணதிசயங்கள் என்ன?
2. மகாத்மாவின் தாயார் ஏன் மகாத்மாவைச் சீமைக் கனுப்ப மறுத்தார்?
3. ஆப்ரிக்காவில் இந்தியருக்காக மகாத்மா செய்த வேலை என்ன?
4. மகாத்மா தமிழ் கற்றுக்கொண்டது எதற்காக?
5. இந்தியர் மகாத்மாவை ஏன் புகழ்கின்றார்கள்?

பயிற்சி

1. அர்ப்பணம், சம்மதி, உடன்பட்டு, தெய்வாதீனமாக— இவைகளைத் தனித்தனி வாக்கியத்தி லமைத்து எழுது.

2. சிறுவர்—இதற்குப் பெண்பால் சொல் எழுது.

3. சிறுவர், உண்மை, மனைவிகள்—இவைகளுக்கு எதிர் வார்த்தைகள் எழுது.

4. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

    1. அவர் சிறந்த————பக்தர்.

    2. இங்கிலாந்திலுள்ளவர்கள்————தின்பார்கள்.

    3. மகாத்மா————குடிப்பதில்லையென்று———— செய்து கொடுத்தார்.

    4. தென் ஆப்ரிக்காவில்————குடியேறியிருந்தனர்.

9. பருத்தி

அவசியம்	கறுப்புமண்	ஆரம்பிக்கும்
அரைமனிதன்	புழுதியாக	காய்தோன்றும்
பிரிக்கலாம்	அழுகிப்போம்	சூரியவெப்பம்
கம்பளம்	முளைத்தபின்	உரோமம்
பருத்தி	காய்க்கும்	நூற்கிறார்கள்
பட்டுநூல்	வரையில்	கதர்நூல்
பட்டுப்பூச்சி	முழுவளர்ச்சி	பஞ்சாலைத்
வெந்நீர்	ஏறக்குறைய	துணி
பொதிகளாக	தறியந்திரங்கள்	உற்பத்தி
பஞ்சாலை	கைத்தறி	அனந்தபுரம்

சரிகைப்	கடப்பை	ஏராளமாக
புடைவை	கர்நூல்	கம்போடியா
கோயம்புத்தூர்	பல்லாரி	அமெரிக்கா
கரிசல்	அரும்பு	அவசியமான

மக்களுக்கு அவசியமான பொருள்கள் உணவும் உடையும் ஆவன. உணவுக்கு அடுத்த முக்கியமான பொருள் உடையே. ஆடை இல்லாத மனிதன் அரைமனிதன் என்பது பழமொழி. நாம் உடுக்கும் ஆடைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை பட்டு ஆடை, கம்பள ஆடை, பருத்தி ஆடை என்பன. பட்டுநூல் பட்டுப்பூச்சியிலிருந்து எடுக்கப் படுகிறது. பட்டுநூல் எடுப்போர் பட்டுப் பூச்சிகளை வளர்த்து அவைகள் நூலால் கூடுகள் கட்டும்போது பக்குவம் அறிந்து அவைகளை வெந்நீரில் போட்டுக் கொன்று அந்தப் பூச்சிக் கூடுகளிலிருந்து நூல் எடுப் பார்கள். இப்படி எடுக்கப்படும் நூலே பட்டுத்துணி யாக நெய்யப்படுகிறது. கம்பளம் ஆடுகளின் உரோமத்தினுல் நெய்யப்படுவது.

பருத்தி புன்செய்ப் பயிர். பருத்திச் செடி கரிசல் நிலத்தில் பயிராகும். கறுப்புமண் கலந்துள்ள நிலமே கரிசல் நிலம். பருத்தியைப் பயிரிடுவோர் நிலத்தை உழுது புழுதியாக்கிப் பண்படுத்தி விதைகளை ஊன்றுவார்கள். பருத்திவிதை முளைப்பதற்கு மித மான ஈரம் போதும். அதிக ஈரம் இருந்தால் விதை அழுகிப்போகும். விதை முளைத்தபின் காய்க்கும்

வரையில் மாதம் ஒருமுறை மழைபெய்தால் போதும். பூவிடும் காலத்திலும் காய்வெடிக்கும் காலத்திலும் மழை கூடாது. பருத்திச் செடி ஐந்து அல்லது ஆறு மாதங்களில் முழுவளர்ச்சி அடைந்து பயன்தரும். அது ஏறக்குறைய மூன்றடிமுதல் நான்கு அடி வரையில் வளரும்.

செடிகள் நன்ருக வளர்ந்ததும் பூ அரும்ப ஆரம்பிக்கும். பூ மஞ்சள் நிறமானது. பூ வாடி விழும்போது அவ்விடத்தில் காய் தோன்றும். காய் பச்சை நிறமாக இருக்கும். காய் முற்றினல் அது சாம்பல் நிறமாக மாறிவிடும். சூரிய வெப்பம் படப் படக் காய்வெடிக்க ஆரம்பிக்கும். காயில் நான்கு அறைகள் உண்டு. காய் வெடித்தவுடன் ஒவ்வொரு அறையிலிருந்தும் பஞ்சு வெளிப்படும். சேகரிப்போர் பஞ்சைத் தினந்தோறும் உடனுக்குடன் எடுத்துச் சேர்த்து வைப்பார்கள்.

பருத்தி விதையின்மேல் பருத்தி ஒட்டிக்கொண்டிருக்கும். பருத்தியை விதையிலிருந்து பிரித்து எடுப்பதற்கு நம் நாட்டில் வெகுகாலமாக ஒரு கருவி இருந்துவருகிறது. அக்கருவிக்கு மணே என்பது பெயர். அக்கருவியைக்கொண்டு பருத்தி வேருகவும் கொட்டை வேருகவும் பிரிக்கப்படுகின்றன. நம் நாட்டில் பெண்களும் சிறுவர்களும் இப்படிச் சுத்தம் செய்யப்பட்ட பஞ்சை எடுத்து நூலாக நூற்கிருர்கள். இப்படிச் செய்கின்ற நூலைத்தான் கதர் நூல் என்று சொல்கிருேம். நூல் நூற்றதும் துணி நெய்யும்

தொழிலாளர்கள் அதை எடுத்துத் தறியில் போட்டு வேஷ்டியாகவும் புடவையாகவும் இன்னும் வெவ்வேறு துணிகளாகவும் நெய்கிறார்கள். நம் நாட்டில் நம்மவர்களே கையால் நூல்நூற்று நெய்து விற்கும் கைத்தறித் துணிகளை நாம் கதர்த் துணி என்கிறோம்.

கதர்த் துணிக்கு எதிரானது பஞ்சாலைத் துணி. பருத்தி பயிரிடுவோர் காய் வெடித்ததும் ஆட்களை வைத்துப் பஞ்சைச் சேகரித்துப் பொதிகளாகக் கட்டி வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிறார்கள். வியாபாரிகள் பஞ்சாலைக்காரர்களுக்கு அப்பஞ்சை விற்க, அவர்கள் அதை வாங்கிப் பஞ்சாலைக்கு அனுப்புகிறார்கள். பஞ்சாலையில் சுத்தம் செய்யவும் நூல் நூற்கவும் சாயம்போடவும் துணி நெய்யவும் யந்திரங்கள் இருக்கின்றன. பஞ்சு, யந்திரங்களின் உதவியால் சுத்தம் செய்யப்பட்டு நூலாக்கப்படுகிறது. சாயத்தொழிலாளிகள் நூலுக்குச் சாயம் போடுவார்கள். அதற்குப் பின்பு தறிவேலையாட்கள் நூலை எடுத்துத் தறியந்திரங்களில் விட்டுப் பலவிதத் துணிகளாக நெய்வார்கள். யந்திரத் தறிகளில் துணியை ஏராளமாக உற்பத்தி செய்யலாம். கைத்தறியால் துணி குறைவாகவே உற்பத்தியாகும். இதனுற்றான் கைத்தறியால் ஆகும் கதர்த்துணியின் விலை அதிகமாய் இருக்கிறது. கைத்தறிக்காரர்கள் ஒருநாளும் யந்திரத் தறியோடு போட்டி போடுதல் முடியாது. ஆனால் சரிகைப் புடவைகளும் பட்டுப் புடவைகளும் கைத்தறியினாலேயே நெய்யப்படுதல் வேண்டும்.

பருத்தி மூன்றுவகைப்படும். அவற்றுள் ஒன்று செடியாகத் தழைக்கும். மற்றொன்று சிறிது உயர்ந்து வளரும். இன்னொன்று மரமாக ஓங்கி வளரும். இலவ மரத்துப் பஞ்சு அதிக மிருதுவானதாக இருப்பதனுல் அது தலையணைக்கும் கட்டில் மெத்தைக்கும் அதிகமாகப் பயன்படுகிறது. மூன்றுவகைப் பஞ்சுகளிலும் செடியாக வளரும் வகையே அதிக உபயோகமானது.

நமது இராஜதானியில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் ஆகிய இந்த ஜில்லாக்களில் பருத்தி ஏராளமாகப் பயிராகின்றது.

மிக மேன்மையான துணி நெய்வதற்குக் கம்போடியா பருத்தி உபயோகப்படுத்தப்படுகிறது. கம்போடியா பருத்தி உயர்ந்த பருத்தி. அது அமெரிக்காவிலும் எகிப்து நாட்டிலும் உற்பத்தியாகிறது. நமது நாட்டுப் பருத்தி மிக மேன்மையான துணி நெய்யப் பயன்படுவதில்லையாம்.

நமது நாட்டுப் பருத்தியை நல்ல முறையில் பயிரிடவேண்டும். நாம் நல்ல வகையான பருத்தியை உற்பத்தி செய்வதால் நமக்கு அதிக லாபம் கிடைக்கும். பருத்தி வியாபாரம் நம் நாட்டில் பெரிய வியாபாரம். நம்மவர்கள் நல்ல முறையில் பருத்தியை உற்பத்தி செய்து நம் நாட்டின் செல்வத்தை விருத்தியாக்க முயலவேண்டும். அப்போதுதான் நம் நாடு முன்னேற்றமடையும்.

கேள்விகள்

1. ஆடைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
2. பருத்தி எந்த நிலத்தில் பயிராகும்?
3. கதர் நூல் என்பது எது?
4. கைத்தறியினாலேயே நெய்யவேண்டிய துணிகள் எவை?
5. நம் நாட்டில் பருத்தி எங்கெங்கு ஏராளமாகப் பயிராகின்றது?

பயிற்சி

1. உடனுக்குடன், சேகரித்து, ஏறக்குறைய - இவைகளைத் தனித்தனி வாக்கியத்தி லமைத்து எழுது.
2. ஏராளமாக, மிருதுவானதாக, ஈரம் — இவைகளுக்குச் சரியான எதிர் வார்த்தைகளை எழுது.
3. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—
   1. பருத்தி————ப் பயிர்.
   2. பருத்திச் செடி————நிலத்தில் பயிராகும்.
   3. பூ————நிறமானது.
4. பாடு - வினைச்சொல், பாடுதல் தொழிற் பெயர்.

   தல், அல், வி, முதலியவை தொழிற்பெயரின் ஈற்றில் வரும். இருத்தல், போதல், விளக்கல், நிற்றல், கேட்டல், தோல்வி, கேள்வி என்பன தொழிற் பெயர்கள்.

   தல் என்றதை ஈற்றிலேயுடைய ஐந்து தொழிற்பெயர்களை எழுது.



10. புத்திசாலிப் பையன்

புத்திசாலி	ஆணிகள்
கிராமத்தில்	உளி
அறிந்தவர்	அவமானம்
சோறு	காண்பித்தான்
எண்ணி	அறிந்துகொண்டார்
தொண்டை	தண்டவாளம்

ஒரு கிராமத்தில் ஒரு தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் மிகவும் வயது சென்றவர். அவர் இலக்கண இலக்கியங்களை நன்றாகப்படித்து அறிந்தவர். படிக்கும்போது எவருக்காகிலும் சந்தேகம் உண்டானால்

அவர்கள் அவரிடத்திலேயே கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அதனுல் அவர் "நம்மைப்போலப் படித்தவர் ஒருவரும் இல்லை" என்று கர்வங் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் தம் ஊரிலிருந்து வேறு ஊருக்குப்போக நேர்ந்தது. அவர் போய்ச் சேர வேண்டிய ஊர் இரண்டுநாள் பயண தூரத்தில் இருந்தது. அவருக்கு நடந்து சென்ற களைப்பினுல் பசி அதிகரித்தது. அதனுல் அவர் பக்கத்தில் இருந்த ஊரில் நுழைந்தார். அவ்வூரில் சோறு விற்கும் இடம் அவருக்குத் தெரியவில்லை.

வழியில் சிறுவர்கள் சிலர் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் இலக்கணமாகப் பேசினுல் அவர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள் என்று புலவர் எண்ணினுர். அதனுல் அவர் ஒரு பையனை அழைத்து "தம்பி! சோறு எங்கே விக்கும்" என்று கேட்டார். உடனே அப்பையன், "ஐயா, பெரியவரே, இது உமக்குத் தெரியாதா? சோறு தொண்டையிலே விக்கும்" என்ருன்.

பிறகு பெரியவர் சிறுவனைப் பார்த்து, "சோறு எங்கே விற்கும்" என்ருர். சிறுவன் அவரைச் சோற்றுக் கடைக்கு அழைத்துக்கொண்டு போனுன். புலவர் தம் பசியைத் தீர்த்துக்கொண்டு அவனுடைய புத்திசாலித்தனத்திற்கு மெச்சினுர்.

பெரியவர் இன்னும் சிறிது தூரம் சென்று வேறு ஒரு பையனைப் பார்த்து, "அப்பா, இந்தத் தண்டவாளம் எங்கே போகும்?" என்றார். அவன் அவரைப் பார்த்து, "ஐயா, இந்தத் தண்டவாளம் எங்கும் போகாது; ஏனென்றால் இரண்டு பக்கங்களிலும் ஆணிகளை அடித்திருக்கிறார்கள்; பாருங்கள்" என்று காண்பித்தான்.

உடனே பெரியவர் வெட்கம் அடைந்து ஒன்றும் பேசாமல் போய்விட்டார். கற்றச்சர்கள் பெரிய மலையைச் சிறிய உளியினால் உடைத்துவிடுகிறார்கள் அல்லவா? அதுபோலச் சிறிய பிள்ளைகளால் பெரிய புலவர்களும் சில சமயங்களில் அவமானப் படுவதுண்டு. பெரியவர் இந்த உண்மை அறிந்து அன்று முதல் கர்வமாயிருப்பதை விட்டுவிட்டார். ஒருவரும் அதிகமாகக் கற்றுவிட்டோம் என்று கர்வம் கொள்ளலாகாது.

கேள்விகள்

1. புலவர் ஏன் கர்வம் கொண்டார்?
2. முதற்பையன் எப்படிப் புலவரை வென்றான்?
3. இரண்டாவது பையன் புலவரை எப்படி வென்றான்?
4. இப்பாடத்தால் நீ அறிவது என்ன?

பயிற்சி

1. தூரத்தில், களைப்பினால், சில சமயங்களில் - இவைகளைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

2. மானம், தூரம், பெரியவர் — இவைகளுக்குச் சரியான எதிர் வார்த்தைகளை எழுது.

3. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

1. ஒரு கிராமத்தில் தமிழ்ப்புலவர் ஒருவர்——கொண்டிருந்தார்.

2. ஒருநாள் அவர் இரண்டுநாள் பயணதூரம் —— சென்றார்.

3. அவர் —— பசியால் வருந்தினர்.

4. அவர் வழியில ஒரு சிறுவனைச் —— .

5. அவர் அவனை, "சோறு எங்கே விக்கும்" என்ற—— —— கேட்டார்.

6. சிறுவன், "ஐயா, தொண்டையில் ——" என்றான்.

7. அவர் தம்மைப்போலப் —— எவரும் இல்லை என்று ——கொண்டிருந்தார்.

8. உடனே பெரியவர் —— அடைந்து ஒன்றும் —— போய் விட்டார்.

9. ——பெரிய மலையைச் சிறிய —— உடைத்து விடுகிறார்கள்.

10. ஒருவரும்——கற்றுவிட்டோம் என்று——கொள்ளலாகாது.

4. சிறுவன் அவரைச் சோற்றுக் கடைக்கு அழைத்துச் சென்றான் - இவ்வாக்கியத்தை அவர் என்று ஆரம்பித்து முடி.

கல் தச்சர்கள் பெரிய மலையைச் சிறிய உளியினுல் உடைத்து விடுகிறுர்கள்.— இதைக் கற்றச்சர்களால் என்று ஆரம்பித்து முடி.

5. பையன் என்பது ஆளைக் குறிப்பதால் ஆண்பால். ஆளைக் குறிப்பது ஆண்பால்; பெண்ணைக் குறிப்பது பெண்பால்.

கீழ்வரும் சொற்கள் என்னென்ன பால் வகையைச் சேர்ந்தவை என்று எடுத்து எழுது :—

தாய், தந்தை, மாமன், மாமி, அம்மான், அத்தை, பாட்டன், பாட்டி, அரசன், அரசி, புத்திரன், புத்திரி, மகன், மகள், அண்ணன், அக்காள், தமயன், தமக்கை.

ஆண்பால்	பெண்பால்



11. நவராத்திரி விழா

குமரிவரையில்
கொண்டாட
மைசூர்
திருவிழா
மகிஷன்
அரக்கன்
தேவதை
மகாசக்தி
பராசக்தி

துர்க்கை
இலக்குமி
சரஸ்வதி
ஆயுதங்கள்
பூஜை
சந்தனம்
பிரமன்
விஷ்ணு
ருத்திரன்

கஜேந்திர மோட்சம்
சுற்றத்தாரை
வேடிக்கை விழா
சுப்பிரமணிய பாரதி
முணுமுணுத்து
சாத்திரம்

நமது இந்திய நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் நவராத்திரிவிழா கொண்டாடப்படுகிறது.

இது மைசூரில் மிகச்சிறப்பாகத் தசரா என்ற பெயரால் கொண்டாடப்படுகிறது. பல ஊர்களிலிருந்து ஜனங்கள் தசராத் திருவிழாவைப் பார்க்கத் திரள்திரளாக மைசூருக்குப் போகிறார்கள். இந்த விழா இந்துக்கள் கோயில்களிலும் சிலருடைய வீடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

நவராத்திரம் என்னும் சொல்லுக்கு ஒன்பது தினங்கள் என்று அர்த்தம் உண்டு. ராத்திரம் என்ற சொல் ராத்திரி என்று மாறி வழங்குகிறது. இதை ஒன்பது இராத்திரியில் கொண்டாடுவதால் ஜனங்கள் இதை நவராத்திரி என்று சொல்லிவிட்டார்கள். மைசூரில் இதைப் பத்துநாள் கொண்டாடுவதால் இதற்குத் 'தசராப் பண்டிகை' என்னும் பெயர் வழங்கலாயிற்று. இது முக்கியமாக அரசர்களுக்கே உரியது.

நவராத்திரிப் பண்டிகை ஒரு கதையை ஒட்டி நடைபெறுகிறது. மகிஷன் என்னும் ஓர் அரக்கன் இருந்தானாம். அவன் எந்தத் தேவதையாலும் வெல்ல முடியாத வரம் பெற்றிருந்தானாம். அவன் பலர்க்கும் துன்பம் செய்துகொண்டிருந்ததால் அவனை அழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிரமன், விஷ்ணு, ருத்திரன் முதலானவர்களும் அவனைக் கொல்ல முடியாமலிருந்தார்களாம். இப்படியிருக்கும்போது பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூன்று தேவர்களிடமிருந்து மூன்று சக்திகள் வெளிப்

பட்டன. அவைகள் மகா சக்தியாகின. அந்த மகா சக்தியாகிய பராசக்தி அந்த அரக்கனைக் கொன்று உலகத்துக்கு நன்மை உண்டாக்கினாளாம். அதனால் தான் இந்துக்கள் இந்தக் காலத்தில் பராசக்தியை வணங்குகிறார்கள்.

நவராத்திரி காலத்தில் இந்துக்கள் முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும், நான்கு ஐந்து ஆறும் நாட்களில் இலக்குமியையும் ஏழாம் எட்டாம் ஒன்பதாம் நாட்களில் சரஸ்வதியையும் வணங்குகிறார்கள். ஒன்பதாவது நாள் சரஸ்வதி ஞானம் அடைந்த நாளாம். அதனால்தான் அந்தநாளில் சரஸ்வதியின் அடையாளமாகப் புத்தகங்களைவைத்துப் பூப்போட்டு வணங்குவது வழக்கமாய் இருக்கிறது. இந்த நாளைத் துர்க்கை பூஜையாகவும் கொள்வதுண்டு. துர்க்கைக்கு அடையாளம் ஆயுதம். அதனால் ஆயுதங்கள் பூஜையில் வைக்கப்படுகின்றன. நம்மவர்கள் சரஸ்வதி பூஜையையும் துர்க்கை பூஜையையும் ஒன்றாகவே கொண்டாடுகிறார்கள். அதனால் புத்தகங்களும் ஆயுதங்களும் பூஜையில் வைக்கப்படுகின்றன.

இந்தக் காலத்தில் சிலர் தம் வீடுகளில் நவராத்திரி கொண்டாடுகின்றனர். சிறுவர்களுக்கு இது கொண்டாட்டமாயிருக்கும். அவர்கள் பொம்மைகள் பலவற்றை வரிசையாக வைத்திருப்பார்கள். இராமர் காட்டில் இருத்தல், கஜேந்திரமோட்சம் முதலான காட்சிகளை அறிவிக்கும் பொம்மைகள் வைப்பதுண்டு.

சில வீடுகளில் யந்திர ரயில்வண்டி ஓடும். வீட்டுக்காரர் தங்கள் நண்பர்களேயும் சுற்றத்தாரையும் வீட்டுக்கு அழைப்பர். பலபேர் வந்து வேடிக்கை பார்ப்பார்கள். ஏறக்குறைய இந்தப் பண்டிகை வேடிக்கை விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சுப்பிரமணிய பாரதியார் சரஸ்வதி பூஜையை வேறு விதமாகக் கொண்டாடவேண்டும் என்று கூறுகிறார். அவர்,

“மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை அன்றாம்”

என்று பாடியிருக்கிறார். இன்னும் அவர், “ஊர் எங்கும் பள்ளிக்கூடங்கள்வைத்துப் படிப்புத் தெரியாதவர்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்துத் தொண்டு செய்வதே சரஸ்வதிக்குப்பூஜை புரிவதாகும்” என்று கூறியுள்ளார். மாணவர்களே! இப்படிச் சரஸ்வதி பூஜை செய்தால் நம் நாட்டுக்கு நன்மை ஏற்படுமன்றோ?

கேள்விகள்

1. தசராத் திருவிழாவை எங்கு விசேடமாகக் கொண்டாடுகிறார்கள்?
2. தசராப் பண்டிகையை எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகின்றன?

3. நவராத்திரியை ஒட்டிய கதை யாது ?

4. சரஸ்வதி பூஜை என்றால் என்ன ? ஆயுதபூஜை என்றால் என்ன ?

5. சுப்பிரமணிய பாரதியார், சரஸ்வதி பூஜையை எவ்விதமாகக் கொண்டாட வேண்டும் என்கிறார்.

பயிற்சி

(1) கொண்டாடப்படுகிறது, முணுமுணுத்தது—இவைகளைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்தெழுது.

(2) ஒரு பொருளின் குணத்தை அல்லது பண்பைக் காட்டுவது பண்புப் பெயர்.

அருமை, பொறுமை, கோபம்—இவை குணத்தைக் காட்டும் பண்புப் பெயர்கள் எனப்படும்.

கீழ் வருபவைகளிலிருந்து பண்புச் சொற்களை எடுத்து எழுது.

(1) பரதனுக்கு இராமன்மேல் அன்பு அதிகம்.

(2) காந்தி உண்மை பேசுபவர்.

(3) சுண்ணும்பின் நிறம் வெண்மை.

(4) அல்லி வீரத்துடன் விளங்கினாள்.



12. பந்தய விளையாட்டுக்கள்

நடராஜா	கூட்டம்	தாண்டோட்டம்
அவசரமாக	கூட்டமாக	உயரமாகத்
உடுப்புகள்	பந்தய ஓட்டம்	துள்ளல்
மைதானம்	நடைபெறப்	கோணிகட்டி
நடைபெறும்	போகும்	ஓடுதல்
கூடிநிற்கின்ற னர்	தூரமாகத்	வெடிசப்தம்
	தாண்டல்	சந்தோஷமாக

முருகன் : நடராஜா, எங்கே அவசரமாகச் செல்லு கிருய்? இன்று என்ன நல்ல உடுப்புகளெல் லாம் போட்டுக்கொண்டிருக்கிருயே?

நடராஜன் : முருகா, இன்று எங்கள் பள்ளிக்கூட மைதானத்தில் பந்தய விளையாட்டுக்கள் நடைபெறப் போகின்றன. அவற்றைப்

பார்ப்பதற்காக நான் போகிறேன். இன்று எங்களுக்கு விடுமுறை நாளாகும்.

முருகன் : நடராஜா, என்னென்ன விளையாட்டுக்கள் நடைபெறும்?

நடராஜன் : எல்லாம் இவ்விடத்திலேயே ஒப்பிக்க முடியுமா, முருகா? நீயும் வருவதாக இருந்தால் என்னுடன் வா! அங்கு நடக்கும் விளையாட்டுக்களைப்பற்றி உனக்குக் கூறுகிறேன்.

முருகன் : நல்லது; நீ இங்கேயே நில். நான் என் வீட்டுக்குச் சென்று நல்ல சட்டை போட்டுக்கொண்டு ஓடிவருகிறேன்.

முருகன் அவ்வாறே வீடு சென்று சலவை செய்த சுத்தமான உடுப்புக்களையும் ஆடையையு மணிந்து விரைவில் வந்து சேர்ந்தான். இருவரும் கூடிப் பந்தய விளையாட்டு நடக்கும் மைதானத்துக்குச் சென்றனர்.

முருகன் : நடராஜா, ஏன் அங்கு உபாத்தியாயர்களிற் சிலர் கூடி நிற்கின்றனர்?

நடராஜன் : அவ்விடத்திலிருந்துதான் எல்லாவித விளையாட்டுக்களும் ஆரம்பிக்கப்படும். பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி விடுவதற்காக

உபாத்தியாயர்களிற் சிலர் சேர்ந்து நிற்கின்றனர்.

முருகன் : மேஜைக் கருகில் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர் யார்?

நடராஜன் : அவர்தான் நடைபெறும் விளையாட்டுக்களில் முதலாவது வந்தவர், இரண்டாவது வந்தவர், மூன்ருவது வந்தவர்களைப் பார்த்து அவர்கள் பெயர்களை எழுதிக் கொள்வதற்காக உட்கார்ந்திருக்கிருர்.

முருகன் : முதலாவது, இரண்டாவது, மூன்ருவது வருபவர் என்று நீ கூறியது எனக்கு விளங்க வில்லையே?

நடராஜன் : இப்பொழுது கூட்டம் கூட்டமாகப் பிள்ளைகளைப் பிரித்துவைத்துக்கொள்வார்கள். அரைமைல் தூரம் பத்துப் பிள்ளைகள் ஓடுகிருர்களென்று வைத்துக்கொள். ஓடியவர்களில் யாராவது ஒருவன் முதலில் ஓடிவந்து விடுவான். அவனுக்குப் பின்னல் வெகுமதி கொடுப்பார்கள். அதற்காக அவன் பெயரை எழுதிக்கொள்வார்கள். ஒவ்வொரு விளையாட்டுக்கும் மூன்று பரிசுகள் கொடுப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர், அதனல் அந்தந்த விளையாட்டுக்களில்

ஜயித்தமுதல் மூவருடைய பெயர்களைமட்டும் குறித்துக் கொள்வார்கள்.



அதோ, பார்! இப்பொழுது பிள்ளைகள் ஓடப்போகிறார்கள். அதற்குப் பந்தய ஓட்டம் என்பது பெயர்.

முருகா, இதோ என் கையில் இன்று நடைபெறப்போகும் விளையாட்டுக்களின் முன் அறிவிப்புத்தாள் இருக்கிறது. நான் ஒவ்வொன்றையும் கூறுகிறேன், கவனமாய்க் கேட்டுக்கொள்.



ஒன்றரைமைல் தூரம் ஓடுதல், தூரமாகத் தாண்டல், தாண்டோட்டம், உயரமாகத் துள்ளல், கோணி கட்டி ஓடுதல், கொடி யோட்டம், கரண்டி எலுமிச்சம் பழ வோட்டம் ஆகிய இவைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும்.

இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும்போதே வெடி சப்தம் ஒன்று கேட்டது.

முரு : நடராஜா, என்ன சப்தம் அது?

நட : அது வெடி சப்தம். ஒவ்வொரு ஆட்டமும் ஆரம்பிக்கப் போகும்போது வெடி போடுவது வழக்கம். (பின்னர் விளையாட்டுக்கள் நடந்தன. இருவரும் பார்த்துக் களித்தனர்.)



நட : முருகேசா, வா! போகலாம். விளையாட்டுக்கள் முடிந்து விட்டனவே. (இருவரும் சந்தோஷமாக வீடு சென்றனர்.)

கேள்விகள்

1. உன் பள்ளிக்கூடத்தில் நீ விளையாடும் விளையாட்டுக்கள் என்னென்ன?

2. விளையாடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

3. விளையாட்டுக்களில் முதலாவதாகவந்து வெற்றி பெறுபவர்க்கு என்ன கொடுக்கப்படும்?

பயிற்சி

1. அவசரமாக, விடுமுறை, உரையாடிக்கொண்டு—இவைகளைத் தனித்தனியே வாக்கியத்தி லமைத்து எழுது.
2. அவசரமாக, சுத்தமான, கூட்டம் கூட்டமாக—இவைகளுக்கு எதிர்வார்த்தைகள் கூறு.
3. கோணி - இதற்கு வேறு வார்த்தை சொல்.
4. கீழ்வரும் பன்மைச் சொற்களுக்கு ஒருமைச் சொற்களை எழுது :—

பன்மை	ஒருமை
1. கைகள்	
2. சிறுவர்	
3. சொற்கள்	
4. கால்கள்	
5. பெண்கள்	
6. கதவுகள்	
7. கண்கள்	
8. ஆடைகள்	
9. கட்டிடங்கள்	
10. மாணவர்	



13. கந்தசாமியும் நாயும்

கருத்தாக	இதமுடனே	காப்பாய்
அரியதொரு	அமர்ந்தபோது	மாணவர்
கனிவாக	நகைத்தார்கள்	அமர்ந்தபோது
கந்தசாமி	வரும்வரைக்கும்	வாயினில்
சுந்தரம்	கஷ்டமுடன்	மொழியாமல்

(1) கந்தசாமி நாயொன்று
கருத்தாக வளர்த்துவந்தான்;
அந்த நாய்க்குச் சுந்தரமென்
றரியதொரு பெயரும்இட்டான்.

(2) சுந்தரமோ எப்பொழுதும்
துணைபிரியா திருக்கும்அம்மா!
கந்தனுமே அதனிடத்தில்
கனிவாக நடந்திடுவான்.

(3) அன்றொருநாள் பள்ளிக்கும்
அதுகூடப் போயிற்று;
கண்டவர்கள் சத்தம்இட்டுக்
கைகொட்டி நகைத்தார்கள்.

(4) அதனாலே ஆசிரியர்
அதைவெளியே அனுப்பிவிட்டார்;
இதமுடனே சென்றநாயும்
இருந்ததவன் வரும்வரைக்கும்.

(5) கந்தசாமி வெளியில்வந்து
கஷ்டமுடன் அமர்ந்தபோது
சுந்தரமும் வந்தவன்றன்
தொடையினிலே தலையைவைத்து

(6) "நீஇருக்க என்னபயம்!
நீகாப்பாய்! என்பதுபோல்
வாயினிலே மொழியாமல்
வாலாலே காட்டியது.

(7) இதைப்பார்த்த மாணவர்கள்
"இஃதென்ன? உரை"என்ன,
அதைக்கேட்ட ஆசிரியர்
அன்பன்பு! என்றாரே.

கேள்விகள்

1. சுந்தரம் என்பது யார்?
2. கண்டவர்கள் ஏன் கைகொட்டி நகைத்தார்கள்?
3. நாய் வாலை என்ன கருத்துக்கொண்டு ஆட்டியது?
4. ஆசிரியர் மாணவர்களுக்கு என்ன பதில் கூறினார்?

பயிற்சி

1. கருத்தாக, இதமுடன் - இவற்றைத் தனித்தனி வாக்கியத்தி லமைத்து எழுது.
2. நகை, பயம் - இவைகளுக்கு எதிர் வார்த்தைகள் கூறு.
3. கருத்து, கறுத்து - இவற்றின் பொருளை அறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுது.



14. திரிசிரபுரம்

திருச்சிராப்பள்ளி	திருவானைக்கா	விருத்தாசலம்
பலகாரணம்	சிவஸ்தலம்	ஈரோடு
புராணம்	வெள்ளைநாவல்	புதுக்கோட்டை
மலை உச்சி	சிவபெருமான்	இராமேஸ்வரம்
தாயுமானசுவாமி	தேவாரப்	திருவனந்தபுரம்
கர்ப்பவதி	பாடல்கள்	ஏஜண்ட்
தக்ஷிணகங்கை	தென்னிந்திய	காரியாலயம்
தமிழ்ப்பாவை	ரயில்வே	பொன்மலை
கொள்ளிடம்	ரயில்வே	உறையூர்
கரியமேனி	ஜங்ஷன்	அர்ச் ஜோஸப்
ஈசானியத்தில்	தஞ்சாவூர்	கல்லூரி

திரிசிரபுரம் என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் தலைநகரமாகும். திரிசிரபுரம் என்பது இக்காலத்தில் திருச்சிராப்பள்ளி, திருச்சிணப்பள்ளி

எனவும் வழங்குகிறது. இந்த நகரத்துக்கு இப்பெயர் வந்ததற்குப் பலகாரணங் கூறுவர்.

ஒரு காலத்தில் இந்த நகரில் மூன்று தலைகளை யுடைய இராக்ஷசன் ஒருவன் இருந்தான். அவன் இங்கிருந்து கடவுளை நோக்கிக் கடுந்தவம் செய்தான். அதனால் இந்த நகருக்குத் திரிசிரபுரம் எனப் பெயர் வந்தது என்று ஒருபுராணம் கூறுகிறது. திரிசிரபுரம் என்பது இக்காலத்தில் திருச்சிராப்பள்ளி எனவும் திருச்சினப்பள்ளி எனவும் வழங்குகிறது.

இந்த நகரின் நடுவே அழகிய சிறு குன்று ஒன்று இருக்கிறது. குன்று என்பது சிறுமலை. மலைக்குச் சைலம் என்று மற்றொரு பெயருமுண்டு. இதனால் இந்த நகரம் திரு - சைல - புரம் என அழைக்கப் பட்டதாம். பின்னர் அப்பெயர் திரிந்து திருச்சிராப் பள்ளி எனவும் திருச்சினப்பள்ளி எனவும் ஆயிற்றாம்.

இந்த நகரிலுள்ள மலையில் இரண்டு கோவில்கள் இருக்கின்றன. மலை உச்சியிலுள்ளது உச்சிப்பிள்ளை யார் கோவில். மலைமேல் தாயுமான சுவாமி கோவில் இருக்கிறது. ஒருகாலத்தில் இந்த நகரில் செட்டி மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பத்துமாதக் கர்ப்ப வதியாய் இருந்தாள். அவளுடைய பேறுகாலத்துக்கு அவள்தாயார் வருவது வழக்கம். தாயார் புறப்பட்டு வரும்போது ஆற்றில் பெருவெள்ளம் வந்துவிட்டது. அதனால் அவளால் ஆற்றைக் கடந்துவந்து மகளுக்கு உதவிசெய்ய முடியவில்லை. இதற்குள் செட்டிமகள்

இடுப்புநோவு எடுத்துக் கஷ்டப்பட்டாள். உடனே கடவுள் செட்டி மகளின் தாய்போல அவள் வீட்டுக்கு வந்து அவளுக்கு வேண்டிய உதவியெல் லாம் செய்தார். தாய்போல வந்து உதவி செய்த தால் அங்குள்ள கடவுளுக்குத் தாயுமான சுவாமி என்ற பெயர் வந்தது. இக்கடவுளுடைய பெயரே தாயுமான சுவாமி என்ற மகானுக்குப் பிற்காலத்தில் பெயராக இடப்பட்டு வழங்கிற்று.

இந்த நகரம் தக்ஷிண கங்கை யென்றும், தண் தமிழ்ப்பாவை என்றும் புகழப்பட்ட காவிரியாற்றின் கரையிலிருக்கிறது. இந்த நகரத்தின் பக்கத்தில் நதி காவிரி எனவும் கொள்ளிடம் எனவும் இரண்டாகப் பிரி கிறது. காவிரி, கொள்ளிடம் என்ற இரண்டு நதிகளுக்கு மிடையே ஸ்ரீரங்கம் என்ற ஊர் இருக்கிறது. இது ஒரு பெரிய வைஷ்ணவ ஸ்தலம். இந்த ஸ்தலத்தில் திருமால் பள்ளிகொண்டிருக்கிறார். இந்தக் கோவி லுக்குப் பெரிய கோவிலென்றும் பெயர். இங்கு உள்ள ஆலயம் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. அது மிக அழகிய வேலைப்பா டமைந்தது. இந்த நகரில் கரிய மேனியும் பவளம்போன்ற சிவந்த உதடும், தாமரை போன்ற கண்ணும் உடையவனுய்ப் பள்ளிகொண் டிருக்குந் திருமாலைப் பல ஆழ்வார்கள் புகழ்ந்து பாடியிருக்கின்றனர்.

இந்த நகரத்திற்கு ஈசானியத்தில் திருவானைக்கா என்ற சிவஸ்தலம் ஒன்று இருக்கிறது. இந்த

ஸ்தலத்தில் பழைய வெள்ளைநாவல் மரம் ஒன்று இருக்கிறது. இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இத் தலத்தில் உள்ள சிவபெருமானைச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவரும் தங்கள் தேவாரப்பாடல்களால் புகழ்ந்திருக்கின்றனர்.

இந்த நகரம் தென்னிந்திய ரயில்வேப் பாதையில் இருக்கிறது. இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷன். இந்த நகரத்திலிருந்து ரயில் வண்டிகள் தஞ்சாவூர் வழியாகவும் விருத்தாசலம் வழியாகவும் சென்னைமா நகரத்துக்கும், ஈரோட்டுக்கும், புதுக்கோட்டை வழியாக இராமேஸ்வரத்துக்கும், மதுரைவழியாகத் தூத்துக்குடி, திருவனந்தபுரம், இராமேசுரம் முதலிய இடங்களுக்கும் செல்லுகின்றன. இவ்விடத்தில் தென்னிந்தியரயில்வே ஏஜெண்டின் காரியாலயமும், மற்றும் இதர முக்கிய ரயில்வேக் காரியாலயங்களும் இருக்கின்றன. இந்த நகரத்தின் பக்கத்தில் தென்னிந்திய ரயில்வேக் கம்பெனியாரின் பெரிய தொழிற்சாலை இருக்கும் பொன்மலை இருக்கிறது.

இந்த நகரின் பக்கத்தில் பழைய காலத்தில் சோழ மன்னர்களின் சிறந்த தலைநகரமாக விளங்கிய உறையூர் என்பது சிறு கிராமமாகக் காணப்படுகிறது. இந்த நகரில் அர்ச் ஜோஸப் கல்லூரி, நேஷனல் கல்லூரி என்ற இரண்டு சிறந்த கல்லூரிகளும், பல கலாசாலைகளும் இருக்கின்றன.

கேள்விகள்

(1) திரிசிரபுரத்திற்குப் பெயர்வந்த காரணம் யாதாகச் சொல்லப்படுகிறது?

(2) காவிரியின் வேறொரு பெயர் என்ன?

(3) திரிசிரபுரத்திற்கு அருகில் உள்ள இரண்டு க்ஷேத்திரங்கள் எவை?

(4) திருச்சியிலிருந்து இரயில் பாதைகள் எங்கெங்கே செல்கின்றன?

பயிற்சி

(1) புகழ்ந்து, புறப்பட்டு, திரிந்து—இவைகளைத் தனித் தனியே வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) உச்சி, புகழ்—இவைகளுக்கு எதிர் வார்த்தைகளை எழுது.

(3) கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

(1) மலைமேல்——கோயில் இருக்கிறது.

(2) திரிசிரபுரத்துக்கு——ஸ்ரீரங்கம் இருக்கிறது.

(3) ஸ்ரீரங்கத்தில்——பள்ளிகொண்டிருக்கிறார்.

(4) கீழ்வரும் இரண்டு இரண்டு வாக்கியங்களைச் சேர்த்தெழுது:—

(1) திருவானைக்காவில் உள்ள சிவபெருமானைத் திருநாவுக்கரசர் பாடினார்.

(2) திருவானைக்காவில் உள்ள சிவபெருமானைத் திருஞான சம்பந்தரும் பாடியுள்ளார்.

(3)

(1) ஸ்ரீரங்கம் பெரிய வைஷ்ணவ ஸ்தலம்.

(2) இந்த ஸ்தலத்தில் உள்ள பெருமானைப் பல ஆழ்வார்கள் பாடியுள்ளார்கள்.

(3)

(1) நேற்றுக் கடற்கரையில் பெரிய கூட்டம் ஒன்று நடந்தது.

(2) அக்கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் போயிருந்தார்கள்.

(3)

பயிற்சி

வண்டிகள் பல ஊர்களுக்குச் செல்கின்றன-செல்கின்றன என்னும் வார்த்தை வினைச்சொல். வினையைச் சொல்வது வினைச்சொல். செல்கின்றன — இந்த வினைச் சொல் அர்த்தத்தில் முடிந்திருக்கிறதா, இல்லையா? அர்த்தமுள்ள வினையை என்ன சொல்வது? வினை முற்று என்று சொல்கிறோம்.

(5) கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து வினைமுற்றுக்களை எடுத்தெழுது:—

(1) தையற்காரன் துணி தைக்கிறான்.

(2) கமலம் பாட்டைப் பாடுகிறாள்.

(3) பறவை வானில் பறக்கிறது.

(4) என்னோடு ஐவர் வந்தனர்.

(5) நான்கு பெண்கள் கோலம் போடுகிறார்கள்.

(6) ஐந்து எருதுகள் மேய்கின்றன.

15. கடிதங்கள்

பவளக்காரத் தெரு	தாலூகா	அச்சிட்ட
அக்டோபர்	கெட்டூர்	கையொப்பம்
குடிபோகிறோம்	திருவாளர்	வகுப்பு
குடிபுகுதல்	ராமசாமி	ராஜமன்னார்
ஒருவழி	முதலியார்	புதுத்தெருவு
இப்படிக்கு	மேல்பார்த்து	ஆரம்பப்பாட சாலை
தென்காசி	ரஜா	
	புதுவீடு	

அழைப்புக் கடிதம்

50, பவளக்காரத் தெரு,
சென்னை,
20, அக்டோபர், 1939.

என் அன்புள்ள பழனிக்கு,

நீ நீண்ட காலமாகக் கடிதம் எழுதாமல் இருந்து விட்டாய். அதன் காரணம் இன்னது என்பது எனக்கு விளங்கவில்லை.

வருகிற நவம்பர் மாதம் முதல் தேதி நாங்கள் எங்களுக்கு என்று கட்டியிருக்கும் புதிய வீட்டிற்குக் குடிபோகிறோம். குடிபுகுதலைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று என் பெற்றோர்கள் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அந்த விசேஷத்துக்கு உன் பெற்றோர்களை வரும்படி என் தந்தை ஒருகடிதம் எழுதியிருக்கிறார். ஆகையால் நீயும் உன் பெற்றோருடன்

ஒருவழி இவ்விடம் வந்து போகவேண்டுமென்று உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவ்விடமுள்ள நம் நண்பர் துரைசாமி, முருகேசன் இருவரையும் நான் கேட்டதாகச் சொல்லவும்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
சோழ.

விலாசம் :—

தென்காசித்தாலூக்கா,
நெட்டூர் போஸ்டு,
நெட்டூரிலிருக்கும்
திருவாளர்,
இராமசாமி முதலியாரவர்கள்,
மேல்பார்த்து
பழனிக்குக் கொடுப்பது.

நெட்டூர்,
23—10—39.

என் அன்புள்ள சோமுக்கு,

நீ 20-10-39ல் எழுதிய அழைப்புக் கடிதம் கிடைத்தது கண்டு அதிக சந்தோஷ மடைந்தேன். எனக்கும் உன்னை நேரில் பார்க்க வேண்டுமென்ற அவா இருக்கிறது. உன் தந்தையார் என் தந்தைக்கு அனுப்பியிருந்த அழைப்புக் கடிதம் வந்தது. என் தந்தையும் தாயாரும் புறப்பட்டு வருவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். நானும் அவர்கள் கூடவர முயலுகிறேன்.

நம் நண்பர் துரைசாமி, முருகேசம் ஆகிய இருவரிடமும் நீ அவர்களை விசாரித்ததாகக் கூறும்படி எழுதியிருந்ததை நான் அவர்களிடம் கூறினேன். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். மற்றவை நேரில்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
பழனி.

விலாசம்:—

திரு. சோழு,
C/o. திருவாளர் தாண்டவராய முதலியார்,
50, பவளக்காரத் தெரு, சென்னை.

ரஜாக் கடிதம்

50, பவளக்காரத் தெரு,
சென்னை,
31—10—39.

ஐயா,

நாளை என் பெற்றோர் புதிதாகக் கட்டியிருக்கும் வீட்டிற்குக் குடிபோவதாகத் தீர்மானித் திருக்கிறபடியாலும் புதுவீடு புகுதலைச் சிறப்பாக நடத்தப் போகிறபடியாலும் எனக்கு நாளைமட்டும் ஒருநாள் ரஜாக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த விசேஷத்தைக் குறித்து அச்சிட்ட கடிதம் ஒன்றும் தங்கள் பார்வைக்கு இக்கடிதத்துடன் அனுப்பியிருக்கிறேன். என் தகப்பனாரும் எனக்கு ரஜா கொடுக்கும்

படி இக்கடிதத்தில் எழுதிக் கையொப்ப மிட்டிருப் பதைத் தாங்கள் கவனிக்குமாறு தங்களைவேண்டு கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
சோமு.
(நான்காவது வகுப்பு மாணவன்.)

விலாசம் :—

நான்காம் வகுப்பு உபாத்தியாயர் அவர்களுக்கு,
இராஜமன்னர் செட்டி உயர்தர
ஆரம்பப் பாடசாலை,
94-95, புதுத்தெருவு,
சென்னை.

பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூட ஸ்தாபிதநாள் கொண்டாட்டத்திற்கு வெளியூர் சென்றிருக்கும் உன் தந்தையைத் தலைமை உபாத்தியாயர் வரும்படிச் சொன்னதாக ஒரு கடிதம் எழுது.

2. உன் தமையன் கலியாணத்திற்கு உன் நண்பன் ஒருவனை வரும்படி கடிதம் ஒன்று எழுது.

16. பீமனும் பகாசூரனும்

வட இந்தியா
அஸ்தினபுரம்
திருதராஷ்டிரன்
துரியோதனன்
பாண்டு
தருமன்
அருச்சுனன்
நகுலன்
சகாதேவன்
பஞ்சபாண்டவர்கள்
இளமையில்
கொன்றுவிட
சூழ்ச்சி
அரக்குமாளிகை
ஆரம்பம்

வேதியர்வேடம்
வேத்திரகீயம்
அரக்கன்
பகாசூரன்
தினந்தோறும்
உடன்படிக்கை
அனுப்பிக்கொண்டு
அழுகை ஒலி
கதறியழுது
மன இரக்கம்
பராக்கிரமசாலி
இசைந்தனர்
நாழிகை
உண்டுகொண்டு
கோபம் பொங்கி

கவளங்களை
சண்டை
சித்தமானன்
கடும்போர்
மகாபலசாலி
வெகுவிரைவில்
ஆச்சரியம்
விளக்கமாக
பிராமணக் குடும்பம்
உயிர் அளித்து
நீடூழி வாழ்க
செய்ந்நன்றி
உண்மை
உருவம்
வெளியேறினர்

முன்னொரு காலத்தில் வட இந்தியாவில் இருந்த அஸ்தினபுரம் என்னும் ஊரைத் திருதராஷ்டிரன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் பிறவிக் குருடன். அவனுக்குப் பாண்டு என்ற தம்பி ஒருவன் இருந்தான். திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலாகப் பல புதல்வர்கள் பிறந்தார்கள். பாண்டுவுக்குத் தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்று ஐந்து புதல்வர்கள் இருந்தார்கள். எல்லோரும் இவர்களைப் பஞ்ச பாண்டவர்கள்

அல்லது பாண்டவர்கள் என்று அழைத்தார்கள். துரியோதனுதியரும் பாண்டவர்களும் ஒன்ருகவே வளர்ந்து வந்தார்கள்.

துரியோதனனுக்கு இளமையிலிருந்தே பாண்ட வர்கள்மேல் பொருமை இருந்தது. அவன் அவர்களை எப்படியாவது கொன்றுவிடவேண்டும் என்று எண் ணினுன். அதற்காக அவன் அரக்குமாளிகை ஒன்று கட்டி அவர்களை அதில் குடியிருக்கச் செய்தான். பீமன் துரியோதனன் சூதைத் தெரிந்துகொண்டான். அதற்காக அவன் முன்னேற்பாடு செய்திருந்தான். துரியோதனன் சூழ்ச்சியால் அரக்குமாளிகைக்குத் திடீ ரெனத் தீ வைக்கப்பட்டது. அரக்குமாளிகை எரிய ஆரம்பித்தது. பீமன் தன் சகோதரர்களையும் தாயா ரையும் தூக்கிக்கொண்டு வேத்திரகீயம் என்ற ஊருக் குப் போய்விட்டான். தப்பினவர்கள் வேதியர் வேடம் பூண்டு அவ்வூரில் ஒரு வீட்டில் வசித்து வந்தனர். துரியோதனனும் மற்றவர்களும் பஞ்சபாண்டவர்கள் தங்கள் தாயாராகிய குந்தியோடு இறந்துவிட்டதாக எண்ணினுர்கள். இது நிற்க.

அந்த வேத்திரகீயம் என்ற ஊருக்குப் பக்கத்தில் இருந்த காட்டில் ஓர் அரக்கன் வசித்து வந்தான். அவன் பெயர் பகாசூரன் என்பது. அவன் அந்த ஊருக்குள் புகுந்து ஜனங்களைக் கொன்று தின்று வந்தான். அதனுல் அவ்வூரார் தினந்தோறும் வண்டி நிறையச் சோறும் ஓர் ஆளும் பகாசூரனுக்குக்

கொடுத்துவிடுவதாக அவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஒவ்வொரு வீட்டாரும் முறைபோட்டுக்கொண்டு பகாசூரனுக்கு ஒரு வண்டிச் சோறும் வீட்டுக்கு ஓர் ஆளும் அனுப்பிக்கொண்டிருந்தனர்.

பாண்டவர்கள் தங்கியிருந்த வீட்டில் ஒருநாள் அழுகை ஒலி மிகுந்திருந்தது. அந்த வீட்டார் 'கோ' என்று கதறி அழுதுகொண்டிருந்தனர். குந்தி அவர்களிடம் சென்று "என்னகாரணம்? என் நீங்கள் அழுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு, அவர்கள் பகாசூரன் வரலாறு முழுதும் சொல்லி "இன்று அவனுக்கு இரை அனுப்பவேண்டிய முறை எங்களுடைய வீட்டினுடையது" என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

இதைக் கேட்டதும் குந்திக்கு மன இரக்கம் உண்டாயிற்று. அவள் அவர்களைத் தேற்றி, "நீங்கள் அழவேண்டியதில்லை. எனக்கு ஐந்து புதல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை அனுப்புகிறேன்" என்றாள். அவர்கள் குந்தியை நோக்கி, அம்மா, "எங்களுக்காக நீங்கள் உங்கள் புதல்வனையா இழப்பது? வேண்டியதில்லை" என்றார்கள். அதற்குக் குந்தி, "என் புதல்வர்கள் பராக்கிரமசாலிகள். ஒருவன் அந்த அரக்கனைக் கொன்றும் வரலாம்" என்றாள். அவ்வீட்டாரும் அதற்கு இசைந்தனர்.

சிறிது நாழிகைக்குள் பீமன் ஒரு வண்டிச் சோற்றோடு பகாசூரன் இருந்த காட்டை நோக்கிப் புறப்

பட்டான். போகும் பொழுதே பீமன் வண்டியில் இருந்த சோற்றை உண்டு கொண்டே போனுன். காடும் நெருங்கியது. அசுரன் தனக்கு என்று அனுப்பிய சோற்றைப் பீமன் உண்டு கொண்டு வருவதைக் கண்டு கடுங்கோபம் கொண்டான்; பீமனே அவனைப் பற்றிக் கவலைப்படாமல் சோற்றுக் கவளங்களை வாய்க்குள் விட்டுக்கொண் டிருந்தான். அவனுக்குக் கோபம் பொங்கியெழுந்தது. அவன் ஓடி வந்து பீமனைத் தாக்கினுன். பீமனே அச்சமயத்தில் மிகுந்திருந்த கவளங்களையும் உள்ளே தள்ளிவிட்டுச் சண்டைக்குச் சித்தமானுன்.

பீமனுக்கும் பகாசூரனுக்கும் கடும்போர் நடந்தது. பீமன் மகாபலசாலியானதால் வெகு விரைவில் பகாசூரனைக் கொன்றுவிட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு ஊர்வந்து சேர்ந்தான். ஜனங்கள் பீமன் திரும்பிவருவதைக்கண்டு ஆச்சரியங் கொண்டார்கள். பீமன் ஊராருக்கு நடந்த நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கமாகச் சொன்னுன். எல்லோரும் பீமனை வாழ்த்தினர். அந்த வீட்டுப் பிராமண குடும்பத்தாரும் பீமனைப் பார்த்து, ‘எங்களுக்கு உயிர் அளித்த தெய்வமே, எங்கள் ஊரையே பெரிய துன்பத்திலிருந்து பாதுகாத்தாய், நீ நீடூழி வாழ்வாயாக” என்று வாழ்த்தினர். குந்திதேவிக்கும் தங்களுடைய செய்ந்நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதன்பின் பஞ்சபாண்டவர்களும் குந்தியும் உண்மை உருவத்துடன் அவ்வூரைவிட்டு வெளியேறினார்கள்.

கேள்விகள்

(1) பாண்டவர்கள் தங்கியிருந்த வேத்திரகியத்தில் என்ன சம்பவம் நடந்துகொண்டிருந்தது?

(2) பகாசூரன் எவ்வாறு கொல்லப்பட்டான்?

(3) எல்லோரும் வீமனை என்ன செய்தார்கள்? ஏன்?

பயிற்சி

(1) வாழ்வாயாக, செய்ந்நன்றி யறிதலை - இவைகளை வாக்கியத்திலமைத்து எழுது.

(2) கீழ் வருபவைகளைப் பொருள் சிதையாதபடி வாக்கியங்களாக அமைத்தெழுது :—

(1) வெளியேறினார்கள், அவ்வூரைவிட்டு, பாண்டவர்கள், ஒருநாள்.

(2) இருந்தது, துரியோதனனுக்கு, இருந்தே, இளமையில், மேல், பாண்டவர்கள், பொறாமை.

(3) வந்தான், வசித்து, அரக்கன், காட்டில், ஒரு, ஓர்.

(3) கோடிட்ட இடங்களில் கீழ்வரும் வினைமுற்றுக்களிலிருந்து தேர்ந்தெடுத்து வாக்கியங்களைப் பூர்த்திசெய்:-

1. உண்கிறாள்	4. வனைகிறான்
2. குடிக்கிறான்	5. கட்டுகிறான்
3. நெய்கிறான்	6. வெளுக்கிறான்.

(1) குயவன் பானையை ——————.

(2) கொத்தன் வீட்டைக் ——————.

(3) சேணியன் துணியை ——————.

(4) வண்ணான் துணியை ——————.

(5) இராமன் தண்ணீர் ——————.

(6) சீதை சோறு ——————.

17. மண்ணெண்ணெய்

மண்ணெண்	துளைக்க	தைலம்
ணெய்	பம்புகள்	பூகம்பம்
துர்நாற்றம்	கெட்டியாக	புதைந்துபோகும்
மணற்பாங்	கசடு	பூசாரம்
காகவே	வாசலைன்	கெரோசின்
மணற்கற்கள்	பர்மாதேசம்	நிலக்கரி
கடினமானபாறை	அமெரிக்கா	வாதநோய்
கடற்கரையோரம்	மெக்ஸிகோ	மலிவாக
ஈரமணல்	ருமேனியா	பிரகாசம்
துவாரம்	போலந்து	பள்ளத்தாக்கான
வீணாகப்போகும்	பாரசீகம்	நீராவியந்திரம்
துறப்பணம்	ஏராளமாக	ரஷ்யா

ஆதியில் எள்ளிலிருந்து நெய் எடுத்தார்கள். அதற்கு எண்ணெய் எனப் பெயர் வந்தது. பின்னர் அதுபோன்று பலவகைக்கொட்டை, பருப்பு, முத்து இவைகளை ஆட்டிப் பிழிந்து நெய் எடுத்தார்கள். அப்படி எடுத்த நெய்களுக்கும் அப்பொருள்களோடு எண்ணெய் என்ற சொல்லையே சேர்த்தனர்.

ஆனால் ஒருவிதப் பொருளிலிருந்தும் எடுக்கப் படாமல் ஊற்றாகவரும் ஒருவகைத் தைலத்துக்கு எண்ணெய் என்ற பெயரிட்டது ஆச்சரியமே. அந்த எண்ணெய்தான் மண்ணெண்ணெய் என்பது. அதை ஆங்கிலத்தில் கெரோசின் ஆயில் என்கின்றனர்.

மண்ணெண்ணெய் பூமிக்குள்ளிருந்து எடுக்கப் படுகிறது. "நாடு காடாகும், காடு நாடாகும்" என்பது

பொதுஜன வர்க்கு. அதனுல் ஒருகாலத்தில் இருந்த ஒருபெருங்காடு பூகம்ப முதலிய பல நிகழ்ச்சிகளால் பூமிக்குள் புதைந்துபோகும். மண்ணூடவே மரங்க ளெல்லாம் அழுகி, கரியாகிப்போகின்றன. மரங்களி லிருந்த தைலம் எல்லாம் பூசாரத்துடன் சேர்ந்து நிலக்கரியின் பக்கத்தில் ஊற்ருகக் கிடைக்கிறது. அதையே சுத்தம் செய்து மண் எண்ணெய் என்கிருர்கள்.

முதல் முதல் இந்த எண்ணெயை அமெரிக்கரே சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித் தனர். அவர்கள் இதை மருந்தாக உபயோகித்தனர். வாதநோய்க்கு மண்ணெண்ணெயைப் பூசினுல் நோய் மட்டுப்படும்.

விளக்கெரிக்கும் எண்ணெய்களில் மண்ணெண் ணெய் விலை மலிவாக இருக்கிறதனுலும், மற்ற எண் ணெய்களைவிட மண்ணெண்ணெய்க்குப் பிரகாசம் அதிகமாக இருப்பதாலும் எல்லோரும் மண்ணெண் ணெயையே உபயோகிக்க ஆரம்பித்தனர்.

மண்ணெண்ணெய் அகப்படும் இடத்தைச் சில அடையாளங்களால் கண்டு பிடிக்கலாம். அது பள் ளத்தாக்கான சதுப்பு நிலத்தில்தான் அகப்படும். அடியில் மண்ணெண்ணெய் இருந்தால் அங்கு ஒரு வகை துர்நாற்றம் வீசும். பக்கத்திலுள்ள நீர் நிலை களில் எண்ணெய் மிதக்கும். பூமிக்குள் மணற்பாங் காகவோ அல்லது மணற்கற்கள் மிகுந்தோ உள்ள

இடங்களில் கடினமான பாறைகள்மீது எண்ணெய் காணப்படுகிறது. கடற்கரை யோரத்திலுள்ள ஈர மணல் நீரைப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல மணலோ அல்லது துவாரமுள்ள கற்களோ எண்ணெயைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

தொழிலாளிகள் மண்ணெண்ணெய் உள்ள இடத்தில் துளைசெய்து மண்ணெண்ணெய் எடுக்கிறார்கள். நிலத்தில் துளைசெய்தால் மண்ணெண்ணெய் மிகவும் வேகமாக வெளிக் கிளம்பிவரும். அப்படி அது வந்தால் அதைப்பிடிப்பது கடினம். எண்ணெயும் வீணுகப் போகும். அதனுல் எண்ணெய் எடுப்பவர்கள் முதலில் நூறு அடி உயரமுள்ள பரண்கட்டி அதன் உள்ளே நீண்ட குழாய்களைத் தொங்கவிட்டு அக்குழாய்களின் வழியே துறப்பணத்தைச் செலுத்தி நிலத்தை நீராவி யந்திரத்தால் துளை செய்வார்கள். சில இடங்களில் எண்ணெய்வரும் வேகமானது இப்பரணையும் தள்ளிவிடுமாம். எண்ணெய் இருக்கும் பூமியின் பாகத்தை அடைவதற்கு ஒரு மைல் ஆழம் கூடத் துளைக்கவேண்டுமாம். சில இடங்களில் மண்ணெண்ணெய் இயற்கையாய் உண்டான துவாரங்களின் வழியாக வெளிவர ஆரம்பிக்கும். அப்படிப்பட்ட இடங்களில் துளைசெய்யவேண்டிய அவசியம் இல்லை. இப்படி வருவது நின்றபின் எண்ணெய் எடுக்கும் பம்புகளைக்கொண்டு எண்ணெய் எடுப்பது வழக்கம்.

மண்ணுள்ளிருந்து கிடைக்கும் இந்த எண்ணெய் முதலில் அழுக்காகவும், சிவப்பும் நீலமும் கலந்த நிறமுள்ளதாகவும் கெட்டியாகவும் இருக்கும். அதைச் சிறிது சுத்தம் செய்வதால் குருட் ஆயில் கிடைக்கிறது. இது சக்கரங்களுக்குப் போடப்படு கிறது. இது சக்கரங்களை இலேசாக ஓடச்செய்யும். இன்னும் இதைச் சுத்தப்படுத்தினால் விளக்கு எரிக்கும் மஞ்சள் மண்ணெண்ணெய் கிடைக்கிறது. இதையும் சுத்தம் செய்தால் நீலமும் வெண்மையும் கலந்த சுத்த மான மண்ணெண்ணெய் கிடைக்கிறது. இந்த வெள்ளை மண்ணெண்ணெயைச் சுத்தம் செய்வதால் பெட்ரோல் என்னும் எண்ணெய் கிடைக்கிறது. இந்தப் பெட்ரோல் மோட்டார் வண்டியையும் ஆகாய விமானங்களையும் ஓட்ட உதவுகிறது.

எண்ணெய் எடுத்தபின் மிகுந்திருக்கும் கசடு மெழுகுபோலிருக்கிறது. அந்த மெழுகைக்கொண்டு மெழுகு வர்த்தி செய்யப்படுகிறது. வாசலேன் என் பதும் இந்தக் கசடுமெழுகிலிருந்து செய்யப்படுவதே யாகும்.

மண்ணெண்ணெய் பர்மா தேசத்தில் கிடைக் கிறது. இது அமெரிக்கா, ரஷ்யாவின் தென்பாகம், மெக்ஸிகோ, ருமேனியா, போலந்து, பாரசீகம் முதலிய இடங்களிலும் ஏராளமாகக் கிடைக்கிறது.

மண்ணெண்ணெய் நம் நாட்டில் விளக்கு எரிப்ப தற்கு மிகவும் உபயோகப்படுகிறது. இப்போது

மண்ணெண்ணெய் விளக்கு இல்லாத கிராமம் நம் நாட்டில் உண்டோ ?

கேள்விகள்

(1) எண்ணெய் என்று ஏன் பெயர் வந்தது ?

(2) மண்ணெண்ணெய் எப்படி எடுக்கப்படுகிறது ?

(3) எல்லோரும் மண்ணெண்ணெயை ஏன் உபயோகிக்கின்றனர் ?

(4) மண்ணெண்ணெய் கிடைக்குமிடம் எவ்வாறிருக்கும் ?

பயிற்சி

(1) ஆட்டி, புதைந்து, பிரகாசம், அடையாளம் — இவைகளைத் தனித்தனி வாக்கியத்திலமைத்து எழுது.

(2) முத்து-இருபொருள் கூறு.

(3) பிரகாசம், துர்நாற்றம், உயரம் - இவற்றின் எதிர்ப்பதங்களைக் கூறு.

(4) (1) மண்ணெண்ணெய் — இருந்து எடுக்கப்படுகிறது.

(2) பக்கத்திலுள்ள நீர் நிலைகளில்——மிதக்கும்.

(3) மண் —— மரங்களெல்லாம் —— கரியாகிப் போகின்றன.

(4) முதல் முதல் இந்த எண்ணெயை —— கண்டு பிடித்தனர்.

இராமன் கோவிலுக்குப் போனன்
,, ,, போகிறுன்
,, ,, போவான்.

போனன், போகிறுன், போவான் என்பன இராமன் செய்யும் தொழிலைக் குறிக்கின்றன. தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

இதில் போனான் என்பது வினைமுடிந்ததைக் காட்டுவ தால் இறந்தகால வினைமுற்று.

இதில் போகிறான் என்பது வினை நிகழ்வதைக் காட்டுவ தால் நிகழ்கால வினைமுற்று.

இதில் போவான் என்பது வினைநிகழப் போவதைக் காட்டுவதால் எதிர்கால வினைமுற்று.

கீழ்வரும் வினைமுற்றுக்கள் இன்ன இன்ன காலம் என்று எழுதி அவைகளுக்கு மற்றக்கால வினைமுற்றுக்களையும் எழுது:-

வந்தார்	சொல்லுவார்	உண்கிறாள்
இயற்றினார்	கேட்பான்	பேசுவாள்
கூறுகிறார்	பார்ப்பான்	
இருக்கிறார்	தின்றான்	

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
வந்தார்	வருகிறார்	வருவார்



18. சைவ சமய குரவர்

திருஞான சம்பந்தர்	சிவபாதவிருதயர்	என்கடன்
திருநாவுக்கரசர்	பகவதியார்	பணி
மாணிக்க வாசகர்	சின்னஞ்சிறு	தொண்டு
கூட்டத்தார்	இசைப்பாக்கள்	இசைஞானியர்
கொள்கை	பதினுயிரம்	சடையனுர்
இஸ்லாம்மதம்	முந்நூற்று	நரசிங்கமுனேயர்
சமணமதம்	எண்பத்து	ஆயுட்காலம்
பௌத்தமதம்	நான்கு	உருக்கம்
சைவம்	தேவாரம்	சம்புபாதசாரியர்
வைஷ்ணவம்	திருவாமூர்	சிவஞானவதி
சுருக்கமாக	வேளாளர்	திருவாதவூர்
நாயன்மார்கள்	புகழனுர்	அரிமர்த்தன பாண்டியன்
சீகாழி	மாதினியார்	திருக்கோவையார்
அந்தணர்	அன்புடையவர்	திருவாசகம்
	பிரபலமதம்	
	வயிற்றுநோய்	

ஒருவர் அல்லது ஒரு கூட்டத்தார் அனுசரித்து நடக்கும் கொள்கையே சமயம் அல்லது மதம் எனப்படும். உலகில் இந்துமதம், கிறிஸ்துமதம், இஸ்லாம்மதம், சமணமதம், பௌத்தமதம் எனப் பலவகை உண்டு. இந்துமதத்தில் கிளைமதங்கள் பல உண்டு. அக்கிளை மதங்களில் முக்கியமான இரண்டு மதங்கள் சைவம் வைஷ்ணவம் என்பன. தமிழ் படிப்பவர்கள் இந்தச் சைவ வைஷ்ணவ மதங்களை அறிய வேண்டியது அவசியம்; இன்னும் இந்த மதங்களைப் பரவச் செய்தவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதும் முக்கியம்; ஏனென்றால் அடிக்கடி இப்பெரியோர்களுடைய பாட்டுகளைப்படிக்க வேண்டி வரும். ஆகையால் நீங்கள் இப்பாடத்தில் சைவசமய குரவர் நால்வருடைய வரலாற்றை மிகச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

சிவபெருமானைக் கடவுளாகக் கொண்டுள்ள மதம் சைவம். அந்தச் சைவ சமயத்தைச் சேர்ந்தோர் சைவர் எனப்படுவர். தமிழ் நாட்டில் அச்சைவ மதத்தைப் பரவச் செய்தவர்களே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பவர்கள். இவர்கள் நாயன்மார்கள் என்றும் கூறப்படுவார்கள்.

திருஞானசம்பந்தர் சீகாழி என்னும் ஊரில் இற்றைக்கு ஏறக்குறைய 1300 ஆண்டுகளுக்கு முன்பு அந்தணர் குலத்தில் சிவபாதவிருதயர் என்பவருக்

கும் பகவதியார் என்னும் அம்மையாருக்கும் பிறந்தவர். இவருக்கு மூன்றும் வயதிலேயே கவிபாடும் திறமை வந்து விட்டதாகக் கூறுவர். இவர் பதினாறு வயதுதான் உயிரோடு வாழ்ந்தார். இந்தச் சின்னஞ் சிறுவயதிற்குள் பாடிய இசைப்பாக்கள் பதினாயிரமாம். அவற்றுள் நமக்குக் கிடைத்துள்ளவை முந்நூற்று எண்பத்து நான்கு பதிகங்கள் ஆவன. இவருடைய பாக்களுக்குப் பொதுவாகத் தேவாரம் என்ற பெயர் வழங்குகிறது. தேவாரம் என்பதற்குக் கடவுளுக்குப் போடப்படும் பாட்டு மாலை என்பது அர்த்தம். தே-கடவுள். ஆரம்-மாலை.

திருநாவுக்கரசர் திருவாமூர் என்னும் இடத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவருடைய தந்தையார் புகழனார் என்பவர்; தாயார் மாதினியார் என்பவர். இவரும் திருஞானசம்பந்தரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள். இவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அன்புடையவர்களாகவும் இருந்தார்கள். நாவுக்கரசருக்குச் சிறுவயதிலே பல மதங்களைப்பற்றிப் படிக்கும் ஆசை இருந்தது. ஆகையால் இவர் தமிழ் நாட்டில் அக்காலத்தில் பிரபல மதமாயிருந்த சமண மதத்தைப் பற்றிப் படித்தார். சமணமதம் நல்ல மதம் என்று இவருக்குத் தோன்றியது. உடனே இவர் சைவ சமயத்தை விட்டுச் சமணமதத்தில் சேர்ந்துவிட்டார். சில காலம் சென்றதும் இவருக்கு வயிற்றுநோய் உண்டாயிற்று. இதனால் இவர் மறுபடியும் சைவசமயத்துக்கு வந்து

விட்டார். இவர் இப்படிச் செய்ததால் சமணர்கள் இவருக்குப் பலப்பல தீங்குகள் செய்தார்கள். நம் நாவுக்கரசர் இத்துன்பங்களுக்கு எல்லாம் தப்பி 81 வயது வரைக்கும் உலகில் வாழ்ந்தார். இவர் தம் முடைய வாழ்நாட்களை 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று கடவுள் தொண்டில் கழித்து வந்தார். நாம் இவரது பாட்டுக்களில் அருமையான கருத்துக்களைக் காணலாம். இப்பெரியாருடைய பாக்களும் பொதுவாகத் தேவாரம் என்றே சொல்லப் படும். இவருடைய பாட்டுக்களில் இப்போது நமக்குக் கிடைப்பவை முந்நூற்றுப் பதினொரு பதிகங்களே.

சுந்தரமூர்த்தி நாயனர் திருநாவலூர் என்னும் திருப்பதியில் பிராமணர் குலத்தில் சடையனருக்கும் இசை ஞானியார் என்ற அம்மையாருக்கும் பிறந்தவர். நரசிங்கமுனையர் என்னும் அரசர் இவரை எடுத்து வளர்த்தார். சுந்தரருடைய ஆயுட்காலம் 18 ஆண்டி லேயே முடிந்து விட்டது. இவர் இருந்த காலம் கி. பி. 9 ம் நூற்றாண்டு; அதாவது இவர் இன் றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் என்று கூறலாம். நமக்கு இப்போது இவருடைய பதிகங் களில் கிடைப்பன நூறு பதிகங்களே. அவைகள் படிக்கப் படிக்க இன்பமாயிருப்பதோடு உருக்கமா யிருக்கும். அவைகளும் தேவாரம் என்றே கூறப்படும்.

மேலே குறிக்கப்பட்ட மூவருக்கும் பிற்பட்ட காலத்தில் இருந்தவர் மாணிக்கவாசகர். இவர் சம்பு

பாதசாளியருக்கும் சிவஞானவதிக்கும் பிறந்தவர் என்பர். இவருடைய குலமும் பிராமண குலமே. இவர் பிறந்த ஊர் திருவாதவூர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடத்தில் மந்திரியாயிருந்தார். இவர் அவன் குதிரை வாங்கக் கொடுத்தனுப்பிய பணத்தைச் சிவத் தொண்டில் செலவுசெய்து விட்டார்; அதனுல் பல துன்பங்களுக்கும் ஆளானுர். மந்திரித் தொழிலை விட்டதும் இவர் பல திவ்விய ஸ்தலங்களுக்குச் சென்று கடைசியில் சிதம்பரத்தில் தமது 32-ம் வயதில் முத்தியடைந்தார். இற்றைக்கு ஏறக்குறைய 900 ம் ஆண்டுகளுக்கு முன் இருந்த மாணிக்கவாசகர், திருவாசகம் திருக்கோவையார் என்ற நூல்களை எழுதியுள்ளார். திருவாசகத்தில் 658 பாட்டுக்கள் உண்டு. திருக்கோவையாரில் 400 பாட்டுக்கள் உள. திருவாசகப் பாடல்கள் மிகவும் உருக்கமாயிருக்கும். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி.

கேள்விகள்

1. உலகிலுள்ள சிலமதங்களின் பெயர்களைக் கூறு.
2. திருஞானசம்பந்தருடைய தாய் தந்தையர் பெயர் என்ன?
3. நாவுக்கரசர் ஏன் சமண சமயம் புகுந்தார்?
4. சுந்தரமூர்த்தி பிறந்தது எவ்விடம்? அவர் யாரிடம் வளர்ந்தார்?
5. மாணிக்கவாசகர் ஏன் பல துன்பங்கள் அனுபவித்தார்?

பயிற்சி

1. மாலே, உருக்கமாக—இவற்றைத் தனித்தனி வாக்கியத்தி லமைத்து எழுது.

2. கடன்—இருபொருள் கூறு.
3. சுருக்கமாக—எதிர்ப்பதம் கூறு.
4. அந்தணர்—ஒருமை கூறு.
5. 1. சைவசமயத்தைச் சேர்ந்தோர்—எனப்படுவர்.
   2. சம்பந்தர்—வயதுதான் உயிரோடு வாழ்ந்தார்.
   3. நரசிங்கர் என்னும்—இவரை எடுத்து வளர்த்தார்.
   4. இவர்—பாண்டியனிடத்தில்—இருந்தார்.

6. கண்டு, பேச—இவைகள் தனியாக நிற்குமா? இவைகள் தனியாய் நில்லா. கண்டு சொன்னன், பேச வந்தாள் —கண்டு, பேச என்னும் சொற்கள் அர்த்தம் குறைந்த அதாவது எச்சமான வினைச் சொற்கள். ஆகையால் இவை எச்சம். இவை வினையோடு போய்ச் சேர்வதால் வினையெச்சங்கள்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள வினையெச்சங்களை எடுத்தெழுது:—

(1) கண்ணன் ஆடிப் பாடி நடந்தான்.
(2) நமது அரசர் இனிது பேசினர்.
(3) ஜயராமன் நன்ருய்ப் பேசுவான்.
(4) ஜேக்கப் பரீட்சையில் தேறிப்பதக்கம் பெற்ருன்.

19. தபாற் சாவடி

ரிஜிஸ்டர்	தந்தி
பார்சல்	தந்தி-மணியார்டர்
மணியார்டர்	ரிஜிஸ்டர்-தபால்
ரயில் பார்சல்	க்ஷேமநிதி

மாணவர்களே! முந்திய வகுப்பில் கடிதங்கள் எவ்வாறு ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்குப் போகின்றன என்பதைப்பற்றிப் படித்தீர்கள். இந்தப் பாடத்தில் தபாற்சாவடியில் என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன என்பதைப்பற்றிப் படிப்பீர்கள்.

தற்காலத்தில் உள்ளதுபோன்ற தபால் முறை முற்காலத்தில் இருந்ததில்லை. பழக்கப்பட்ட புறுக்களின் கழுத்தில் கடிதம் கட்டப்பட்டு அனுப்பப்பட்டது. தமிழ்நாட்டில் பழைய காலத்தில் ஓலையில் எழுதிய கடிதங்களை ஆட்கள்மூலமாய் அனுப்புவது வழக்கமாய் இருந்தது. வடநாட்டில் ஷெர்ஷா காலத்தில்தான் ஆட்கள் குதிரைமீது ஏறித் தபால் கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. அவரவர்களே தங்கள் தங்கள் ஆட்கள் மூலம் பணம், சாமான் முதலியவற்றை அனுப்பி வந்தார்கள். 1840-ம் ஆண்டிலே ரோலண்டு ஹில் என்பவர் மேல்நாட்டில் தபால் தலைகளைக் கண்டு பிடித்துத் தற்போது உள்ள தபால் முறையை ஏற்படுத்தினர். ஆங்கிலர் ஆட்சி ஏற்பட்ட பின்பே தபால் முறையை நம் நாட்டில் ஆங்கில அரசாங்கத்தினர் புகுத்தினர். அந்த முறை நாளடைவில் வளர்ந்து நமக்கு அதிக சௌகரியத்தைக் கொடுக்கலாயிற்று. இப்போது இமயத்தின் சாரலில் உள்ள ஊரிலிருந்து குமரிமுனைக்கு வெகுவிரைவில் கடிதப் போக்குவரத்து நடந்துவிடுகிறது. சிலமணிநேரத்திற்குள் நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றோர் மூலைக்குச் செய்தி அனுப்பப்படுகிறது.

தபாற்சாவடி நம்முடைய வாழ்வில் மிகவும் முக்கிய சாதனமாயிருக்கிறது. பணம் அனுப்புதல், பார்சல் அனுப்புதல், தந்திச்செய்தி அனுப்புதல், முக்கியமான கடிதங்களை ரிஜிஸ்டர் தபால் மூலம்

அனுப்புதல், பொது ஜனங்கள் சேர்த்துவைக்கும் பொருளை வாங்கிவைத்துக்கொண்டு அதற்குச் சிறிய வட்டி கொடுத்தல் ஆகிய வேலைகள் தபாற்சாவடியின் மூலம் நடைபெறுகின்றன. அந்தந்த வேலைக்குத் தகுந்தபடி கட்டணம் தபால் தலைகளை ஒட்டுவதன் மூலம் வாங்கப்படுகிறது. கட்டணமாக வாங்கும் பணத்தைக்கொண்டு தபால்வேலை நடைபெறுகிறது.

நீ ஒருவருக்குப்பணம் அனுப்ப வேண்டுமானல் தபாற் சாவடிக்குப்போய்ப் பணம் அனுப்புமிடத்தில் மணியார்டர் பாரத்தை வாங்கிப் பூர்த்திசெய்து தொகைக்குத் தக்கவாறு கட்டணம் கொடுத்தால் மணியார்டர் பதிவுசெய்யும் குமாஸ்தா குறித்த இடத்திற்குப் போகவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு முத்திரையிட்ட ரசீதைக்கொடுப்பான். பணம் குறிப்பிட்ட நாட்களுக்குள் பெறவேண்டியவரிடம் சேர்ந்து அவரிடமிருந்து அனுப்பியவர்க்கு ரசீதும் வந்து சேரும்.

விலையுயர்ந்த சாமான்களையும் ரயில் பார்சலில் அனுப்பக்கூடாத சிறுசிறு சாமான்களையும் எடைக்குத் தகுந்தாற்போலத் தபால் தலைகளை ஒட்டி அனுப்பினல் அவைகள் பத்திரமாய்ப் போய்ச்சேரும்.

தபால் கடிதம் எழுதினல் அது இடங்களின் தூரத்துக்குத் தகுந்தாற்போல நாட்சென்று போய்ச்சேரும். அதனல் மிகமிக அவசரமான செய்தியை அன்றே சில மணிநேரங்களில் கிடைக்குமாறு செய்வ

தற்குத் தந்திமூலம் அனுப்பவேண்டும். அதற்குத் தந்திப்பாரம் ஒன்றைத் தபாற்சாவடியில் வாங்கி, ஆங்கிலத்தில் சுருக்கமாக எழுதி அதற்குரிய கட்டணத்திற்குத் தபால் தலைகளை வாங்கி ஒட்டிக்கொடுக்க வேண்டும். அவசரமாகப் பணம் அனுப்பவேண்டுமானால் அதைத் தந்திமணியார்டர் மூலம் அனுப்பலாம். அதற்கு மணியார்டர் கூலியைவிட அதிகமான கூலிகொடுக்கவேண்டும்.

சாதாரணமான கடிதத்திற்குத் தபால்தலை ஒட்டி அனுப்பினால் போதுமானது. அதுபோய்ச் சேர்ந்துவிடும். ஆனால் முக்கியமான கடிதங்களைக் குறிப்பிட்டவரிடமே கொடுத்துப் பெற்றுக் கொள்வதற்காகக் கடிதத்திற்கு அதிகக் கட்டணம் கொடுத்துப் பதிவு செய்து அனுப்பவேண்டும். இதுதான் ரிஜிஸ்டர் தபால் என்பது.

நாம் கையில் பணம் வைத்திருந்தால் பணம் செலவாய்விடும். நமக்கு உதவிசெய்ய தபாற்சாவடியில் க்ஷேமநிதி உண்டு. அந்த க்ஷேமநிதியில் நாம் நான்கணா முதல் ஐயாயிரம் ரூபாய் வரையில் சிறிது சிறிதாகச் சேர்த்துவைக்கலாம். அதற்கு நாம் ஒன்றும் கட்டணமாகக் கட்டவேண்டியதில்லை. தபாற்சாவடி நம்முடைய பணத்திற்குச் சிறுதொகையை வட்டியாகக் கொடுக்கிறது. நமக்குப் பணம் வேண்டும்போது வேண்டிய தொகையை நாம் நேரில் சென்று கையெழுத்துப் போட்டோ ஆட்கள் மூலமாகக் கையெழுத்திட்டுப் பாரத்தைக் கொடுத்தனுப்

பியோ குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். தபாற்சாவடி க்ஷேமநிதி நமக்குச் சிக்கனக் குணத்தை வளர்க்க உதவிசெய்கிறது. மாணவர்களும் சிறுதொகையைத் தபாற்சாவடி க்ஷேமநிதியில் போட்டு வேண்டும்போது வேண்டிய தொகையை வாங்கிக்கொள்ளலாம். சிறிது சிறிதாகச் சேர்த்து வைப்பது பிற்காலத்தில் யாருக்கும் நன்மைசெய்யும். ஆகையால் நீங்கள் உங்கள் ஊரில் உள்ள தபாற்சாவடி க்ஷேமநிதியில் பணம் சேர்த்துவைக்கப் பழகுவீர்களாக.

கேள்விகள்

(1) முற்காலத்தில் தபால்கள் எவ்வாறு அனுப்பப்பட்டன?

(2) தற்போதுள்ள தபால் முறை எப்பொழுது ஏற்பட்டது? யாரால்?

(3) தபாற் சாவடியில் நடக்கும் வேலைகள் என்ன?

(4) நீ தபாற்சாவடி க்ஷேமநிதியில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறாய்?

பயிற்சி

(1) சௌகரியம், கட்டணம்—இவைகளைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

(2) கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்:—

(1) கடிதம், பழக்கப்பட்ட—கழுத்தில் கட்டப்பட்டு அனுப்பப்பட்டது

(2) —வாங்கும் பணத்தைக்கொண்டு—வேலை நடைபெறுகிறது.

(3) வந்த பையன் - வந்த என்னும் சொல் • தனித்து நிற்குமா? நிற்காது. இது அர்த்தத்தில் குறைந்த சொல் ஆகையால் இது எச்சம். வந்த என்னும் சொல் பையன் என்னும் பெயரைத் தழுவுவதால் அது பெயரெச்சமாகும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயரெச்சங்களை எடுத்தெழுது:—

(1) படித்த பையன் பரீட்சையில் தேறுவான்.

(2) நல்ல பையனோடு நட்புச் செய்.

(3) காற்றில் விழுந்த மரம் பெரிது.

(4) ஓடும் தண்ணீரில் சிறிய பிள்ளைகள் ஆடுவர்.

(5) ஆடி ஓடி விளையாடாத பிள்ளைகள் பலஹீனமடைவர்.

20. அதிவீரராம பாண்டியர்

மன்னர்கள்	மொழிபெயர்த்தல்	வேட்டைக்கு
திருநெல்வேலி	உலக விஷயம்	படை
இராமநாதபுரம்	விருப்பம்	இராவணன்
ஜில்லாக்கள்	வடமொழி	இராமன்
பரம்பரை	தமையனர்	பரதன்
தென்காசி	சந்தோஷம்	நறுந்தொகை
பகுதி	கண்ணுற்ற	நம்பிக்கை
நல்லூர்	மிகச்சிறந்த	நிலையாமை
கப்பம்	நைடதம்	அரியவிஷயம்

பாண்டியர்கள் என்னும் பெயருடையவர்கள் பாண்டி நாட்டை ஆண்ட மன்னர்கள் ஆவார்கள். பாண்டி நாடு என்பது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் என்ற மூன்று ஜில்லாக்களடங்கிய பிரதேசம் ஆகும். பாண்டியர்கள் தமிழைப்படித்தும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும், தமிழ் நூல்களை இயற்றியும் தமிழை வளர்த்து வந்தார்கள்.

சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன் பாண்டியர் பரம்பரையில் வந்த அதிவீர ராம பாண்டியர் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தென் காசி என்னும் நகரில் இருந்துகொண்டு பாண்டி நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தார். அவருடைய தமையன் வரதுங்க ராம பாண்டியர் என்பவர் கரிவலம் வந்த நல்லூரிலிருந்துகொண்டு மற்றொரு பகுதியை ஆண்டு வந்தார். இருவரும் மதுரையிலிருந்த நாயக்க மன்னருக்குக் கப்பம் கட்டி வந்தனர்.

அதிவீரராமபாண்டியரும் வரதுங்க ராம பாண்டியரும் தமிழை நன்கு கற்றவர்கள். தமிழில் செய்யுளியற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார்கள். அதிவீரராம பாண்டியருக்கு வடமொழிப் புலமையும் இருந்தது. அதனல் அவர் வடமொழியிலுள்ள நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். இருவரும் சிறந்த தமிழ்ப் புலவர்களாக இருந்தும் வரதுங்கர் சிவபெருமான்மீதே பாடல்களியற்றினர். அதிவீரராமர் உலக விஷயங்களில் விருப்புடையவராகப் பாடல்களியற்றினர்.

ஒருசமயம் அதிவீர ராமர் வடமொழியிலுள்ள நைடதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அதனைத் தம் தமையனரிடம் அனுப்பிவைத்தார். தம் தமையனர் அப்பாடல்களைப் படித்ததால் அதிக சந்தோஷம் அடைவார் என்று கருதியே அதிவீரராமர் அனுப்பினர். அதனைக் கண்ணுற்ற வரதுங்கர், அதிவீரராமர் மனிதரைப் புகழ்ந்து காலத்தை வீணுகக் கழிப்பதற்காக வருந்தி, "கடவுளைப் புகழ்ந்து பாடினல் நன்ருக இருக்கும்" எனக் கூறினர்.

தமையனருடைய சொல்லைக் கேட்டது முதல் அதிவீர ராமருக்கு ஊக்கம் குறைந்தது. அப்படியிருந்தும் அவர் அந்நூலைப் பாடி முடித்தார். அந்த நூல் தமிழில் மிகச் சிறந்த நூல்களுள் ஒன்ருகக் கருதப்படுகிறது. 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்று வழங்கும் பழமொழியே அதன் பெருமையை விளக்கும்.

அதிவீர ராமர், நைடதம் பாடி முடித்ததும் அதனைத் தம் தமையனார் மனைவியிடம் அனுப்பியிருந்தார். வரதுங்கருடைய மனைவியும் நன்றாகக் கற்றவர். ஆதலால் அவரும் அந்த நூலைப் பார்வையிட்டு, "அந்நூல் வேட்டைக்குச் செல்லும் நாய்போல இருக்கிறது" என்று கூறினார்.

அதனைக்கேட்ட அதிவீரராமர் கோபங்கொண்டு, தம் ஊருக்குச் சென்று ஒரு படையுடன் திரும்பி வந்தார். வரதுங்கர், தம்பியின் கோபத்தைக் கண்டு, ஒரு பாட்டை எழுதியனுப்பினார். அப்பாட்டில், "நீ கர்ணனையும் இராவணனையும் அருச்சுனனையும் போல நடந்துகொள்ளாதே. ஆனால் இராமனையும் பரதனையும் போல நடந்துகொள்" என்ற கருத்தமைந்திருந்தது.

அப்பாடலைப் படித்ததும் அதிவீரராமர் கோபந் தணிந்தது. உடனே அவர் தமையனார் திருவடிகளில் விழுந்து வணங்கினார். தமையனாரும் தம்பியை மனப் பூர்த்தியாக மன்னித்துவிட்டார். அன்று முதல் அதிவீர ராமர் சிவபெருமான்மீதே பாடல்களை இயற்ற ஆரம்பித்தார்.

அதிவீர ராமர் பெரியோர்களுக்குமட்டுமல்லாமல் சிறுவர்களுக்கும் படிக்கத்தகுந்த சிறந்த நூலொன்று பாடி யிருக்கின்றார். அதன் பெயர் வெற்றிவேற்கை எனப்படும். அது நறுந்தொகை என்றும் வழங்கப் படும். அப்புத்தகத்தில் குரு பக்தி, கற்க வேண்டிய

அவசியம், கல்வியின் உயர்வு, செல்வத்தின் நிலையாமை ஆகிய அரிய விஷயங்களைச் சிறுவரும் எளிதில் அறியும்படி அவர் பாடியிருக்கிறார்.

கேள்விகள்

1. பாண்டிய நாடு எந்தெந்த ஜில்லாக்களைக் கொண்டது ?
2. அதிவீரராமருக்கு ஏன் கோபம் வந்தது ?
3. அதிவீர ராமருடைய கோபம் எவ்விதம் தணிந்தது ?
4. வெற்றிவேற்கை என்பது என்ன ? அதில் என்னென்ன விஷயங்கள் அடங்கியிருக்கும் ?

பயிற்சி

1. பரம்பரை, கப்பம், தமையனார், திருவடி - இவைகளைத் தனித்தனி வாக்கியத்திலமைத்து எழுது.
2. நூல், படை——இருபொருள் எழுது.
3. குறைந்தது——எதிர்ப்பதம் கூறு.
4. தமையன்——இதற்குப் பெண்பால் சொல் எழுது.
5. கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

(1) அதிவீரராமருக்கு——புலமையும் இருந்தது.

(2) தமையனருடைய——கேட்டது முதல் அதிவீர ராமருக்கு——குறைந்தது.

(3) அப்பாடலைப்——அதிவீரராமர் கோபந் தணிந்தது.

(4) உடனே அவர் தமையனார்——விழுந்து வணங்கினார்.

(6) கீழ்க்காணும் இரண்டு வரிசைத் தொடர்களிலிருந்து ஒவ்வொன்றை எடுத்துப் பொருள் மாறாதபடி எழுது :-

(அ)

1. பாட்டி வீடு—
2. அந்தப் பாட்டி வீட்டில்—
3. நெல் இருந்த பானையில்—

4. எலி அந்தப் பானையின்—
5. பழம் பானை நிறைய—
6. அந்தச் சந்தில்—

(இ)

1. நெல் இருந்தது.
2. எலி நுழைய வழி இருந்தது.
3. பழம் பானை ஒன்று இருந்தது.
4. சந்தின் வழியாக நுழைந்தது.
5. ஒன்று இருந்தது.
6. ஒரு சந்து இருந்தது.

(7) ஒரே தொடராக வாக்கியத்தைப் படித்துக்கொண்டு போனால் கேட்பவர்க்கு மயக்கத்தை உண்டாக்கும்; அர்த்தம் விளங்காது போகும். அதனால் பொருள் விளங்குவதற்கு நிறுத்துதல்வேண்டும். அவ்வாறு நிறுத்தவேண்டிய இடங்களைச் சில குறிகளால் காட்டுவது வாசக நடையில் வழக்கம். அவைகளைத் திரும்பவும் தெரிந்துகொள்ளுங்கள்.

, — காமா=கால்புள்ளி
; — செமிகோலன்=அரைப்புள்ளி
. — புல்ஸ்டாப்=முற்றுப்புள்ளி
" " — நேர் முகப்பேச்சுக்குறி. இதுவே மேற்கோள் குறியுமாம்.
! — உணர்ச்சிக் குறி.
? — வினாக்குறி.

(4) கீழ்வருவதைப் படித்து நிறுத்தற் குறிகளை அறிந்து கொள்:—

கள்ளவழியில் போவார்க்குக் கட்டாயம் ஆபத்துவரும். ஆகையால், யாரும் நல்லவழியில் போதல்வேண்டும். அப்படி நாம் செய்தால் நல்லதே!



21. பேசும் படம்

நகரங்கள்	நினைத்தார்	உபயோகம்
பட்டணங்களில்	விசித்திரம்	பரிசோதனை
கண்ணாடித் துண்டு	அசைபடம்	குழுவினர்
	இரகசியம்	கம்பெனியார்
வெள்ளைத்திரை	ஆண்டு	அனுமதி
நெடுநாள்	அற்புதம்	காட்சிச்சாலை
பில்மில்	திரை	நாடகங்கள்
விநாடி	வீணைசப்தம்	அடைந்து விட்டன
எடுக்கப்பட்ட	கெட்டுப் போவார்	
சுருள்கள்		அறிவீனம்

நாம் பெரிய நகரங்களிலும் சிறிய பட்டணங் களிலும் இந்தக் காலத்தில் பேசும் படக்காட்சிச்

சாலைகளைக் காண்கிறோம். நீங்கள் பேசும் படத்தைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்ள வேண்டும். நாம் அவைகளைப் பார்க்காமல் இருப்பது முடியாது; ஏனென்றால் அவைகள் சில மணிநேரம் மகிழ்ச்சி அளிப்பதுமாத்திரம் அல்லாமல் அறிவையும் தருகின்றன. அப்படி இருக்க நாம் அதை எப்படித் தள்ளுவது?

முதல்முதல் பேசும் படம் வரவில்லை. ஊமைப் படமே முதல்முதல் வந்தது. கிர்ச்சர் என்பவர் இதை ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே கண்டு பிடித்தார். கண்ணாடித் துண்டுகளில் படம் இருக்கும். அதற்கு என்று ஏற்படுத்தப்பட்டிருந்த மாஜிக்லாண்டர்ன் அல்லது ஒளி விளக்கின் முன் உள்ள சந்தில் இக்கண்ணாடித் துண்டுப் படங்களைப் போட்டால் அவற்றில் உள்ள படங்கள் எதிரே கட்டப்பட்டுள்ள வெள்ளைத்திரையில் விழும். அந்தப் படங்கள் அசையா; பாடவும் பாடா. ஒளிவிளக்கின் முன் இருக்கும் கண்ணாடிச்சில் (லென்ஸ்) படத்தை மிகவும் பெரிதாக்கிக் காட்டும். இப்படிப்பட்ட ஊமைப் படமே நெடுநாள் இருந்தது.

பின்பு அமெரிக்காவில் இருந்த எடிசன் என்பவர் அசையும் படம் கண்டு பிடித்தார். படம் பிடிக்கப்பட்டிருக்கும் நாடாவே பில்ம் என்று சொல்லப் படும். அது ஆயிரக்கணக்கான அடி நீளம் இருக்கும். இந்தப் பில்மின் அகலம் ஒன்றரை கால் அங்குலத்துக்குச் சிறிது அதிகம் இருக்கும். ஒவ்

வொரு படமும் முக்கால் அங்குலம் நீளம் இருக்கும். ஓர் அடிக்குப் பதினறு படங்கள் உண்டு. நடிக்கும் படம் பிடிப்பவன் ஒரு விநாடிக்குப் பதினறு படம் பிடிப்பான். இப்படிப் பிடிப்பதற்கு ஒரு கருவி இருக்கிறது. ஒரு விநாடிக்குப் பதினறு படங்கள் எடுப்பதால் ஒரு படத்திற்கும் அதற்கு அடுத்த படத்திற்கும் அதிக வித்தியாசம் ஏற்படுவதில்லை. படம் எடுப்பதற்கு ஒரு யந்திரம் இருக்கிறது. அது ஒரு விநாடியில் பதினறு படங்களை எடுக்கும். படங்கள் அடுத்து அடுத்து ஓடும்போது அவைகளைப் பார்ப்பவர்களுக்கு நடிகர்கள் மெள்ள நடிப்பதாகவே தோன்றும். இப்படி எடுப்பவைகள் புகைப்பட அச்சுக்கள். இவற்றை ஆங்கிலத்தில் நெகடிவ் என்பார்கள். இந்தப்புகைப்பட அச்சுகளிலிருந்து பிரதிகள் எடுக்கப்படும். இவைகள் பிலிம் சுருள்களாக இருக்கும். படம் காட்டுபவன் சுருளைப் படம் காட்டும் யந்திரத்தில் வைத்து ஓட்டுவான். வெள்ளைத்திரையில் ஒரு செக்கண்டுக்குப் பதினறு படங்கள்விழும். ஒருபடம் ஒளித்திரையில் ஒரு செக்கண்டின் 32 பாகத்தில் ஒருபாகநேரந்தான் நின்று காட்சியளிக்கும். பிறகு இருட்டுவரும். இப்படிச் செய்வதால் படம் தொடர்ச்சியாகப் போவதாகத் தெரியும். படங்கள் வேகமாக ஓடுவதால் அவை நமக்கு அசைவனபோலத் தெரியும். இதுதான் அசைபடத்தின் இரகசியம்.



சிலர் அசைபடத்தைப் பேசும் படமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ஆகையால் 1918ம் ஆண்டு பேசும் படம் வந்தது.

பேசும் படம் எடுப்பது பெரியவேலே. பேசும் அல்லது பாடும் ஒலியைப் பிடிப்பவர்கள் அற்புதமான கருவியின் உதவியால் ஒளியாகமாற்றி பிலிமில் அமைக்கிருர்கள். அப்படிப் பிடிக்கப்படும் ஒலி திரும்பவும் வெள்ளேத் திரையில் காட்டப்படும்போது வேறு வகையான விசித்திரமான கருவியால் ஒலியாக மாற்றப்படுகிறது. நாம் இதைக் கேட்டுத்தான் மகிழ்ச்சியடைகிருேம்.

பேசும் படம் பிடிப்பதற்கு அதிக திறமை வேண்டும். பேசும் படம் பிடிக்கும்போது படத்துக்கு வேண்டிய பேச்சும் பாட்டும் தவிர வேறு வீணை சப்தம் வரக்கூடாது. அதற்காக நடிப்பவர்களுக்குச் சைகை காட்டுவதற்குச் சைகை விளக்குகள் உபயோகப் படுத்தப்படுகின்றன.

படங்களில் நல்லவைகளும் தீயவைகளும் இருக்கின்றன. தீயவழிகளேக் காட்டும் படங்களேப் பார்ப்பவர்கள் கெட்டுப் போவார்கள். அதனுல் பலர் எடுக்கும் படங்களேப் பரிசோதனே செய்வதற்கு ஒரு படப் பரிசோதனேக் குழு உண்டு. அந்தக் குழுவினர் பல கம்பெனியார் எடுக்கும் படங்களே முதலில் திரையில் போடச் செய்து பரிசோதித்துப்பார்த்து அவைகளே ஜனங்களுக்குக் காட்ட அனுமதி கொடுக்கிருர்கள்.

இப்படி அனுமதி கொடுக்கப்பட்ட படங்களே காட்சிச் சாலைகளில் காட்டப்படுகின்றன.

படம் எடுக்கும் தொழிற்சாலைகள் சிறிய நகரங்களாகவே இருக்கின்றன. இங்கே பல பேர்கள் வேலை செய்கிறார்கள். இப்போது படம் எடுப்பது நம் நாட்டில் பெரிய தொழிலாய் இருக்கிறது. இதனால் பல பேர்களுக்கு வேலைகள் கிடைக்கின்றன.

பேசும் படம் வந்த பின்பு நம் தமிழ் நாடகங்கள் நல்ல நிலையை அடைந்துவிட்டன. நாடகத்தில் பாட்டுக்கள் ஒன்றிரண்டே இருக்கவேண்டும். நாடகத்தில் அதிகமாகப் பாட்டுக்கள் பாடுவது அறிவீனம். நடிப்பு மிகவும் முக்கியம். நல்ல நடிப்பு இல்லாவிட்டால் நாடகம் நன்றாய் இராது. பேசும்படம் வந்தபின்பு தமிழ் நாடகங்கள் நன்றாய்விட்டன. ஆனால் பேசும்படம் இன்னும் சிறப்படைய வேண்டும். அது இன்னும் சில ஆண்டுகளுக்குள் உயர்ந்த நிலையை அடையும் என்பது திண்ணம்.

கேள்விகள்

1. வெள்ளைத் திரையில் படங்கள் எப்படிக் காட்டப்படுகின்றன?
2. படம் பிடிப்பவர்கள் ஒரு செக்கண்டிற்கு எத்தனை படம் பிடிப்பார்கள்?
3. எச்சரிக்கை விளக்குகள் எப்போது உபயோகப் படுத்தப்படுகின்றன?
4. தமிழ்ப் படங்கள் நல்ல நிலையை அடைய வேண்டுமானால் எவ்வித முறைகளை யனுசரிக்கவேண்டும்.

பயிற்சி

(1) உடன்படுவது உடன்பாடு, எதிர்மறுப்பது எதிர்மறை, ஆடு - இது உடன்பாட்டு வினைமுற்று. ஆடாதே - இது எதிர்மறை வினைமுற்று.

(2) கீழ்வரும் உடன்பாட்டு வினைமுற்றுக்களுக்கு எதிர் மறை வினைமுற்றுக்கள் எழுது :—

உடன்பாடு	எதிர்மறை
1. கண்டான்	1.
2. செய்தது	2.
3. சமைப்பாள்	3.
4. உண்பார்	4.
5. படி	5.
6. நினை	6.

(3) எதிர்மறைக்கு உடன்பாடு எழுது :—

எதிர்மறை	உடன்பாடு
1 நிற்காதே	
2 பாடாதே	
3 நனையாதே	
4 சிரிக்காதே	
5 பேசிலன்	
6 வந்திலன்	



22. கோழியும் வாத்தும்

குளிர்ச்சி	தகாது	தவித்து
குவலயம்	உறுப்புக்கள்	தரணியில்
தடாகம்	ஊன்றிப்	இயம்பிடு
பரபரப்பு	பார்த்து	வேன்
எளிய	ஜலத்தில்	

குளிர்ச்சி பொருந்திய குவலய மதிலே
தண்ணீர் நிறைந்த தடாகந் தன்னில்
தடாக நீரைத் தளதள என்றும்
பரபரப் புடனே படபட என்றும்
வாத்துகள் எல்லாம் பத்தி பத்தியாய்
ஆடிக் கொண்டு வேடிக்கை செய்ய
இதனைக் கண்ட எளிய கோழியும்
நன்று நன்று நாமும் ஜலத்தில்
ஆடிப் பாடி அன்புடன் இருக்க
அன்னை யிடத்தே அனுமதி கேட்க
அதற்குப் பதிலாய் அன்னை தானும்
" தண்ணீர் நமக்குத் தகாதே " என்றதை
அன்புடன் அழைத்துநின் றறிவு புகட்டவும்

தாயின் வார்த்தை தட்டியே சென்று
குளத்தின் அருகே குதித்துச் சென்றே
உறுப்புகள் யாவும் ஒவ்வொன் ருக
ஊன்றிப் பார்த்தே உவகை யடைந்து
தண்ணீர்க் குள்ளே தானும் இறங்கித்
தவித்துத் தவித்துத் தட்டித் தட்டி
நீந்த நீந்த நிச்சய மாகவே
அந்தக் கோழியும் ஆழமாக
உள்ளே சென்றே உயிரை நீத்ததே;
அதனுல்,
தாயின் சொல்லைத் தரணியில் தட்டாமல்
வாழ்ந்திடு வாயே வாழ்ந்திடு வாயே
என்று நானே இயம்பிடு வேனே.

கேள்விகள்

(1) கோழிக்குஞ்சு தன்தாயை என்ன கேட்டது?

(2) கோழிக்குஞ்சுக்குத் தாய் கூறிய விடை என்ன?

(3) தாயின் சொல்லைத் தட்டியதால் கோழிக்குஞ்சுக்கு என்ன நேரிட்டது?

(4) இப்பாடத்தால் நீ அறிந்து கொண்டது என்ன?

பயிற்சி

(1) குளிர்ச்சி, பரபரப்பு—இதற்கு எதிர்வார்த்தைகள் எழுது.

(2) கோழிக்குஞ்சு தண்ணீரில் மூழ்கி இறந்தது - கோழிக்குஞ்சு என்ன ஆயிற்று? கோழிக்குஞ்சு மூழ்கியது,- இதில் கருத்து எழும் வாயாக இருப்பது எது? கோழிக்குஞ்சு. ஆகையால் கோழிக்குஞ்சு என்பது

எழுவாய். கோழிக் குஞ்சு என்னவாயிற்று? கோழிக் குஞ்சு இறந்தது. இறந்தது என்பது பயனிலை. எழுவாயைக் கண்டுபிடிப்பதற்கு யார் அல்லது எது என்று கேள்விகேட்டால் எழுவாய் வரும்.

இராமன் ஒரு புத்தகம் வாங்கினன். :—இதில் இராமன் எழுவாய். வாங்கினன் பயனிலை. எதை வாங்கினன்? புத்தகம் வாங்கினன். புத்தகம் என்பது செயப்படுபொருள்.

(3) கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களை எடுத்தெழுது :—

(1) நான் பாடம் எழுதுகிறேன்.

(2) நீ பந்து விளையாடுகிறாய்.

(3) அண்ணன் வெண்ணெய் தின்கிறான்.

(4) குரங்கு பழத்தைக் கடித்தது.

(5) மாடுகள் புல்லை மேய்கின்றன.

(6) மழை பெய்கிறது.

23. தமிழ்ச் சங்க ஆண்டுவிழா

விசேஷமாக	அணியப்பட்டது	நடைபெறுவதை
தலைமை	காரியதரிசி	பூட்டிய
நடைபெற்றன	சங்கக்காரியதரிசி	பாஷை
சிற்றுண்டி	சங்கநிகழ்ச்சி	திரைகடல்
புகைப்படம்	செல்வகேசவராயர்	அவ்வையார்
ஹாலுக்கு	நாகரிகம்	நிலையானபொருள்
ஆசிரியர்	விரியுரை	உண்மையான
பிரேரேபித்தார்	வரவேற்றனர்	பொருள்
ஆமோதித்தார்	சூட்டினர்	சான்றுகள்
கரகோஷம்	சரித்திரகாலம்	வெற்றி

எங்கள் பள்ளிக்கூடத்தில் தமிழ்ச்சங்க ஆண்டு விழா விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. அவ் விழாவிற்கு சிவஞானம் பிள்ளை தலைமை வகித்தார். அவர்களின் தலைமையின்கீழ் ஆண்டு விழாவிற்குரிய நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றன.

முதலில் விழாவிற்கு அழைக்கப்பட்ட எல் லோரும் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். தலைவர் வந்ததும் எல்லோரும் எழுந்து சிற்றுண்டி சாப்பிடச் சென்றனர். எல்லோரும் சிற்றுண்டிக்குப் பிறகு புகைப்படம் பிடிக்க ஏற்பாடு செய்திருந்த இடத்துக்குச் சென்றனர். புகைப்படம் பிடிப்பவர் எல்லோரையும் படம் பிடித்துக்கொண்டார்.

பின்னர் எல்லோரும் எங்கள் பள்ளிக்கூடத்தி லுள்ள ஹாலுக்கு வந்து சேர்ந்தனர். தமிழ்

வித்துவான் சிவஞானம் பிள்ளை அவர்களைத் தலைமை வகிக்கும்படி என் ஆசிரியரில் ஒருவர் முதலில் பிரேரேபித்தார். அதை மற்றொரு ஆசிரியர் ஆமோதித்தார். பலத்த கரகோஷம் எழும்பியது. பின்னர்த் தலைவர் திரு. செல்வகேசவராயர் அவர்களைத் தமிழர் நாகரிகம் என்பதைப்பற்றி விரிவுரை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். திரு. செல்வகேசவராயர் அவர்கள் எழுந்து மேஜையின் அருகே வரும்போது எல்லோரும் கைதட்டி வரவேற்றினர். காரியதரிசி அவருக்கு ஒரு மாலையும் சூட்டினர்.

திரு செல்வகேசவராயர் அவர்கள் கூறியதாவது:- "தமிழர் என்பவர் இக்காலத்தில் உண்டான ஒரு சாதியார் என எவராலும் துணிந்து கூறல் முடியாது." சரித்திரகாலத்துக்கு அகப்படாத பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிக சாதியாராக வாழ்ந்தார் தமிழரென அறியக் கிடக்கின்றது. நாகரிகம் என்பது உடையணிந்து கொள்வதென்று சிலர் கருதுகின்றனர். அதுவன்று. ஒருநாட்டு நடை உடை பாவனைகளைத் திருத்தமாக அமைத்துக்கொள்வதோடு ஒத்து ஒழுகுதலும் நாகரிகமெனப்படும். அந்நாட்டாருடைய வாகனங்கள், வியபாரம், பழக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு நாகரிகமக்கள் என்பது நிர்ணயிக்க முடியும்.

பழந்தமிழர்களிற் சிலர் ஒருகாலத்தில் வியாபாரிகளாகவும் இருந்தனர் எனக் கூறலாம். இக்காலத்தில் வியாபாரம் நடைபெறுவதைப்போல அக்காலத்திலும் கப்பல் மூலமாக வியாபாரம் நடந்தது.

வேறு நாடுகளிலிருந்து பண்டங்கள் வந்தன. தமிழர்கள் அப்பண்டங்களுக்குச் சுங்கம் வசூலித்தனர். இது தமிழரின் நாகரிகத்தைக் காட்டுகிறதல்லவா ?

தமிழர்கள் ஆடைகள் நெய்வதிலும், பாத்திரங்கள் நகைகள் செய்வதிலும் கப்பல் கட்டுவதிலும் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் யானை, குதிரை, தேர், வண்டி, கோவேறு கழுதை முதலியவற்றை வாகனங்களாக உபயோகித்தார்கள். நான்கு குதிரைகள் பூட்டிய தேர் இருந்ததாகத் தமிழ் நூல் கூறுகின்றது.

கப்பல் வெளிநாடுகளில் சென்று வியாபாரம் செய்ததாகவும் நூல்கள் கூறுகின்றன. அவ் வியாபாரிகளிற் பலர் பல பாஷைகளையும் அறிந்திருந்தனர். அவ்வையார் திரைகடலோடியும் திரவியம் தேடு என்று கூறியுள்ளார். இதனால் தமிழர் சிறந்த நாகரிகம் படைத்தவர்களென்பது தெரிகிறது.

தமிழர்கள் உலகம் நிலையான பொருளல்ல என்றும், மனிதன் உடம்பு நிலையான பொருள் அன்று என்றுங்கண்டு உண்மைப் பொருளையே நாடினர். தமிழர்களுக்குள் கற்புநெறி இருந்தமை மிகவும் பாராட்டற்குரியது. இன்னோரன்ன சான்றுகளால் பழந்தமிழர்கள் மிக்க நாகரிகமுடையவராக வாழ்ந்தார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. நீங்களும் அவர்களைப்போல் வாழ்வீர்களாக.

விரிவுரையாளர் பேசி முடிந்ததும் தலைவர் தமிழர் நாகரிகம் என்பதைப்பற்றிய தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

தமிழ்ச் சங்க ஆதரவில் கட்டுரை எழுதுவதில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மூன்று மாணவர்களுக்கு முறையே திருக்குறளும், பெரிய புராண வசனமும், மனுமுறைகண்ட வாசகமும் பரிசாகக் கொடுக்கப்பட்டன.

தமிழ்ச் சங்கத் தலைவராகிய எங்கள் உபாத்தியாயர், தலைவருக்கும் விரியுரையாளருக்கும் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைவுற்றது.

கீழ்வரும்செய்தி 'தினமணி' பத்திரிகையில் 1938வு செப்டம்பர் 16வ வெளியானது. இதைவாசித்துக் கீழ்வரும் வினுக்களுக்கு விடைகூறு:—

கேள்விகள்

1. பாரதியார் தினத்தை யார், எங்குக் கொண்டாடினர்?
2. அன்றைய பொதுக்கூட்டத்தில் யார் யார் பேசினர்கள்?
3. யாருக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன? செப்-11: ந-ரி. இவைகளால் நீ அறிவதை எழுது.
4. உங்கள் பள்ளிக்கூடத்தில் நடந்த வருடக்கொண்டாட்டத்தைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுதுவது போல் எழுதிக் காட்டு.

பாரதியார் பேர்த்திகளுக்குப் பரிசு

பாளையங்கோட்டை

திருநெல்வேலி, செப். 11.

பாளையங்கோட்டை நகர காங்கிரஸ் கமிட்டியார், இன்று பாரதியார் தினத்தைக் கொண்டாடினர். இரவு ஸ்ரீ, பரலி-ஷண்முக சுந்தரம் பிள்ளையின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான்கள் டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, எம. எல். ஏ., சர்க்கார் வக்கீல், பி. எஸ். தங்கசாமி நாடார் இருவரும் பாரதியாரைப் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீ. பிள்ளை பாரதி பாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட மாணவ—மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினார். பாரதியாரின் பேர்த்திகளான, செல்விகள் பானுமதி, லலிதா இருவருக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

(ந. நி.)



24. மெய்யப்பன்

மெய்யப்பன்	அறிவுடையோர்	அடியேன்
பாஸ்கரசேதுபதி	தமிழ்ப்பாட்டு	வாங்கிப்பார்த்தார்
மதுரை	மனப்பாடம்	எழுபத்தைந்து
ஆதரித்து	எழுதுவார்கள்	யோசனை
ஐந்தாம் வகுப்பு	இப்படிப்பட்டவர்	உண்மைக்குணம்
தேறுகிறவர்	தேறாமல்	முக்கியமானது
வினைத்தாள்	திறமை	தேர்ந்தெடுத்தார்
விடைத்தாள்	தாள்கள்	மகிழ்ச்சி
மறுக்காமல்	மார்க்கு	கைத்தட்டி
ஒப்புக்கொண்	மாறுபட்டது	வெளிப்படுத்தினர்
பரிசு• டார்	சிறிதுநேரம்	
எதிர்பார்த்தார்	தீர்மானம்	

பாஸ்கர சேதுபதி மதுரையில் ஒரு பள்ளிக் கூடத்தை ஆதரித்து வந்தவர். அவர் ஒரு நாள் அந்தப் பள்ளிக்குப் போனர். அவர் ஐந்தாம்

வகுப்பு மாணவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, இந்த வகுப்பில் தமிழில் முதன்மையாகத் தேறுகிறவர்களுக்கு நூறு ரூபாய் பரிசு கொடுப்பேன்" என்றார். அவரே வினைத்தாளைக் கொடுக்கப்போவதாகவும் விடைத்தாளையும் திருத்தப் போவதாகவும் சொன்னார். தலைமை உபாத்தியாயரும் அதை மறுக்காமல் ஒப்புக் கொண்டார்.

எல்லா மாணவர்களும் கஷ்டப்பட்டுப் படித்தார்கள். என்றாலும் பிள்ளைகள் மெய்யப்பன், கண்ணப்பன் இருவரில் ஒருவர் பரிசு வாங்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். உண்மையில் மெய்யப்பனும் கண்ணப்பனும் தமிழில் மிகுந்த அறிவுடையவர்கள். அவர்களுக்கு ஐம்பது தமிழ்ப் பாட்டுக்கள் மனப்பாடமாகத் தெரியும். அவர்கள் பிழை இல்லாமல் தமிழ் எழுதுவார்கள். அவர்கள் தமிழ் பேசுவது அழகாயிருக்கும். இப்படிப்பட்டவர்கள் எப்படி முதன்மையாகத் தேறாமல் இருக்கமுடியும்?

எல்லோரும் பரீட்சையை ஆவலாய் எதிர்பார்த்திருந்தார்கள். குறிப்பிட்ட நாளில் பரீட்சை நடந்தது. எல்லாப் பிள்ளைகளும் திறமையாக எழுதினார்கள். பத்துநாட்கள் கழிந்தன. பாஸ்கர சேதுபதி ஒரு நாள் பள்ளிக்கூடம் வந்து திருத்திய விடைத் தாள்களைத் திருப்பிக்கொடுத்தார். எல்லோரும் விடைத்தாளை வாங்கி மார்க்கு எண்ணிப் பார்த்தார்கள். மெய்யப்பனும் மற்றவர்களைப்போலவே விடைத்தாளைப்

பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பாஸ்கர சேதுபதி மெய்யப்பனுக்கு முதல்மார்க்கு என்றும் கண்ணப்பனுக்கு இரண்டாவது மார்க்கு என்றும் சொன்னர்.

மெய்யப்பனுக்குச் சந்தோஷம் பொங்கி வழிந்தது. ஆனல் அவன் விடைத்தாளைப் பார்த்துக் கொண்டு வந்தபோது முகம் மாறுபட்டது. அவன் ஒரு தப்பான கேள்விக்கு மார்க்கு அளிக்கப்பட்டிருந்ததைக் கண்டான். "இதைச் சொல்வதா? வேண்டியதில்லையா? சொன்னல் மார்க்குக் குறையும். கண்ணப்பனுக்குப் பரிசு கிடைக்கும். என்ன செய்வது!" என்று மெய்யப்பன் பலவாறு எண்ணினன். அவன் உண்மையில் சிறிதுநேரம் தன் மனத்தோடு மல்யுத்தம் செய்தான் என்றே சொல்லவேண்டும். அவன் கடைசியில் உண்மையைச் சொல்வது என்று தீர்மானித்துவிட்டான். உடனே மெய்யப்பன் சேதுபதியிடம் ஓடினன். அவன் அவரைப் பார்த்து, "அடியேனுடைய விடைத்தாளில் தப்பான கேள்விக்கு மார்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றன். சேதுபதி விடைத்தாளை வாங்கிப் பார்த்தார். அப்படியே இருந்தது. மெய்யப்பனுக்கு எண்பதாக இருந்த மார்க்கு எழுபத்தைந்தாகக் குறைந்தது. எழுபத்தாறு வாங்கிய கண்ணப்பனுக்கு முதலிடம் கிடைத்தது.

பாஸ்கர சேதுபதி யோசனை செய்தார். அவர் மெய்யப்பனுக்குத் திறமையோடு உண்மைக்குணமும்

இருக்கிறதைக் கண்டார். திறமையைவிட உண்மையே முக்கியமானது. இதை நன்ருக அறிந்த சேதுபதி நூறு ரூபாய்ப் பரிசை "இருவரில் யாருக்குக் கொடுப்பது" என்று பிள்ளைகளைக் கேட்டார். மாணவர்கள் மெய்யப்பனையே தேர்ந்தெடுத்தார்கள். சேதுபதி மெய்யப்பனுக்கு நூறு ரூபாய் பரிசு கொடுத்தார். மற்ற மாணவர்களும் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்கள்.

கேள்விகள்

(1) சேதுபதி என்ன சொன்னர்?

(2) மெய்யப்பன் வினத்தாளைப் பார்த்துச் சேதுபதியிடம் என்ன கூறினன்?

(3) மெய்யப்பனுக்கு எதனல் பரிசு கொடுக்கப்பட்டது?

(4) அதனல் நீங்கள் அறிந்து கொள்வது யாது?

25. எலும்புருக்கி நோய்

சீதோஷ்ணம்	உழைப்பு	எச்சில்
எலும்புருக்கு	தேகாப்பியாசம்	உமிழ்தல்
கண்டமாலை	பால்யம்	படிகம்
வயிற்றுப்போக்கு	விவாகம்	தட்டு முட்டு
கோதை	பிரசவிப்பது	அறியாமை
பெற்றோர்	காய்கள்	அளவுக்கு
ஆகாரம்	அறிகுறிகள்	மிஞ்சி

உலகில் மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்குவன பெரும்பாலும் நோய்களே. நோய்களிற் சில மக்களினிடையே எந்தக் காலத்திலும் இருக்கும். சில சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு அந்த அந்தக் காலத்தில் தோன்றி அழியும்.

நோய்கள் பலவற்றில் எலும்புருக்கி நோய் அல்லது க்ஷயரோகம் என்பது ஒரு கொடிய நோயாகும். இந்த நோய் உலகில் எல்லாப் பாகங்களிலும் பரவியிருக்கிறது. நம்முடைய இந்திய தேசத்தில் மட்டும் வருஷம் ஒன்றுக்குப் பத்து லக்ஷம் மக்கள் எலும்புருக்கி நோயால் மரணமடைகிறார்கள். சென்னைப் பட்டினத்தில் வருஷந்தோறும் 25,000 பேர் எலும்புருக்கி நோய்க்கு ஆளாகின்றனர். ஆனால் 2500 பேர் வரை இறந்து போகிறார்கள். இந்த நோய் ஒரே மாதிரி இராது. முதுகு வளைவு, கண்டமாலை, எலும்பு நோய், முடிச்சுகளில் ஏற்படும் வலி,

நெடுநாளைய வயிற்றுப்போக்கு முதலியவைகள் எலும் புருக்கி நோயின் பலவகைகளாகும்.

எலும்புருக்கி நோய்க்கு ஆதிகாரணம் ஒருவகைக் கிருமியேயாகும். அக்கிருமிகள் ஈரலிலும், நோய்ப்பட்ட அங்கங்களிலும், க்ஷயரோகியின் கோழையிலும் இலக்ஷக் கணக்காக இருக்கின்றன.

இந்த நோய் பரம்பரையாய்த்தான் வரும் என்று சொல்ல முடியாது. க்ஷயரோகியின் குழந்தைகள் நல்ல சௌகரியங்களினால் நோய் பீடிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆரோக்கியமுள்ள பெற்றோருடைய குழந்தைகள் சௌகரியக் குறைவினால் க்ஷயரோகத்தைப் பெறுகிறார்கள்.

க்ஷயரோகக் கிருமிகள் க்ஷயரோகியினுடைய கோழையிலும், அப்பிணியாளி சாப்பாட்டிற்காக உபயோகப்படுத்தும் கோப்பைகள், தட்டுகள் முதலான பாத்திரங்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கும். அதனால் க்ஷயரோகியுடன் வாழ்வதும் பழகுவதும் ஆபத்துக்கிடமாக முடியும்.

க்ஷயரோகிகள் எச்சிலை அஜாக்கிரதையாகத் தரையில் துப்பிவிடுகிறார்கள். அந்த எச்சிலில் உறையும் கிருமிகள் தரையைப் பெருக்கும்போதாவது, காற்றடிக்கும்போதாவது தூசியோடு மேலே கிளம்புகின்றன.

அந்தத் தூசி சுவாசத்துடன் உட்செல்லும். சில வேளைகளில் ஆகாரத்துடன் சேர்ந்துவிடும். சில சமயம் ஈக்கள், க்ஷயரோகியின் கோழையிலிருந்து க்ஷய ரோகக் கிருமிகளை ஆகார தினுசுகளுக்குக் கொண்டு போகின்றன. இந்தக் கிருமித் தூசியால் பெரும் பாலும் ஊர்ந்து செல்லும் குழந்தைகளே எளிதில் தாக்கப்படுகின்றன.

க்ஷயரோகக் கிருமிகள் ஆரோக்கியமான சரீரத்தில் விருத்தியடைவதில்லை. ஆனால் போதுமான அளவுக்கு ஆகாரமில்லாமை, அதிக உழைப்பு, அசுத்தக் காற்றை உட்கொள்ளல், வெட்டவெளியில் தேகாப்பியாசம் செய்யாமை, அடிக்கடி தின்பது, அளவுக்கு மிஞ்சிப் புசிப்பது, பால்ய விவாகம், அடிக்கடி பிரசவிப்பது முதலியவற்றால் தேகம் பலஹீனப் பட்டால் கிருமிகள் அதிகரித்து நோயை உண்டு பண்ணும்.

இந்தக் கொடிய நோயைக் கீழ்க்காணும் விஷயங்களால் வராமல் தடுத்துக்கொள்ளலாம்:—

1. வெட்ட வெளியில் அல்லது கதவுகளும் ஜன்னல்களும் திறந்துவைக்கப்பட்ட அறையில் தூங்குதலும் வசித்தலும் வேண்டும்.

2. பால், முட்டை, நல்ல பழங்கள், புதிய காய் கறிகள் உணவு முதலியவைகளை அதிகமாகப் புசித்தல் வேண்டும்.

3. எதையும் அளவுகடந்து செய்யாதிருத்தல் வேண்டும்.

4. சுற்றுப்புறம் சுத்தமாக இருக்குமிடத்தில் வசித்தல் வேண்டும்.

5. பால்ய விவாகத்தை நீக்குதல் வேண்டும்.

எப்பொழுதும் செய்கிற வேலையில் சிறிது அளவு மிகுதியாகச் செய்தாலும் மயக்கம் வருதல், பசியின்மை, விட்டுவிட்டு இருமுதல், விடாது இருமுதல், இரத்தம் கக்குதல், அடிக்கடி சுவாசம் விடமுடியாமை, நெஞ்சுவலி, மாலையில் சரீரம் சிறிது சூடாயிருத்தல் முதலியவை க்ஷய ரோகம் ஆரம்பமானதை அறிவிக்கும் அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகளில் ஏதாவது ஒன்றிருந்தால் உடனே நல்ல வைத்தியரிடம் சென்று மருந்து சாப்பிடவேண்டும்.

க்ஷய ரோகி கண்ட இடங்களில் எச்சில் உமிழ்தல் கூடாது. க்ஷயரோகியின் நோய் பரவாமற் செய்கிற மருந்து நீர் ஊற்றிய படிகம், கைக்குட்டைகள், தட்டுமுட்டுக்களைக் கொதி நீரிற் போட்டு எடுக்க வேண்டும். க்ஷயரோகி குழந்தைகளை வாயில் முத்தமிடுதல் கூடாது. க்ஷயரோகி இருக்கும் அறை காற்றோட்ட முள்ளதாகவும், சூரிய வெளிச்சம் வரக் கூடியதாகவு மிருக்கவேண்டும். க்ஷயரோகியின் அறையைப் பெருக்குதல்கூடாது; சாணநீரினலோ அல்லது ஈரத்துணியாலோ மெழுகவேண்டும்.

க்ஷயரோகத்துக்குச் சுத்தகாற்றும் சூரியவெளிச்சமும் நல்லுணவும் சுத்தமும் விரோதிகள். அறியாமையும், அளவுக்குமிஞ்சி உண்பதும், அதிக உழைப்பும், அசுத்தமான இடத்தில் வசித்தலும் க்ஷயரோகத்துக்கு நண்பர்கள்.

'நோய்க்கு இடங்கொடேல்.'

கேள்விகள்

(1) எலும்புருக்கி நோய் என்றால் என்ன?
(2) எலும்புருக்கி நோய் எப்படி வருகிறது?
(3) எலும்புருக்கி நோயுள்ளவர்கள் என்னசெய்யவேண்டும்?
(4) எலும்புருக்கி நோய் வராமல் தடுப்பதற்கு உரிய வழிகள் எவை?

1. எலும்புருக்கி நோய் எந்தெந்த வகையில் காணப்படும்?
2. எப்பொழுது இந்த நோய் பெருகும்?
3. இந்த நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிகள் என்ன?
4. க்ஷயரோகத்துக்கு நண்பர்களும் பகைவர்களும் யார்?

பயிற்சி

1. சீதோஷ்ணம், பெற்றோர், ஆகாரம், தேகாப்பியாசம்- இவைகளைத் தனித்தனி வாக்கியத்திலமைத்தெழுது.
2. கோழை — இரு பொருள் கூறு.
3. புதிய, ஈரம் — எதிர்ப்பதங்களை எழுது.
4. 1. க்ஷயரோகக் கிருமிகள் ——— சரீரத்தில் விருத்தியடைவதில்லை.
   2. பால்ய ——— நீக்குதல் வேண்டும்.
   3. க்ஷயரோகி கண்ட இடங்களில் ——— உமிழ்தல் கூடாது.

5. க்ஷயரோகி குழந்தைகளை ———— முத்தமிடுதல் கூடாது.

(5) எவன், எவள், எவர், யார், எது, யாது, எவை — இவைகள் வினவுவதற்கு உபயோகப்படுவதால் வினாப்பெயர்கள். இவைகள் வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்கள் என்பர்.

கீழ்வரும் வாக்கியங்களைப் படி :—

அவன் எவன் ?
அவள் எவள் ?
அவர் எவர் ?
வந்தவர் யார் ?
அது எது ?
வந்தது யாது ?
அவை எவை ?

(6) மேலே கொடுத்துள்ள வினாப்பெயர்களை வைத்து வினா வாக்கியங்கள் எழுது.

(7) உணர்ச்சியைக் காட்டுங்குறி உணர்ச்சிக்குறி எனப்படும்.

உதாரணங்கள்:—

அந்தோ ! பொருளை இழந்தேனே !

சீ ! சீ ! எழுந்திரு.

26. நாட்டுப்பற்று

காட்சி 1

இடம் :—அரச சபை.
காலம் :—காலை.
நடிகர்கள் :—பாண்டியன், மந்திரி, ஒற்றன்.

பாண்டியன்: மந்திரி, சோழநாட்டுச் செய்தி ஏதேனும் தெரியுமா?

மந்திரி: அண்ணலே, ஒன்றும் தெரியவில்லை. அது தான் எனக்குக் கவலையைத் தருகின்றது.

பாண்டியன்: படை திரட்டியாகி விட்டதா?

மந்திரி: அரசே, இரண்டு நாட்களுக்கு முன்னரே நம் சேனாதிபதி யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டார். நம் படை வீரர்கள் யுத்தம் செய்ய ஆவலாக இருக்கிறார்கள்.

பாண்டியன்: என்ன சொல்லியும் சோழன் பிடிவாதமாக இருக்கிறான். சுயமரியாதைக்காக நாம் சண்டை போடவேண்டியிருக்கிறது. போர் என்றால் இருபக்கமும் எத்தனை வீரர்கள் இறப்பார்கள், பாவம்!

மந்திரி: அரசே, நாம் என் செய்வது! போரைத் தடுத்தும் நிற்கவில்லை. நாமாகப் போருக்குச் செல்லவில்லையே!

(வாயிற்காப்போன் நுழைகிறான்.)

சேவகன்: அரசே, நீடூழி வாழ்க! நம் ஒற்றன் எல்லப்பன் வந்திருக்கிறான்.

பாண்டியன்: வரச்சொல்! வரச்சொல்!! எல்லப்பன் வருகிறுன்.

எல்லப்பன்: வாழ்க! அரசே! வாழ்க! வீரபாண்டிய, நின் ஆணைப்படி சோழநாடு சென்று உளவறிந்து வந்தேன். சோழனின் படை பாண்டியநாட்டை நோக்கிப் புறப்படுகின்றது. இன்னும் பன்னிரண்டு நாட்களில் போர் தொடங்கும்.

அரசன்: நல்லது. எல்லப்பா, நீ போய் வரலாம்.

பாண்டியன்: மந்திரி, இனிக் காலதாமதம் வேண்டாம். போருக்கு வேண்டிய ஏற்பாடு செய்க!

(தர்பார் கலைதல்)

காட்சி 2

இடம் :—வீதி.

காலம் :—காலை.

நடிகர்கள் :—பறையடிப்பவனும் பிறரும்.

பறையடிப்பவன்: டண். டண், டண், டண். சோழநாட்டார் நம் நாட்டின்மீது படையெடுத்து வருகின்றனர். படைக்கு ஆள் சேர்க்கப்படும். விரும்புவோர், உடனே அரண்மனைக்குப் போய்ச் சேர்க. டண், டண், டண்.

வீதியில் செல்பவர்: அப்பா, என்ன சொல்லுகிறுய்? கொஞ்சம் நின்று நிறுத்திச் சொல்.

பறையடிப்பவன்: அநியாயமாகச் சோழன் நம் நாட்டின்மீது படையெடுத்து வருகிறுன். பகைவர் நம் நாட்டைப் பிடித்தால் நாம்

அழிவோம். நம் மொழியும் நாகரிகமும் கலையும் நாசமுறும். தாய் நாட்டுப் பற்றே தலைசிறந்த பற்று.

காட்சி 3

இடம் :—செல்லம்மா வீடு.

காலம் :—காலை.

நடிகர்கள் :— செல்லம்மாள் அவள் கணவன், தந்தை, மகன்.

செ. தந்தை: எனக்கோ வயதாகிவிட்டது. இந்த வீட்டில் நானே வயதானவன். நான் போருக்குச் செல்லுகிறேன்.

செ. கணவன்: வயோதிகர் போருக்குப் போவதை விடக் காளையே போருக்குப் போக வேண்டியது. நான் நல்ல பருவமுடையவன். நானே போருக்குச் செல்வேன்.

செ. தந்தை: அப்பா, நீபோகக் கூடாது. உன் மனைவியையும் மகனையும் பார்த்துக்கொள். நான் நோய் நொடியில் விழுந்து இறப்பதைவிட இந்த வயதில் போரில் உயிர்விடத் தயாராக இருக்கிறேன். மேலும் பல இடங்களிற் சண்டை செய்தவன்.

செ. கணவன்: தாங்கள் சொல்வது சரியே. சண்டைக்குப் போய்வரலாம்.

(செல்லம்மாள் தந்தை வாளும் ஈட்டியும் ஏந்திப் போர்க்கோலம் கொண்டு சண்டைக்குச் செல்லல்.)

காட்சி 4

இடம் :—செல்லம்மாள் வீடு.
காலம் :—காலை.
நடிகர்கள் :—செல்லம்மாளும் அவள் கணவனும்.

சே. கணவன்: அடி, செல்லம், நானும் சண்டைக்குப் போகிறேன். என் வாளையும் ஈட்டியையும் எடுத்துவா.

செல்லம்: என் தந்தை சண்டைக்குச் சென்றாரே அவர் என்ன ஆனார்?

சே. கணவன் : அவர் வீர மரணமடைந்தார். எதிரியினுடைய வலிய படையைக் கலக்கி யாவரும் வியக்கும்படி போர்புரிந்தார். அவருடைய போர்த் திறமையை வீரர்கள் எல்லோரும் மெச்சுகின்றனர்.

செல்லம் : நாதா, அவசியம் போங்கள். அரசனுக்கு உதவி செய்யுங்கள். நாட்டைக் காப்பாற்றுங்கள். இதோ, உங்கள் வாளும் ஈட்டியும்.

(செல்லம்மாள் கணவன் போர்க்கோலம் பூண்டு மகனை அணைத்து முத்தமிட்டுப் பிற்காலத்தில் எங்களைப்போல் வீரமகனாக வாழ்வாயாக என்று ஆசிகூறிச் செல்லம்மாளிடம் விடைபெற்றுச் செல்லல்.)

காட்சி 5

இடம் :—செல்லம்மாள் வீடு.
காலம் :—காலை.
நடிகர்கள் :—செல்லமும் அவள் மகனும்.

மகன் : (ஓடோடிவந்து) அம்மா, தெருவில் டண் டண் என்று பறைமுழக்கம் கேட்கிறது. போருக்

குச் சென்ற தந்தையும் வரவில்லை. எனக்கும் போர்செய்ய விருப்பம். என்னை ஆசீர்வதித்து அனுப்பு.

செல்லம்: கண்ணே, வா. புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமா ? உன் தந்தை நேற்றுப்போரில் நம் அரசனுக்கு வெற்றிதந்து வீர மரணமடைந்ததைக்கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். நீ சிறுபிள்ளையாயிற்றே, உனக்குப் போர் செய்யத் தெரியுமா ?

மகன்: மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா அம்மா ? என் மனம் யுத்தத்திலேயே இருக்கிறது. போர்செய்து எதிரிகளைத் துரத்துவேன் அல்லது வீர மரணமடைவேன். விடை கொடு, அம்மா !

செல்லம்மாள் பரந்து கிடந்த மகன் தலைக்கு எண்ணெய் தடவிச் சீவித் தூய வெள்ளுடை விரித்துடுத்திக் கையிலே வேலைக் கொடுத்து வெற்றியோடு திரும்புவாயாக என்று வாழ்த்தி யனுப்பினாள்.

காட்சி 6

இடம் :—அரண்மனை

காலம் —காலை

நடிகர்கள் :—அரசன், மந்திரி, சேனாதிபதி.

சேனாதிபதி: அரசே, நீடூழி வாழ்வாயாக! போரில் வெற்றியடைந்ததற்காக உம்மை வாழ்த்துகிறேன்.

பாண்டியன்: சேனாதிபதி, நீர் சொல்வது வேடிக்கையாக அல்லவா இருக்கிறது. நான் நேரில் போருக்கு வந்திருந்தாலும் உம்மாலும்

உம் வீரர்களாலும் அல்லவோ வெற்றி யடைந்தேன். நாட்டுக்கு உயிர்கொடுத்த வீரர்களுக்கு வீரக்கல் நடுவோம். மற்றும் உம் மனத்திற்குகந்த வீரர்களுக்குச் சன் மானம் செய்வோம்.

சேனதிபதி : வேந்தே, எல்லாம் உம் திருவுளப் படியே. அரசே, உம்மை எக்காலத்திலும் பிறநாட்டார் வெல்லமாட்டார் என்பதை நடந்தபோரால் தெரிந்துகொண்டேன்.

அரசன்: சேனதிபதி, நீர் சொல்வது விளங்க வில்லையே?

சேன: அரசே, நடந்த போரில் ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவர்பின் ஒருவராக மூவர் வந்து போர் செய்தார்கள். மூவரில் மூன்றுவதாக வந்த வீரன் சிறுபையன். வீரர்களுக்குள் வயதில் சிறியவன் அவனே. அவன் நாட்டுக்காக வீர உணர்ச்சியோடு கடும்போர் புரிந்தான். தாய்க்கு ஒரே பிள்ளை. இப்பொழுது அவனைத் தாயினிடம் அனுப்பினேன். இப்படிப்பட்ட குடும்பங் கள் உம் நாட்டில் உள்ள வரை அரசே, உமக்குத் தோல்வி என்பதே கிடையாது.

பாண்டியன்: சேனபதி, அவ்வீரமகனைக் காண என் உள்ளம் அவாவுகின்றது. யாரையேனும் அனுப்பி விரைவில் அழைத்து வரச் சொல் லும்.

(சேனதிபதி வீரமகனை அழைத்துவர ஆள் அனுப்பினன்.)

காட்சி 7

இடம் :—அரண்மனை.

காலம் :—நண்பர்கள்.

நடிகர்கள் —பாண்டியன், மந்திரி, சேனாதிபதி, வீர மகன்.

பாண்டியன்: வீரச் சிறுவனே, என்முன்னே வா!

வீரமகன்: (அரசன் முன்வந்து முழங்காலிட்டு)

அரசே, வாழ்க! வாழ்க!

அரசன்: எழுந்து நில்! உன் வீரத்தையும், உன் குடும்ப வீரத்தையும், உன் நாட்டுப் பற்றையும் கேட்கச் சந்தோஷமானேன். சேனாதிபதி உனக்குத் தகுந்த பரிசு அளிப்பார், பெற்றுச் செல்.

பாண்டியன்: சேனாதிபதி, இவ் வீரச் சிறுவனுக்கு நம் பெயர் தீட்டிய உடைவாள் ஒன்று கொடும்.

மந்திரி: இவ்விளவலுக்கு அவன் ஊரில் உள்ள நன்செய் நிலத்தில் நான்கு வேலி நிலம் கொடுத்து வரி கட்ட வேண்டியதில்லை என்ற ஏற்பாடும் செய்துவிடும்.

வீர இளவலே, வீடு செல்வாயாக!
நீண்டகாலம் வாழ்வாயாக!

(வீரச் சிறுவன் மூவரையும் வணங்கி விடைபெற்று வீடு திரும்புகிறான்.)

பொதுக் கடவுள் வணக்கம்

இம்மை எம் தலைவனாக
  இருப்பதால் தாழ்ச்சி இல்லை.
அம்மையே! அப்பா! எங்கள்
  அருங்கலை நாளும் ஓங்க,
செம்மைநல் வழியில் நின்று
  செப்பருந் தொண்டில், ஓங்க
எம்மையா ளுடைய ஈசா!
  எமக்கு நீ அருளல் வேண்டும்!

எம்மருங் கல்விச் சாலை
  எழிலுற நாளும் ஓங்க,
இம்மகி தலத்தில் எங்கும்
  இருந்திடுஞ் சாலை ஓங்க,
எம்மரு நாடு பன்னாள்
  எண்ணிய எண்ணம் ஓங்க,
இம்பரில் இன்பம் ஓங்க,
  இறைவ! நீ அருளல் வேண்டும்.

மூதுரை

1. நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

2. உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

3. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

4. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நல் மரம்.

5. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

நல்வழி

1. ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

3. ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

4. ஆற்றங் கரையின் மரமும் அரசரிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

5. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியாது
உயிர்விடுகை சால வுறும்.

வெற்றிவேற்கை

1. தேம்படுபனையின் திரள்பழத் தொருவிதை
வானுறவோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
2. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
3. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே.
4. நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
5. எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை வருக என்பர்.
6. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.
7. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.
8. இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே.
9. பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
10. வழியே யேகுக வழியே மீளுக.

தேவாரம்

திருஞானசம்பந்தர்

(1) காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே.

திருநாவுக்கரசர்

(2) மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றவே
ஈச னெந்தை இணையடி நீழலே.

சுந்தரமூர்த்தி

(3) பித்தா பிறைசூடி பெருமா னேயரு ளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
[நல்லூ ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லே னெனலாமே.

திருவாசகம்

மாணிக்கவாசகர்

(4) உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் ; கற்பனவும்
இனி அமையும் ;
குற்றாலத்து அமர்ந்துறையுங் கூத்தா ! உன்
குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக
வேண்டு வனே.

நந்தனர் கீர்த்தனை

பல்லவி

பித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே

அநுபல்லவி

மற்ற மருந்துகள் தின்றாலு முள்ளுக்கு வல்லே வல்லே
ஐயே அடிமை (பித்தந் தெளிய)

சரணங்கள்

பாம்பும்புலியும் மெய்ப் பாடுபட்டுத் தேடி
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்ததிரு மாயனும் வேதனும் பார்த்துக்
களித்த துண்டு
பார்வதியென்றொரு சீமாட்டி யதில் பாதியைத்
தின்ற துண்டு-இன்னம்
பாதியிருக்கு பறையா நீயும்போய்-பாரென்றுத்
தாரந் தாரும் (பித்தந்)

அறப்பளீசுர சதகம்

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவருந்
தருமங்கள் செய்து வரலும்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப் படுதலும்
மங்குத லிலாததன் தந்தைதாய் குருமொழி
மறாதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பக்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையும் சன்மார்க்கமும்

இவை யெல்லாம் உடையவன் புதல்வனும்
அவனையே ஈன்றவன் புண்ணியவானும்
அங்கச விரோதியே சோதியே நீதிசேர்
அரனெம தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுர தேவனே.

அழகுடைய அவயவங்கள்

(1) அழகுமுகம் எதுஎன்றால் அம்மம்மா கூறிடுவேன்!
அழகுமுகம் சிவந்தமுகம் அன்றன்று தெரிவாயே!
அழகில்லாக் கறுத்தமுகம் வெளுத்தமுகம் ஆனாலும்
அழகுமுகம் அதுவேகாண் அருள்வீசும் நகைமுகமே.

(2) அழகியகை எதுஎன்றால் அம்மம்மா கூறிடுவேன்!
அழகியகை செந்நிறக்கை அன்றன்று தெரிவாயே!
அழகியகை யாவருக்கும் அன்புடனே தொண்டுசெயும்
அழகான கையாகும் அறைந்திடுவன் அறிவாயே.

(3) அழகியகால் எதுஎன்றால் அம்மம்மா கூறிடுவேன்!
அழகியகால் நொண்டிக்கால் ஆனாலும் கவலை இல்லை;
அழகுடனே ஒருவர்உறும் அருந்துன்பம் நீக்கிடுங்கால்
அழகுடைய காலாகும்; அதற்கிணை தான் உலகில்
உண்டோ?

அ. கி. ப.

PRINTED AT THE V. R. PRESS, MADRAS—1939.